# திருமுறைப் பயிற்சிக் கழகம்
## சிங்கப்பூர்

# திருமுறைப் பாடத்திட்டம்

6

நிலை ஆறு



வெளியீடு

திருமுறை மாநாட்டு ஏற்பாட்டுக் குழு

சிங்கப்பூர்

2024

"திருமுறைகள் ஒலிக்கட்டும் திருவருள் பெருகட்டும்"

# உள்ளடக்கம்


1. துதிப் பாடல்கள் ........ 7

**1.1 சிவாநந்தமாலை -** சொற்கோவும் ........ 7

1.2 **அகச்சந்தான குரவர் துதி -** அருட்குரவர் ........ 7

1.3 **புறச்சந்தான குரவர் துதி -** ஈராண்டிற் சிவஞானம் ........ 7

2. திருமுறைப் பாடல்கள் ........ 8

**2.1 திருஞானசம்பந்தர் தேவாரம் -** ஒடுங்கும் ........ 8

**2.2 திருஞானசம்பந்தர் தேவாரம் -** மண்ணார் ........ 8

**2.3 திருஞானசம்பந்தர் தேவாரம் -** காலைநன்மாமலர் ........ 8

**2.4 திருஞானசம்பந்தர் தேவாரம் -** விண்ணியல்விமானம் ........ 9

**2.5 திருஞானசம்பந்தர் தேவாரம் –** கற்றாங் கெரியோம்பி ........ 9

**2.6 திருஞானசம்பந்தர் தேவாரம் –** செல்வ நெடுமாடஞ் ........ 9

**2.7 திருஞானசம்பந்தர் தேவாரம் -** ஞாலத் துயர்காழி ........ 10

**2.8 திருஞானசம்பந்தர் தேவாரம் -** பந்தத்தால் ........ 10

**2.9 திருஞானசம்பந்தர் தேவாரம் -** கருத்தன் ........ 10

**2.10 திருஞானசம்பந்தர் தேவாரம் -** நறுநீ ருகுங்காழி ........ 11

**2.11 திருஞானசம்பந்தர் தேவாரம் -** நீறுசேர்வதொர் ........ 11

**2.12 திருஞானசம்பந்தர் தேவாரம் -** செல்வமல்கிய ........ 11

**2.13 திருஞானசம்பந்தர் தேவாரம் -** சதுரம் மறைதான் ........ 12

**2.14 திருஞானசம்பந்தர் தேவாரம் -** காழிந் நகரான் ........ 12

**2.15 திருஞானசம்பந்தர் தேவாரம் -** இன்றுநன்று ........ 12

**2.16 திருஞானசம்பந்தர் தேவாரம் -** கொந்தணி ........ 12

**2.17 திருஞானசம்பந்தர் தேவாரம் -** தொண்டரஞ்சு ........ 13

**2.18 திருஞானசம்பந்தர் தேவாரம் -** வாய்ந்தசெந்நெல் ........ 13

**2.19 திருஞானசம்பந்தர் தேவாரம் -** மானினேர்விழி ........ 13

**2.20 திருஞானசம்பந்தர் தேவாரம் -** எக்கராமமண் ........ 14

**2.21 திருஞானசம்பந்தர் தேவாரம் -** தளிரிள ........ 14

**2.22 திருஞானசம்பந்தர் தேவாரம் -** சிற்றிடை ........ 14

**2.23 திருஞானசம்பந்தர் தேவாரம் -** மருந்தவை ........ 15

**2.24 திருஞானசம்பந்தர் தேவாரம் -** பெருந்தண்மா ........ 15

**2.25 திருஞானசம்பந்தர் தேவாரம் -** திடமலி ........ 15

**2.26 திருஞானசம்பந்தர் தேவாரம் -** தேனமர் ........ 16

**2.27 திருஞானசம்பந்தர் தேவாரம் -** வேத வேள்வியை ........ 16

**2.28 திருஞானசம்பந்தர் தேவாரம் -** கூட லாலவாய் ........ 16

**2.29 திருஞானசம்பந்தர் தேவாரம் -** பரசுபாணியர் ........ 17

**2.30 திருஞானசம்பந்தர் தேவாரம் -** வானமாள்வதற் ........ 17
**2.31 திருஞானசம்பந்தர் தேவாரம் -** உற்றுமை ........ 17
**2.32 திருஞானசம்பந்தர் தேவாரம் -** பருமதில் ........ 17
**2.33 திருஞானசம்பந்தர் தேவாரம் -** யாமாமாநீ ........ 18
**2.34 திருஞானசம்பந்தர் தேவாரம் -** நேரகழாமித ........ 18
**2.35 திருஞானசம்பந்தர் தேவாரம் -** கல்லூர்ப் ........ 18
**2.36 திருஞானசம்பந்தர் தேவாரம் -** அன்புறு ........ 19
**2.37 திருஞானசம்பந்தர் தேவாரம் -** நறும்பொழிற் ........ 19
**2.38 திருநாவுக்கரசர் தேவாரம் -** மெய்யெலாம் ........ 19
**2.39 திருநாவுக்கரசர் தேவாரம் -** மறுத்தானொர் ........ 19
**2.40 திருநாவுக்கரசர் தேவாரம் -** சிவனெனு ........ 20
**2.41 திருநாவுக்கரசர் தேவாரம் -** புதுவிரி ........ 20
**2.42 திருநாவுக்கரசர் தேவாரம் -** பறையி னோசையும் ........ 20
**2.43 திருநாவுக்கரசர் தேவாரம் -** மனத்துள் ........ 21
**2.44 திருநாவுக்கரசர் தேவாரம் -** எண்ணுகேன் ........ 21
**2.45 திருநாவுக்கரசர் தேவாரம் -** ஒருவனையும் ........ 21
**2.46 சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம் -** குரும்பைமுலை ........ 22
**2.47 சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம் -** தண்புனலும் ........ 22
**2.48 சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம் -** தம்மையே ........ 23
**2.49 சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம் -** செறுவி னிற்செழுங் ........ 23
**2.50 சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம் –** பத்தூர்புக் கிரந்து ........ 23
**2.51 சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம் -** பண்மயத்த ........ 24
**2.52 சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம் -** கொடுகு ........ 24
**2.53 சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம் -** முந்தி வானவர் ........ 25
**2.54 சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம் -** மருவார் ........ 25
**2.55 சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம் -** மாட மல்கு ........ 25
**2.56 சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம் -** அந்த ணாளனுன் ........ 26
**2.57 சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம் -** கம்ப மால் ........ 26
**2.58 சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம் -** கரையுங் ........ 27
**2.59 சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம் -** எந்தை ........ 27
**2.60 சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம் -** பொருவ னார்புரி ........ 27
**2.61 சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம் -** செந்நெ லங்கலங் ........ 28
**2.62 சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம் -** கொன்று ........ 28
**2.63 சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம் -** பல்லின் ........ 28
**2.64 சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம் -** தொண்டர் ........ 29
**2.65 சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம் -** கன்னலை ........ 29

**2.66 சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம் -** வடியுடை ....29
**2.67 சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம் -** கூடலை ....30
**2.68 சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம் -** பிழையுளன ....30
**2.69 சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம் -** ஏராரும் ....30
**2.70 சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம் -** எற்றான் ....31
**2.71 சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம் -** நீரேற ....31
**2.72 சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம் -** மீளா அடிமை ....31
**2.73 சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம் -** காரூர் ....32
**2.74 சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம் -** தானெனை ....32
**2.75 சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம் -** ஊழிதொ....32
**2.76 மாணிக்கவாசகர் அருளிய திருவாசகம் -** சீரார் பவளங்கால் ....33
**2.77 சேக்கிழார் அருளிய பெரியபுராணம் -** அன்பரங் கிருப்ப ....33
3. திருமுறைப் பதிகங்கள்....34
**3.01 திருஞானசம்பந்தர் தேவாரம் -** ஓருரு ஆயினை ....34
**3.02 திருஞானசம்பந்தர் தேவாரம் - கள்ளார்ந்த** ....36
**3.03 திருஞானசம்பந்தர் தேவாரம் -** வாழ்க அந்தணர்....37
**3.04 திருநாவுக்கரசர் தேவாரம் -** மாசில் வீணையும் ....39
**3.05 சுந்தரர் தேவாரம் -** மற்றுப் பற்றெனக்கின்றி....42
**3.06 மாணிக்கவாசகர் அருளிய திருவாசகம் -** நமச்சிவாய ....44
**3.07 மாணிக்கவாசகர் அருளிய திருவாசகம் -** பூசுவதும்....46
4. வாழ்த்துப் பாடல்கள் ....50
**4.1 வாழ்த்து -** வையம் நீடுக ....50
**4.2 வாழ்த்து -** மல்குக ....50
5. உரைநடை....51
**5.1 கட்டுரைகள் -** சந்தான குரவர்கள் ....51
**5.2 கட்டுரைகள் -** தமிழின் தெய்வீக தன்மை....56
**5.3 கட்டுரைகள் -** சைவத்தின் ஐம்பெருந்தூண்கள் ....60
**5.4 கட்டுரைகள் –** இணையத்தில் சைவம்....66
**5.5 திருத்தலங்கள் –** திருவையாறு (ஐயாறப்பர் கோவில்) ....68
**5.6 திருத்தலங்கள் –** திருவெண்காடு (சுவேதாரன்யேஸ்வரர் கோவில்) ....71
**5.7 திருத்தலங்கள் –** திருவாவடுதுறை (கோமுக்தீஸ்வரர் கோவில்) ....73
**5.8 நாயன்மார்கள் வரலாறு –** இளையான்குடி மாற நாயனார் ....75
**5.9 நாயன்மார்கள் வரலாறு –** ஏனாதி நாயனார் ....78
**5.10 நாயன்மார்கள் வரலாறு** சண்டேசுர நாயனார் ....81
**5.11 நாயன்மார்கள் வரலாறு –** திருநாளைப் போவார்....84
**5.12 நாயன்மார்கள் வரலாறு –** குங்கிலியக் கலய நாயனார் ....89

**5.13 நாயன்மார்கள் வரலாறு –** பெருமிழலைக் குறும்ப நாயனார் ............................92
**5.14 நாயன்மார்கள் வரலாறு –** குலச்சிறை நாயனார்.................................................93
**5.15 நாயன்மார்கள் வரலாறு –** அப்பாலும் அடிச்சார்ந்தார் .......................................95

# 1. துதிப் பாடல்கள்

## 1.1 **சிவாநந்தமாலை -** சொற்கோவும்

சொற்கோவும் தோணிபுரத் தோன்றலுமென் சுந்தரனும்
சிற்கோல வாதவூர்த் தேசிகரும் - முற்கோலி
வந்தில ரேல் நீறெங்கே மாமறை நூலெங்கே
எந்தைபிரான் அஞ்செழுத் தெங்கே.

- வள்ளலார்

## 1.2 **அகச்சந்தான குரவர் துதி -** அருட்குரவர்

அருட்குரவர் எழிற்கயிலை முழுக்காவல்
நந்திபிரான் அடிகள் போற்றி
தெருட்சிபெறு மனக்கமல சனற்குமார
முனிவனிரு திருத்தாள் போற்றி
இருட்டுமலத் தகல்சத்ய ஞானதரி
சினி சரண இணைகள் போற்றி
மருட்சியுறு பரஞ்சோதி யருஞ்சீல
குருபரங்கால் மலர்கள் போற்றி

## 1.3 **புறச்சந்தான குரவர் துதி -** ஈராண்டிற் சிவஞானம்

ஈராண்டிற் சிவஞானம் பெற்றுயர்ந்த
மெய்கண்டார் இணைத்தாள் போற்றி
நாராண்ட பல்லடியார்க் கருள்புரிந்த
அருணந்தி நற்றாள் போற்றி
நீராண்ட கடந்தைநகர் மறைஞான
சம்பந்தர் நிழற்றாள் போற்றி
சீராண்ட தில்லைநகர் உமாபதியார்
செம்பதுமத் திருத்தாள் போற்றி

# 2. திருமுறைப் பாடல்கள்

## 2.1 திருஞானசம்பந்தர் தேவாரம் - ஒடுங்கும்

தலம்: திருத்தூங்கானைமாடம்

திருமுறை: 1-59-1

**பண்** : பழந்தக்கராகம்

தாளம் : ஆதி

திருச்சிற்றம்பலம்

ஒடுங்கும் பிணிபிறவி கேடென்றிவை யுடைத்தாய வாழ்க்கை யொழியத்தவம்
அடங்கும் மிடங்கருதி நின்றீரெல்லாம் அடிக ளடிநிழற்கீ ழாளாம்வண்ணம்
கிடங்கும் மதிலுஞ் சுலாவியெங்குங் கெழுமனைக டோறு மறையின்னொலி
தொடங்குங் கடந்தைத் தடங்கோயில்சேர் தூங்கானை மாடந் தொழுமின்களே

-திருமுறை1-59-1

திருச்சிற்றம்பலம்

## 2.2 திருஞானசம்பந்தர் தேவாரம் - மண்ணார்

தலம்: திருக்கழுமலம்

திருமுறை: 1-59-11

**பண்** : நட்டபாடை

தாளம் : ஆதி

திருச்சிற்றம்பலம்

மண்ணார் முழவதிரு மாடவீதி வயற்காழி ஞானசம் பந்தனல்ல
பெண்ணா கடத்துப் பெருங்கோயில்சேர் பிறையுரிஞ்சுந் தூங்கானை மாடமேயான்
கண்ணார் கழல்பரவு பாடல்பத்துங் கருத்துணரக் கற்றாருங் கேட்டாரும்போய்
விண்ணோ ருலகத்து மேவிவாழும் விதியதுவே யாகும் வினைமாயுமே.

-திருமுறை1-59-11

திருச்சிற்றம்பலம்

## 2.3 திருஞானசம்பந்தர் தேவாரம் - காலைநன்மாமலர்

தலம்: திருவெங்குரு

திருமுறை: 1-75-1

**பண்** : **குறிஞ்சி**

தாளம் :

திருச்சிற்றம்பலம்

காலைநன்மாமலர் கொண்டடிபரவிக் கைதொழுமாணியைக் கறுத்தவெங்காலன்
ஓலமதிடமுன் னுயிரொடுமாள வுதைத்தவனுமையவள் விருப்பனெம்பெருமான்
மாலைவந்தணுக வோதம்வந்துலவி மறிதிரைசங்கொடு பவளமுனுந்தி
வேலைவந்தணையுஞ் சோலைகள்சூழ்ந்த வெங்குருமேவியுள் வீற்றிருந்தாரே.

-திருமுறை1-75-1

திருச்சிற்றம்பலம்

## 2.4 திருஞானசம்பந்தர் தேவாரம் - விண்ணியல்விமானம்

தலம்: திருவெங்குரு

திருமுறை: 1-75-11

**பண்** : **குறிஞ்சி**

தாளம் :

திருச்சிற்றம்பலம்

விண்ணியல்விமானம் விரும்பியபெருமான் வெங்குருமேவியுள் வீற்றிருந்தாரை
நண்ணியநூலன் ஞானசம்பந்த னவின்றவிவ்வாய்மொழி நலமிகுபத்தும்
பண்ணியல்பாகப் பத்திமையாலே பாடியுமாடியும் பயிலவல்லோர்கள்
விண்ணவர்விமானங் கொடுவரவேறி வியனுலகாண்டுவீற் றிருப்பவர்தாமே.

-திருமுறை1-75-11

திருச்சிற்றம்பலம்

## 2.5 திருஞானசம்பந்தர் தேவாரம் – கற்றாங் கெரியோம்பி

தலம்: கோயில்

திருமுறை: 1-80-1

**பண்** : **குறிஞ்சி**

தாளம் : ஆதி

திருச்சிற்றம்பலம்

கற்றாங் கெரியோம்பிக் கலியை வாராமே
செற்றார் வாழ்தில்லைச் சிற்றம் பலமேய
முற்றா வெண்டிங்கண் முதல்வன் பாதமே
பற்றா நின்றாரைப் பற்றா பாவமே. 1-80-1

திருச்சிற்றம்பலம்

## 2.6 திருஞானசம்பந்தர் தேவாரம் – செல்வ நெடுமாடஞ்

தலம்: கோயில்

திருமுறை: 1-80-5

**பண்** : **குறிஞ்சி**

தாளம் : ஆதி

திருச்சிற்றம்பலம்

செல்வ நெடுமாடஞ் சென்று சேணோங்கிச்
செல்வ மதிதோயச் செல்வ முயர்கின்ற
செல்வர் வாழ்தில்லைச் சிற்றம் பலமேய
செல்வன் கழலேத்துஞ் செல்வஞ் செல்வமே. 1-80-5

திருச்சிற்றம்பலம்

## 2.7 திருஞானசம்பந்தர் தேவாரம் - ஞாலத் துயர்காழி

தலம்: கோயில்

திருமுறை: 1-80-11

**பண் : குறிஞ்சி**

தாளம் : ஆதி

திருச்சிற்றம்பலம்

ஞாலத் துயர்காழி ஞான சம்பந்தன்
சீலத் தார்கொள்கைச் சிற்றம் பலமேய
சூலப் படையானைச் சொன்ன தமிழ்மாலை
கோலத் தாற்பாட வல்லார் நல்லாரே. 1-80-11

திருச்சிற்றம்பலம்

## 2.8 திருஞானசம்பந்தர் தேவாரம் - பந்தத்தால்

தலம்: திருக்கழுமலம்

திருமுறை: 1-126-1

**பண் : வியாழக்குறிஞ்சி**

தாளம் : ஆதி

திருச்சிற்றம்பலம்

பந்தத்தால் வந்தெப்பால் பயின்றுநின்ற வும்பரப்
பாலேசேர்வா யேனோர்கான் பயில்கண முனிவர்களுஞ்
சிந்தித்தே வந்திப்பச் சிலம்பின்மங்கை தன்னொடுஞ்
சேர்வார்நாணா ணீள்கயிலைத் திகழ்தரு பரிசதெலாஞ்
சந்தித்தே யிந்தப்பார் சனங்கணின்று தங்கணாற்
றாமேகாணா வாழ்வாரத் தகவுசெய்த வனதிடங்
கந்தத்தா லெண்டிக்குங் கமழ்ந்திலங்கு சந்தனக்
காடார்பூவார் சீர்மேவுங் கழுமல வளநகரே 1-126-1

திருச்சிற்றம்பலம்

## 2.9 திருஞானசம்பந்தர் தேவாரம் - கருத்தன்

தலம்: திருப்பறியலூர்வீரட்டம்

திருமுறை: 1-134-1

பண் : மேகராகக்குறிஞ்சி

தாளம் : ஆதி

திருச்சிற்றம்பலம்

கருத்தன் கடவுள் கனலேந் தியாடும்
நிருத்தன் சடைமே னிரம்பா மதியன்
திருத்த முடையார் திருப்பறி யலூரில்
விருத்த னெனத்தகும் வீரட்டத் தானே. 1-134-1

திருச்சிற்றம்பலம்

## 2.10 **திருஞானசம்பந்தர் தேவாரம் -** நறுநீ ருகுங்காழி

தலம்: *திருப்பறியலூர்வீரட்டம்*

திருமுறை: 1-134-11

பண் **:** மேகராகக்குறிஞ்சி

தாளம் : ஆதி

திருச்சிற்றம்பலம்

நறுநீ ருகுங்காழி ஞானசம் பந்தன்
வெறிநீர்த் திருப்பறியல் வீரட்டத் தானைப்
பொறிநீ டரவன் புனைபாடல் வல்லார்க்
கறுநீ டவல மறும்பிறப் புத்தானே.1-134-11

திருச்சிற்றம்பலம்

## 2.11 **திருஞானசம்பந்தர் தேவாரம் -** நீறுசேர்வதொர்

தலம்: *திருப்பராய்த்துறை*

திருமுறை: 1-135-1

**பண்** : மேகராகக்குறிஞ்சி

தாளம் : ஆதி

திருச்சிற்றம்பலம்

நீறுசேர்வதொர் மேனியர்நேரிழை
கூறுசேர்வதொர் கோலமாய்ப்
பாறுசேர்தலைக் கையர்பராய்த்துறை
ஆறுசேர்சடை யண்ணலே. 1-135-1

திருச்சிற்றம்பலம்

## 2.12 **திருஞானசம்பந்தர் தேவாரம் -** செல்வமல்கிய

தலம்: *திருப்பராய்த்துறை*

திருமுறை: 1-135-11

**பண்** : மேகராகக்குறிஞ்சி

தாளம் : ஆதி

திருச்சிற்றம்பலம்

செல்வமல்கிய செல்வர்பராய்த்துறைச்
செல்வர்மேற்சிதை யாதன
செல்வன்ஞானசம் பந்தனசெந்தமிழ்
செல்வமாமிவை செப்பவே. 1-135-11

திருச்சிற்றம்பலம்

## 2.13 திருஞானசம்பந்தர் தேவாரம் - சதுரம் மறைதான்

தலம்: திருமறைக்காடு

திருமுறை: 2-37-1

பண் : இந்தளம்

தாளம்: ஆதி

திருச்சிற்றம்பலம்

சதுரம் மறைதான் றுதிசெய் துவணங்கும்
மதுரம் பொழில்சூழ் மறைக்காட் டுறைமைந்தா
இதுநன் கிறைவைத் தருள்செய் கவெனக்குன்
கதவந் திருக்காப்புக் கொள்ளுங் கருத்தாலே. 2-37-1

திருச்சிற்றம்பலம்

## 2.14 திருஞானசம்பந்தர் தேவாரம் - காழிந் நகரான்

தலம்: திருமறைக்காடு

திருமுறை: 2-37-11

பண் : இந்தளம்

தாளம்: ஆதி

திருச்சிற்றம்பலம்

காழிந் நகரான் கலைஞான சம்பந்தன்
வாழிம் மறைக்கா டனைவாய்ந் தறிவித்த
ஏழின் னிசைமாலை யீரைந் திவைவல்லார்
வாழி யுலகோர் தொழவா னடைவாரே. 2-37-11

திருச்சிற்றம்பலம்

## 2.15 திருஞானசம்பந்தர் தேவாரம் - இன்றுநன்று

தலம்: திருக்கோடிகா

திருமுறை: 2-99-1

பண் : நட்டராகம்

தாளம்: ஆதி

திருச்சிற்றம்பலம்

இன்றுநன்று நாளைநன் றென்றுநின்ற விச்சையால்
பொன்றுகின்ற வாழ்க்கையைப் போகவிட்டுப் போதுமின்
மின்றயங்கு சோதியான் வெண்மதி விரிபுனல்
கொன்றைதுன்று சென்னியான் கோடிகாவு சேர்மினே. 2-99-1

திருச்சிற்றம்பலம்

## 2.16 திருஞானசம்பந்தர் தேவாரம் - கொந்தணி

தலம்: திருக்கோடிகா

திருமுறை: 2-99-11

பண் : நட்டராகம்

தாளம்: ஆதி

திருச்சிற்றம்பலம்

கொந்தணி குளிர்பொழிற் கோடிகாவு மேவிய
செந்தழ லுருவனைச் சீர்மிகு திறலுடை
அந்தணர் புகலியு ளாயகேள்வி ஞானசம்
பந்தன தமிழ்வல்லார் பாவமான பாறுமே. 2-99-11

திருச்சிற்றம்பலம்

## 2.17 திருஞானசம்பந்தர் தேவாரம் - தொண்டரஞ்சு

தலம்: திருக்கேதாரம்

திருமுறை: 2-114-1

பண் : செவ்வழி

தாளம்: ஆதி

திருச்சிற்றம்பலம்

தொண்டரஞ்சு களிறும் அடக்கிச் சுரும்பார்மலர்
இண்டைகட்டி வழிபாடு செய்யு மிடமென்பரால்
வண்டுபாட மயிலால மான்கன்று துள்ளவரிக்
கெண்டைபாயச் சுனைநீல மொட்டலருங் கேதாரமே. 2-114-1

திருச்சிற்றம்பலம்

## 2.18 திருஞானசம்பந்தர் தேவாரம் - வாய்ந்தசெந்நெல்

தலம்: திருக்கேதாரம்

திருமுறை: 2-114-11

பண் : செவ்வழி

தாளம்: ஆதி

திருச்சிற்றம்பலம்

வாய்ந்தசெந்நெல் விளைகழனி மல்கும்வயற் காழியான்
ஏய்ந்தநீர்க்கோட் டிமையோர் உறைகின்ற கேதாரத்தை
ஆய்ந்துசொன்ன அருந்தமிழ்கள் பத்தும்மிசை வல்லவர்
வேந்தராகி யுலகாண்டு வீடுகதி பெறுவரே. 2-114-11

திருச்சிற்றம்பலம்

## 2.19 திருஞானசம்பந்தர் தேவாரம் - மானினேர்விழி

தலம்: திருஆலவாய்

திருமுறை: 3-39-1

பண் : கொல்லி

தாளம்: சாபு

திருச்சிற்றம்பலம்

மானினேர்விழி மாதராய்வழு திக்குமாபெருந் தேவிகேள்
பானல்வாயொரு பாலனீங்கிவ னென்றுநீபரி வெய்திடேல்
ஆனைமாமலை யாதியாய இடங்களிற்பல அல்லல்சேர்
ஈனர்கட்கெளி யேனலேன்திரு வாலவாயர னிற்கவே. 3-39-1

திருச்சிற்றம்பலம்

## 2.20 திருஞானசம்பந்தர் தேவாரம் - எக்கராமமண்

தலம்: திருஆலவாய்

திருமுறை: 3-39-11

பண் : கொல்லி

தாளம்: சாபு

திருச்சிற்றம்பலம்

எக்கராமமண் கையருக்கெளி யேனலேன்றிரு வாலவாய்ச்
சொக்கனென்னு ளிருக்கவேதுளங் கும்முடித்தென்னன் முன்னிவை
தக்கசீர்ப்புக லிக்குமன்றமிழ் நாதன்ஞானசம் பந்தன்வாய்
ஒக்கவேயுரை செய்தபத்து முரைப்பவர்க்கிட ரில்லையே. 3-39-11

திருச்சிற்றம்பலம்

## 2.21 திருஞானசம்பந்தர் தேவாரம் - தளிரிள

தலம்: திருநள்ளாறு

திருமுறை: 3-87-1

பண் : சாதாரி

தாளம்:

திருச்சிற்றம்பலம்

தளிரிள வளரொளி தனதெழி றருதிகழ் மலைமகள்
குளிரிள வளரொளி வனமுலை யிணையவை குலவலின்
நளிரிள வளரொளி மருவுநள் ளாறர்தந் நாமமே
மிளிரிள வளரெரி யிடிலிவை பழுதிலை மெய்ம்மையே 3-87-1

திருச்சிற்றம்பலம்

## 2.22 திருஞானசம்பந்தர் தேவாரம் - சிற்றிடை

தலம்: திருநள்ளாறு

திருமுறை: 3-87-11

பண் : சாதாரி

தாளம்:

திருச்சிற்றம்பலம்

சிற்றிடை யரிவைதன் வனமுலை யிணையொடு செறிதரும்
நற்றிற முறுகழு மலநகர் ஞானசம் பந்தன
கொற்றவ னெதிரிடை யெரியினி லிடவிவை கூறிய
சொற்றெரி யொருபது மறிபவர் துயரிலர் தூயரே. 3-87-11
திருச்சிற்றம்பலம்

## 2.23 திருஞானசம்பந்தர் தேவாரம் - மருந்தவை

தலம்: திருநெல்வேலி

திருமுறை: 3-92-1

பண் : சாதாரி

தாளம்: ஆதி

திருச்சிற்றம்பலம்

மருந்தவை மந்திர மறுமைநன் னெறியவை மற்றுமெல்லாம்
அருந்துயர் கெடுமவர் நாமமே சிந்தைசெய் நன்னெஞ்சமே
பொருந்துதண் புறவினிற் கொன்றைபொன் சொரிதரத் துன்றுபைம்பூம்
செருந்திசெம் பொன்மலர் திருநெல்வேலி யுறை செல்வர்தாமே. 3-92-1
திருச்சிற்றம்பலம்

## 2.24 திருஞானசம்பந்தர் தேவாரம் - பெருந்தண்மா

தலம்: திருநெல்வேலி

திருமுறை: 3-92-11

பண் : சாதாரி

தாளம்: ஆதி

திருச்சிற்றம்பலம்

பெருந்தண்மா மலர்மிசை யயனவ னனையவர் பேணுகல்வித்
திருந்துமா மறையவர் திருநெல்வேலி யுறை செல்வர்தம்மைப்
பொருந்துநீர்த் தடமல்கு புகலியுண் ஞானசம் பந்தன்சொன்ன
அருந்தமிழ் மாலைகள் பாடியாடக் கெடு மருவினையே. 3-92-11
திருச்சிற்றம்பலம்

## 2.25 திருஞானசம்பந்தர் தேவாரம் - திடமலி

தலம்: திருச்சிறுகுடி

திருமுறை: 3-97-1

பண் : சாதாரி

தாளம்: ஆதி

திருச்சிற்றம்பலம்

திடமலி மதிளணி சிறுகுடி மேவிய
படமலி யரவுடை யீரே
படமலி யரவுடை யீருமைப் பணிபவர்
அடைவது மமருல கதுவே. 3.97-1
திருச்சிற்றம்பலம்

## 2.26 திருஞானசம்பந்தர் தேவாரம் - தேனமர்

தலம்: திருச்சிறுகுடி

திருமுறை: 3-97-11

பண் : சாதாரி

தாளம்: ஆதி

திருச்சிற்றம்பலம்

தேனமர் பொழிலணி சிறுகுடி மேவிய
மானமர் கரமுடை யீரே
மானமர் கரமுடை யீருமை வாழ்த்திய
ஞானசம் பந்தன தமிழே. 3.97-11

திருச்சிற்றம்பலம்

## 2.27 திருஞானசம்பந்தர் தேவாரம் - வேத வேள்வியை

தலம்: திருஆலவாய்

திருமுறை: 3-108-1

பண் : பழம்பஞ்சுரம்

தாளம்: ரூபகம்

திருச்சிற்றம்பலம்

வேத வேள்வியை நிந்தனை செய்துழல்
ஆத மில்லியமணொடு தேரரை
வாதில் வென்றழிக் கத்திரு வுள்ளமே
பாதி மாதுட னாய பரமனே
ஞால நின்புக ழேமிக வேண்டுந்தென்
ஆல வாயி லுறையுமெம் மாதியே

திருச்சிற்றம்பலம்

## 2.28 திருஞானசம்பந்தர் தேவாரம் - கூட லாலவாய்

தலம்: திருஆலவாய்

திருமுறை: 3-108-11

பண் : பழம்பஞ்சுரம்

தாளம்: ரூபகம்

திருச்சிற்றம்பலம்

கூட லாலவாய்க் கோனை விடைகொண்டு
வாடன் மேனி யமணரை வாட்டிட
மாடக் காழிச்சம் பந்தன் மதித்தவிப்
பாடல் வல்லவர் பாக்கிய வாளரே.

திருச்சிற்றம்பலம்

## 2.29 திருஞானசம்பந்தர் தேவாரம் - பரசுபாணியர்

தலம்: திருப்பல்லவனீச்சரம்

திருமுறை: 3-112-1

பண் : பழம்பஞ்சுரம்

தாளம்: ஆதி

திருச்சிற்றம்பலம்

பரசுபாணியர் பாடல்வீணையர் பட்டினத்துறை பல்லவனீச்சரத்
தரசுபேணி நின்றார் இவர்தன்மை யறிவாரார். 3-112-1

திருச்சிற்றம்பலம்

## 2.30 திருஞானசம்பந்தர் தேவாரம் - வானமாள்வதற்

தலம்: திருப்பல்லவனீச்சரம்

திருமுறை: 3-112-11

பண் : பழம்பஞ்சுரம்

தாளம்: ஆதி

திருச்சிற்றம்பலம்

வானமாள்வதற் கூனமொன்றிலை மாதர்பல்லவ னீச்சரத்தானை
ஞானசம்பந்தன் நற்றமிழ் சொல்லவல்லவர் நல்லவரே. 3-112-11

திருச்சிற்றம்பலம்

## 2.31 திருஞானசம்பந்தர் தேவாரம் - உற்றுமை

தலம்: திருக்கழுமலம்

திருமுறை: 3-113-1

பண் : பழம்பஞ்சுரம்

தாளம்: ஆதி

திருச்சிற்றம்பலம்

உற்றுமை சேர்வது மெய்யினையே உணர்வது நின்னருண் மெய்யினையே
கற்றவர் காய்வது காமனையே கனல்விழி காய்வது காமனையே
அற்ற மறைப்பது முன்பணியே அமரர்கள் செய்வது முன்பணியே
பெற்று முகந்தது கந்தனையே பிரம புரத்தை யுகந்தனையே. 3-113-1

திருச்சிற்றம்பலம்

## 2.32 திருஞானசம்பந்தர் தேவாரம் - பருமதில்

தலம்: திருக்கழுமலம்

திருமுறை: 3-113-12

பண் : பழம்பஞ்சுரம்

தாளம்: ஆதி

திருச்சிற்றம்பலம்

பருமதில் மதுரைமன் னவையெதிரே பதிகம தெழுதிலை யவையெதிரே
வருநதி யிடைமிசை வருகரனே வசையொடு மலர்கெட வருகரனே
கருதலி லிசைமுர றருமருளே கழுமல மமரிறை தருமருளே
மருவிய தமிழ்விர கனமொழியே வல்லவர் தம்மிடர் திடமொழியே. 3-113-12

திருச்சிற்றம்பலம்

## 2.33 திருஞானசம்பந்தர் தேவாரம் - யாமாமாநீ

தலம்: சீகாழி

திருமுறை: 3-117-1

பண் : கௌசிகம்

தாளம்: ஆதி

திருச்சிற்றம்பலம்

யாமாமாநீ யாமாமா யாழீகாமா காணாகா
காணாகாமா காழீயா மாமாயாநீ மாமாயா

திருச்சிற்றம்பலம்

## 2.34 திருஞானசம்பந்தர் தேவாரம் - நேரகழாமித

தலம்: சீகாழி

திருமுறை: 3-117-11

பண் : கௌசிகம்

தாளம்: ஆதி

திருச்சிற்றம்பலம்

நேரகழாமித யாசழிதா யேனனியேனனி ளாயுழிகா
காழியுளானின யேனினயே தாழிசயாதமி ழாகரனே

திருச்சிற்றம்பலம்

## 2.35 திருஞானசம்பந்தர் தேவாரம் - கல்லூர்ப்

தலம்: திருநல்லூர்ப் பெருமணம்

திருமுறை: 3-125-1

பண் : அந்தாளிக் குறிஞ்சி

தாளம்: ரூபகம்

திருச்சிற்றம்பலம்

கல்லூர்ப் பெருமணம் வேண்டா கழுமலம்
பல்லூர்ப் பெருமணம் பாட்டுமெய் யாய்த்தில
சொல்லூர்ப் பெருமணம் சூடல ரேதொண்டர்
நல்லூர்ப் பெருமண மேயநம் பானே 3-125-1

திருச்சிற்றம்பலம்

## 2.36 திருஞானசம்பந்தர் தேவாரம் - அன்புறு

தலம்: திருநல்லூர்ப் பெருமணம்

திருமுறை: 3-125-3

பண் : அந்தாளிக் குறிஞ்சி

தாளம்: ரூபகம்

திருச்சிற்றம்பலம்

அன்புறு சிந்தைய ராகி யடியவர்
நன்புறு நல்லூர்ப் பெருமண மேவிநின்
றின்புறு மெந்தை யிணையடி யேத்துவார்
துன்புறு வாரல்லர் தொண்டுசெய் வாரே. 3-125-3

திருச்சிற்றம்பலம்

## 2.37 திருஞானசம்பந்தர் தேவாரம் - நறும்பொழிற்

தலம்: திருநல்லூர்ப் பெருமணம்

திருமுறை: 3-125-11

பண் : அந்தாளிக் குறிஞ்சி

தாளம்: ரூபகம்

திருச்சிற்றம்பலம்

நறும்பொழிற் காழியுண் ஞானசம் பந்தன்
பெறும்பத நல்லூர்ப் பெருமணத் தானை
உறும்பொரு ளாற்சொன்ன வொண்டமிழ் வல்லார்க்
கறும்பழி பாவ மவல மிலரே 3-125-11

திருச்சிற்றம்பலம்

## 2.38 திருநாவுக்கரசர் தேவாரம் - மெய்யெலாம்

தலம்: திருவாரூர்

திருமுறை: 4-5-1

பண் : காந்தாரம்

தாளம்: ரூபகம்

திருச்சிற்றம்பலம்

மெய்யெலாம் வெண்ணீறு சண்ணித்த மேனியான் தாள்தொ ழாதே
உய்யலா மென்றெண்ணி யுறிதூக்கி யுழிதந்தென் னுள்ளம் விட்டுக்
கொய்யுலா மலர்ச்சோலைக் குயில்கூவ மயிலாலு மாரூ ரரைக்
கையினாற் றொழா தொழிந்து கனியிருக்கக் காய்கவர்ந்த கள்வனேனே 4-5-1

திருச்சிற்றம்பலம்

## 2.39 திருநாவுக்கரசர் தேவாரம் - மறுத்தானொர்

தலம்: திருவாரூர்

திருமுறை: 4-5-10

பண் : காந்தாரம்

தாளம்: ரூபகம்

திருச்சிற்றம்பலம்

மறுத்தானொர் வல்லரக்க னீரைந்து முடியினொடு தோளுந் தாளும்
இறுத்தானையெழின் முளரித்த விசின்மிசையி ருந்தான்றன் தலையி லொன்றை
அறுத்தானை யாரூரி லம்மானை யாலால முண்டு கண்டம்
கறுத்தானைக் கருதாதே கரும்பிருக்க இரும்புகடித் தெய்த்தவாறே 4-5-10

திருச்சிற்றம்பலம்

## 2.40 திருநாவுக்கரசர் தேவாரம் - சிவனெனு

தலம்: பொது

திருமுறை: 4-8-1

பண் : பியந்தைக் காந்தாரம்

தாளம்: திரிபுடை

திருச்சிற்றம்பலம்

சிவனெனு மோசை யல்ல தறையோ வுலகிற் றிருநின்ற செம்மை யுளதே
அவனுமொ ரைய முண்ணி யதளாடை யாவ ததன்மேலொ ராட லரவம்
கவணள வுள்ள வுண்கு கரிகாடு கோயில் கலனாவ தோடு கருதில்
அவனது பெற்றி கண்டு மவனீர்மை கண்டு மகநேர்வர் தேவ ரவரே. 4-8-1

திருச்சிற்றம்பலம்

## 2.41 திருநாவுக்கரசர் தேவாரம் - புதுவிரி

தலம்: பொது

திருமுறை: 4-8-10

பண் : பியந்தைக் காந்தாரம்

தாளம்: திரிபுடை

திருச்சிற்றம்பலம்

புதுவிரி பொன்செ யோலை யொருகா தொர்காது சுரிசங்க நின்று புரள
விதிவிதி வேத கீத மொருபாடு மோத மொருபாடு மெல்ல நகுமால்
மதுவிரி கொன்றை துன்று சடைபாக மாதர் குழல்பாகமாக வருவர்
இதுவிவர் வண்ண வண்ண மிவள்வண்ண வண்ண
மெழில்வண்ண வண்ண மியல்பே. 4-5-1

திருச்சிற்றம்பலம்

## 2.42 திருநாவுக்கரசர் தேவாரம் - பறையி னோசையும்

தலம்: திருவிடைமருதூர்

திருமுறை: 5-15-1

ராகம்: நாதநாமக்கிரியா

தாளம்: ஆதி

திருக்குறுந்தொகை

திருச்சிற்றம்பலம்

பறையி னோசையும் பாடலி னோசையும்
மறையி னோசையும் வைகு மயலெலாம்
இறைவ னெங்கள் பிரானிடை மருதினில்
உறையு மீசனை யுள்குமெ னுள்ளமே.

திருச்சிற்றம்பலம்

## 2.43 திருநாவுக்கரசர் தேவாரம் - மனத்துள்

தலம்: திருவிடைமருதூர்

திருமுறை: 5-15-1

ராகம்: நாதநாமக்கிரியா

தாளம்: ஆதி

திருக்குறுந்தொகை

திருச்சிற்றம்பலம்

மனத்துள் மாயனை மாசறு சோதியை
புனிற்றுப் பிள்ளைவெள் ளைம்மதி சூடியை
எனக்குத் தாயையெம் மானிடை மருதனை
நினைத்திட் டூறி நிறைந்ததெ னுள்ளமே.

திருச்சிற்றம்பலம்

## 2.44 திருநாவுக்கரசர் தேவாரம் - எண்ணுகேன்

தலம்: திருப்புகலூர்

திருமுறை: 6-99-1

ராகம்: அரிகாம்போதி

தாளம்: ஆதி

திருச்சிற்றம்பலம்

எண்ணுகேன் என்சொல்லி எண்ணு கேனோ
எம்பெருமான் திருவடியே எண்ணி னல்லால்
கண்ணிலேன் மற்றோர் களைகண் இல்லேன்
கழலடியே கைதொழுது காணின் அல்லால்
ஒண்ணுளே ஒன்பது வாசல் வைத்தாய்
ஒக்க அடைக்கும்போ துணர மாட்டேன்
புண்ணியா உன்னடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணி யனே

திருச்சிற்றம்பலம்

## 2.45 திருநாவுக்கரசர் தேவாரம் - ஒருவனையும்

தலம்: பொது

திருமுறை: 6-99-10

ராகம்: அரிகாம்போதி

தாளம்: ஆதி

திருச்சிற்றம்பலம்

ஒருவனையும் அல்லா துணரா துள்ளம்
உணர்ச்சித் தடுமாற்றத் துள்ளே நின்ற
இருவரையும் மூவரையும் என்மேல் ஏவி
இல்லாத தரவறுத்தாய்க் கில்லேன் ஏலக்
கருவரைசூழ் கானல் இலங்கை வேந்தன்
கடுந்தேர்மீ தோடாமைக் காலாற் செற்ற
பொருவரையாய் உன்னடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணி யனே

திருச்சிற்றம்பலம்

## 2.46 சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம் - குரும்பைமுலை

தலம்: திருக்கலயநல்லூர்

திருமுறை: 7-16-1

பண்: தக்கராகம்

தாளம்: ஜம்பை

திருச்சிற்றம்பலம்

குரும்பைமுலை மலர்க்குழலி கொண்டதவங் கண்டு
குறிப்பினொடுஞ் சென்றவள்தன் குணத்தினைநன் கறிந்து
விரும்பும்வரங் கொடுத்தவளை வேட்டருளிச் செய்த
விண்ணவர்கோன் கண்ணுதலோன் மேவியஊர் வினவில்
அரும்பருகே சுரும்பருவ அறுபதம்பண் பாட
அணிமயில்கள் நடமாடும் அணிபொழில்சூழ் அயலின்
கரும்பருகே கருங்குவளை கண்வளருங் கழனிக்
கமலங்கள் முகமலருங் கலயநல்லூர் காணே 7-16-1

திருச்சிற்றம்பலம்

## 2.47 சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம் - தண்புனலும்

தலம்: திருக்கலயநல்லூர்

திருமுறை: 7-16-11

பண்: தக்கராகம்

தாளம்: ஜம்பை

திருச்சிற்றம்பலம்

தண்புனலும் வெண்மதியும் தாங்கியசெஞ் சடையன்
தாமரையோன் தலைகலனாக் காமரமுன் பாடி
உண்பலிகொண் டுழல்பரமன் உறையும்ஊர் நிறைநீர்
ஒழுகுபுனல் அரிசிலின்தென் கலயநல்லூர் அதனை
நண்புடைய நன்சடையன் இசைஞானி சிறுவன்

நாவலர்கோன் ஆரூரன் நாவின்நயந் துரைசெய்
பண்பயிலும் பத்தும் இவை பத்திசெய்து பாட
வல்லவர்கள் அல்லலொடு பாவம்இலர் தாமே 7-16-11
திருச்சிற்றம்பலம்

## 2.48 சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம் - தம்மையே

தலம்: திருப்புகலூர்

திருமுறை: 7-34-1

பண்: கொல்லி

தாளம்: ரூபகம்

திருச்சிற்றம்பலம்
தம்மை யேபுகழ்ந் திச்சை பேசினுஞ்
சார்கி னுந்தொண்டர் தருகிலாப்
பொய்ம்மை யாளரைப் பாடா தேயெந்தை
புகலூர் பாடுமின் புலவீர்காள்
இம்மை யேதருஞ் சோறுங் கூறையும்
ஏத்த லாம்இடர் கெடலுமாம்
அம்மை யேசிவ லோகம் ஆள்வதற்
கியாதும் ஐயுற வில்லையே 7-34-1
திருச்சிற்றம்பலம்

## 2.49 சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம் - செறுவி னிற்செழுங்

தலம்: திருப்புகலூர்

திருமுறை: 7-34-11

பண்: கொல்லி

தாளம்: ரூபகம்

திருச்சிற்றம்பலம்
செறுவி னிற்செழுங் கமலம் ஓங்குதென்
புகலூர் மேவிய செல்வனை
நறவம் பூம்பொழில் நாவ லூரன்
வனப்பகை யப்பன் சடையன்றன்
சிறுவன் வன்றொண்டன் ஊரன் பாடிய
பாடல் பத்திவை வல்லவர்
அறவ னாரடி சென்று சேர்வதற்
கியாதும் ஐயுற வில்லையே 7-34-11
திருச்சிற்றம்பலம்

## 2.50 சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம் – பத்தூர்புக் கிரந்து

தலம்: திருநாகைக்காரோணம்

திருமுறை: 7-46-1

பண்: கொல்லிக் கௌவாணம்

தாளம்: ஜம்பை

திருச்சிற்றம்பலம்

பத்தூர்புக் கிரந்துண்டு பலபதிகம் பாடிப்
பாவையரைக் கிறிபேசிப் படிறாடித் திரிவீர்
செத்தார்தம் எலும்பணிந்து சேவேறித் திரிவீர்
செல்வத்தை மறைத்துவைத்தீர் எனக்கொருநாள் இரங்கீர்
முத்தாரம் இலங்கிமிளிர் மணிவயிரக் கோவை
யவைபூணத் தந்தருளி மெய்க்கினிதா நாறும்
கத்தூரி கமழ்சாந்து பணித்தருள வேண்டும்
கடல்நாகைக் காரோண மேவியிருந் தீரே

திருச்சிற்றம்பலம்

## 2.51 சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம் - பண்மயத்த

தலம்: திருநாகைக்காரோணம்

திருமுறை: 7-46-11

பண்: கொல்லிக் கௌவாணம்

தாளம்: ஜம்பை

திருச்சிற்றம்பலம்

பண்மயத்த மொழிப்பரவை சங்கிலிக்கும் எனக்கும்
பற்றாய பெருமானே மற்றாரை யுடையேன்
உண்மயத்த உமக்கடியேன் குறைதீர்க்க வேண்டும்
ஒளிமுத்தம் பூணாரம் ஒண்பட்டும் பூவும்
கண்மயத்த கத்தூரி கமழ்சாந்தும் வேண்டுங்
கடல்நாகைக் காரோண மேவியிருந் தீரென்
றண்மயத்தால் அணிநாவல் ஆரூரன் சொன்ன
அருந்தமிழ்கள் இவைவல்லார் அமருலகாள் பவரே7-46-11

திருச்சிற்றம்பலம்

## 2.52 சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம் - கொடுகு

தலம்: திருமுருகன்பூண்டி

திருமுறை: 7-49-1

பண்: பழம் பஞ்சுரம்

தாளம்: சாபு

திருச்சிற்றம்பலம்

கொடுகு வெஞ்சிலை வடுக வேடுவர்
விரவ லாமைசொல்லித்
திடுகு மொட்டெனக் குத்திக் கூறைகொண்
டாற லைக்குமிடம்
முடுகு நாறிய வடுகர் வாழ்முரு
கன்பூண்டி மாநகர்வாய்
இடுகு நுண்ணிடை மங்கை தன்னொடும்

எத்துக் கிங்கிருந் தீர்எம்பி ரானீரே

திருச்சிற்றம்பலம்

## 2.53 சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம் - முந்தி வானவர்

தலம்: திருமுருகன்பூண்டி

திருமுறை: 7-49-10

பண்: பழம் பஞ்சுரம்

தாளம்: சாபு

திருச்சிற்றம்பலம்

முந்தி வானவர் தாந்தொ ழும்முரு
கன்பூண்டி மாநகர்வாய்ப்
பந்த ணைவிரற் பாவை தன்னையொர்
பாகம் வைத்தவனைச்
சிந்தை யிற்சிவ தொண்ட னூரன்
உரைத்தன பத்துங்கொண்
டெந்தம் மடிகளை ஏத்து வார்இட
ரொன்றுந் தாமிலரே

திருச்சிற்றம்பலம்

## 2.54 சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம் - மருவார்

தலம்: திருக்கடவூர் மயானம்

திருமுறை: 7-53-1

பண்: பழம் பஞ்சுரம்

தாளம்: ஆதி

திருச்சிற்றம்பலம்

மருவார் கொன்றை மதிசூடி
மாணிக் கத்தின் மலைபோல
வருவார் விடைமேல் மாதோடு
மகிழ்ந்து பூதப் படைசூழத்
திருமால் பிரமன் இந்திரற்குந்
தேவர் நாகர் தானவர்க்கும்
பெருமான் கடவூர் மயானத்துப்
பெரிய பெருமா னடிகளே 7-53-1

திருச்சிற்றம்பலம்

## 2.55 சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம் - மாட மல்கு

தலம்: திருக்கடவூர் மயானம்

திருமுறை: 7-53-10

பண்: பழம் பஞ்சுரம்

தாளம்: ஆதி

திருச்சிற்றம்பலம்

மாட மல்கு கடவூரின்
   மறையோர் ஏத்து மயானத்துப்
பீடை தீர அடியாருக்
   கருளும் பெருமா னடிகள்சீர்
நாடி நாவ லாரூரன்
   நம்பி சொன்ன நற்றமிழ்கள்
பாடு மடியார் கேட்பார்மேற்
   பாவ மான பறையுமே 7-53-10

திருச்சிற்றம்பலம்

## 2.56 சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம் - அந்த ணாளனுன்

தலம்: திருப்புன்கூர்

திருமுறை: 7-55-1

பண்: தக்கேசி

தாளம்: ஆதி

திருச்சிற்றம்பலம்

அந்த ணாளனுன் னடைக்கலம் புகுத
   அவனைக் காப்பது காரண மாக
வந்த காலன்றன் ஆருயி ரதனை
   வவ்வி னாய்க்குன்றன் வன்மைகண் டடியேன்
எந்தை நீயெனை நமன்தமர் நலியில்
   இவன்மற் றென்னடி யானென விலக்கும்
சிந்தையால் வந்துன் திருவடி யடைந்தேன்
   செழும்பொ ழில்திருப் புன்கூரு ளானே

திருச்சிற்றம்பலம்

## 2.57 சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம் - கம்ப மால்

தலம்: திருப்புன்கூர்

திருமுறை: 7-55-10

பண்: தக்கேசி

தாளம்: ஆதி

திருச்சிற்றம்பலம்

கம்ப மால்களிற் றின்னுரி யானைக்
   காமற் காய்ந்ததோர் கண்ணுடை யானைச்
செம்பொ னேயொக்குந் திருவுரு வானைச்
   செழும்பொ ழில்திருப் புன்கூரு ளானை
உம்ப ராளியை உமையவள் கோனை
   ஊரன் வன்றொண்டன் உள்ளத் தாலுகந்
தன்பி னாற்சொன்ன அருந்தமி ழைந்தோ
   டைந்தும் வல்லவர் அருவினை யிலரே

திருச்சிற்றம்பலம்

## 2.58 சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம் - கரையுங்

தலம்: திருவாரூர்

திருமுறை: 7-73-1

பண்: காந்தாரம்

தாளம்:

திருச்சிற்றம்பலம்

கரையுங் கடலும் மலையுங்
காலையும் மாலையும் எல்லாம்
உரையில் விரவி வருவான்
ஒருவன் உருத்திர லோகன்
வரையின் மடமகள் கேள்வன்
வானவர் தானவர்க் கெல்லாம்
அரையன் இருப்பதும் ஆரூர் அவர்
எம்மையும் ஆள்வரோ கேளீர்

திருச்சிற்றம்பலம்

## 2.59 சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம் - எந்தை

தலம்: திருவாரூர்

திருமுறை: 7-73-10

பண்: காந்தாரம்

தாளம்:

திருச்சிற்றம்பலம்

எந்தை இருப்பதும் ஆரூர் அவர்
எம்மையும் ஆள்வரோ என்று
சிந்தை செயுந்திறம் வல்லான்
திருமரு வுந்திரள் தோளன்
மந்த முழவம் இயம்பும்
வளவயல் நாவல்ஆ ரூரன்
சந்தம் இசையொடும் வல்லார்
தாம்புகழ் எய்துவர் தாமே

திருச்சிற்றம்பலம்

## 2.60 சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம் - பொருவ னார்புரி

தலம்: திருவாஞ்சியம்

திருமுறை: 7-76-1

பண்: பியந்தைக் காந்தாரம்

தாளம்: ஆதி

திருச்சிற்றம்பலம்

பொருவ னார்புரி நூலர்
புணர்முலை உமையவ ளோடு
மருவ னார்மரு வார்பால்

வருவதும் இல்லைநம் மடிகள்
திருவ னார்பணிந் தேத்துந்
திகழ்திரு வாஞ்சியத் துறையும்
ஒருவனார் அடி யாரை
ஊழ்வினை நலியஒட் டாரே
திருச்சிற்றம்பலம்

## 2.61 சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம் - செந்நெ லங்கலங்

தலம்: திருவாஞ்சியம்

திருமுறை: 7-76-10

பண்: பியந்தைக் காந்தாரம்

தாளம்: ஆதி

திருச்சிற்றம்பலம்
செந்நெ லங்கலங் கழனித்
திகழ்திரு வாஞ்சியத் துறையு
மின்ன லங்கலஞ் சடையெம்
மிறைவன தறைகழல் பரவும்
பொன்ன லங்கல்நன் மாடப்
பொழிலணி நாவல்ஆ ரூரன்
பன்ன லங்கனன் மாலை
பாடுமின் பத்தரு ளீரே
திருச்சிற்றம்பலம்

## 2.62 சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம் - கொன்று

தலம்: திருக்கழுக்குன்றம்

திருமுறை: 7-81-1

பண்: நட்டபாடை

தாளம்: ஆதி

திருச்சிற்றம்பலம்
கொன்று செய்த கொடுமை யாற்பல சொல்லவே
நின்ற பாவ வினைகள் தாம்பல நீங்கவே
சென்று சென்று தொழுமின் தேவர் பிரானிடம்
கன்றி னோடு பிடிசூழ் தண்கழுக் குன்றமே.
திருச்சிற்றம்பலம்

## 2.63 சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம் - பல்லின்

தலம்: திருக்கழுக்குன்றம்

திருமுறை: 7-81-10

பண்: நட்டபாடை

தாளம்: ஆதி

திருச்சிற்றம்பலம்
பல்லின் வெள்ளைத் தலையன் றான்பயி லும்மிடம்

கல்லின் வெள்ளை அருவித் தண்கழுக் குன்றினை
மல்லின் மல்கு திரள்தோள் ஊரன் வனப்பினால்
சொல்லல் சொல்லித் தொழுவா ரைத்தொழுமின்களே
திருச்சிற்றம்பலம்

## 2.64 சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம் - தொண்டர்

தலம்: திருக்கானப்பேர்

திருமுறை: 7-84-1

பண்: புறநீர்மை

தாளம்: ஆதி

திருச்சிற்றம்பலம்
தொண்டர் அடித்தொழலும் சோதி இளம்பிறையும்
சூதன மென்முலையாள் பாகமும் ஆகிவரும்
புண்டரிகப் பரிசாம் மேனியும் வானவர்கள்
பூச லிடக்கடல்நஞ் சுண்ட கருத்தமரும்
கொண்ட லெனத்திகழுங் கண்டமு மெண்டோளுங்
கோல நறுஞ்சடைமேல் வண்ணமுங் கண்குளிரக்
கண்டு தொழப்பெறுவ தென்றுகொ லோஅடியேன்
கார்வயல் சூழ்கானப் பேருறை காளையையே
திருச்சிற்றம்பலம்

## 2.65 சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம் - கன்னலை

தலம்: திருக்கானப்பேர்

திருமுறை: 7-84-10

பண்: புறநீர்மை

தாளம்: ஆதி

திருச்சிற்றம்பலம்

கன்னலை இன்னமுதைக் கார்வயல் சூழ்கானப்
பேருறை காளையைஒண் சீருறை தண்டமிழால்
உன்னி மனத்தயரா உள்ளுரு கிப்பரவும்
ஒண்பொழில் நாவலர்கோ னாகிய ஆரூரன்
பன்னும் இசைக்கிளவி பத்திவை பாடவல்லார்
பத்தர் குணத்தினராய் எத்திசை யும்புகழ
மன்னி இருப்பவர்கள் வானின் இழிந்திடினும்
மண்டல நாயகராய் வாழ்வது நிச்சயமே
திருச்சிற்றம்பலம்

## 2.66 சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம் - வடியுடை

தலம்: திருக்கூடலையாற்றூர்

திருமுறை: 7-85-1

பண்: புறநீர்மை

தாளம்: மிஸ்ரசாபு

திருச்சிற்றம்பலம்

வடியுடை மழுவேந்தி மதகரியுரி போர்த்துப்
பொடியணி திருமேனிப் புரிகுழ லுமையோடும்
கொடியணி நெடுமாடக் கூடலை யாற்றூரில்
அடிகள்இவ் வழிபோந்த அதிசயம் அறியேனே

திருச்சிற்றம்பலம்

## 2.67 சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம் - கூடலை

தலம்: திருக்கூடலையாற்றூர்

திருமுறை: 7-85-10

பண்: புறநீர்மை

தாளம்: மிஸ்ரசாபு

திருச்சிற்றம்பலம்

கூடலை யாற்றூரிற் கொடியிடை யவளோடும்
ஆட லுகந்தானை அதிசயம் இதுவென்று
நாடிய இன்றமிழால் நாவல வூரன்சொல்
பாடல்கள் பத்தும்வல்லார் தம்வினை பற்றறுமே

திருச்சிற்றம்பலம்

## 2.68 சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம் - பிழையுளன

தலம்: திருவெண்பாக்கம்

திருமுறை: 7-89-1

பண்: *சீகாமரம்*

தாளம்: ரூபகம்

திருச்சிற்றம்பலம்

பிழையுளன பொறுத்திடுவர்
என்றடியேன் பிழைத்தக்கால்
பழியதனைப் பாராதே
படலம்என்கண் மறைப்பித்தாய்
குழைவிரவு வடிகாதா
கோயிலுளா யேஎன்ன
உழையுடையான் உள்ளிருந்
துளோம்போகீர் என்றானே

திருச்சிற்றம்பலம்

## 2.69 சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம் - ஏராரும்

தலம்: திருவெண்பாக்கம்

திருமுறை: 7-89-11

பண்: *சீகாமரம்*

தாளம்: ரூபகம்

திருச்சிற்றம்பலம்

ஏராரும் பொழில்நிலவு
வெண்பாக்கம் இடங்கொண்ட
காராரும் மிடற்றானைக்
காதலித்திட் டன்பினொடும்
சீராருந் திருவாரூர்ச்
சிவன்பேர்சென் னியில்வைத்த
ஆரூரன் தமிழ்வல்லார்க்
கடையாவல் வினைதானே

திருச்சிற்றம்பலம்

## 2.70 சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம் - எற்றான்

தலம்: திருப்புக்கொளியூர் அவினாசி

திருமுறை: 7-92-1

பண்: குறிஞ்சி

தாளம்: திரிபுடை

திருச்சிற்றம்பலம்

எற்றான் மறக்கேன் எழுமைக்கும் எம்பெரு மானையே
உற்றாய்என் றுன்னையே உள்குகின்றேன் உணர்ந் துள்ளத்தால்
புற்றா டரவா புக்கொளி யூர்அவி னாசியே
பற்றாக வாழ்வேன் பசுபதி யேபர மேட்டியே

திருச்சிற்றம்பலம்

## 2.71 சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம் - நீரேற

தலம்: திருப்புக்கொளியூர் அவினாசி

திருமுறை: 7-92-10

பண்: குறிஞ்சி

தாளம்: திரிபுடை

திருச்சிற்றம்பலம்

நீரேற ஏறு நிமிர்புன்சடை நின்மல மூர்த்தியைப்
போரேற தேறியைப் புக்கொளியூர்அவி னாசியைக்
காரேறு கண்டனைத் தொண்டன்ஆரூரன் கருதிய
சீரேறு பாடல்கள் செப்பவல் லார்க்கில்லை துன்பமே

திருச்சிற்றம்பலம்

## 2.72 சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம் - மீளா அடிமை

தலம்: திருவாரூர்

திருமுறை: 7-95-1

பண்: செந்துருத்தி

தாளம்: ஆதி

திருச்சிற்றம்பலம்

மீளா அடிமை உமக்கே ஆளாய்ப் பிறரை வேண்டாதே
மூளாத் தீப்போல் உள்ளே கனன்று முகத்தால் மிகவாடி
ஆளாய் இருக்கும் அடியார் தங்கள் அல்லல் சொன்னக்கால்
வாளாங் கிருப்பீர் திருவா ரூரீர் வாழ்ந்து போதீரே

திருச்சிற்றம்பலம்

## 2.73 சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம் - காரூர்

தலம்: திருவாரூர்

திருமுறை: 7-95-11

பண்: செந்துருத்தி

தாளம்: ஆதி

திருச்சிற்றம்பலம்

காரூர் கண்டத் தெண்டோள் முக்கண் கலைகள் பலவாகி
ஆரூர்த் திருமூ லட்டா னத்தே அடிப்பேர் ஆரூரன்
பாரூர் அறிய என்கண் கொண்டீர் நீரே பழிப்பட்டீர்
வாரூர் முலையாள் பாகங் கொண்டீர் வாழ்ந்து போதீரே

திருச்சிற்றம்பலம்

## 2.74 சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம் - தானெனை

தலம்: திருநொடித்தான் மலை

திருமுறை: 7-100-1

பண்: பஞ்சமம்

தாளம்: ரூபகம்

திருச்சிற்றம்பலம்

தானெனை முன்படைத்தான் அத
றிந்துதன் பொன்னடிக்கே
நானென பாடலந்தோ நாயி
னேனைப் பொருட்படுத்து
வானெனைவந் தெதிர்கொள்ள மத்த
யானை அருள்புரிந்து
ஊனுயிர் வேறுசெய்தான் நொடித்
தான்மலை உத்தமனே

திருச்சிற்றம்பலம்

## 2.75 சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம் - ஊழிதொ

தலம்: திருநொடித்தான் மலை

திருமுறை: 7-100-10

பண்: பஞ்சமம்

தாளம்: ரூபகம்

திருச்சிற்றம்பலம்

ஊழிதொ றூழிமுற்றும் உயர்
பொன்நொடித் தான்மலையைச்
சூழிசை யின்கரும்பின் சுவை
நாவல ஊரன்சொன்ன
ஏழிசை இன்றமிழால் இசைந்
தேத்திய பத்தினையும்
ஆழி கடலரையா அஞ்சை
யப்பர்க் கறிவிப்பதே

திருச்சிற்றம்பலம்

## 2.76 மாணிக்கவாசகர் அருளிய திருவாசகம் - சீரார் பவளங்கால்

தலம்: கோயில்

திருமுறை: 8-16-1

ராகம்: மோகனம்

தாளம்: ஆதி

திருவாசகம்-திருப்பொன்னூசல்

திருச்சிற்றம்பலம்

சீரார் பவளங்கால் முத்தங் கயிறாக
ஏராரும் பொற்பலகை ஏறி இனிதமர்ந்து
நாரா யணன் அறியா நாண்மலர்த்தாள் நாயடியேற்
கூராகத் தந்தருளும் உத்தர கோசமங்கை
ஆரா அமுதின் அருட்டா ளிணைபாடிப்
போரார்வேற் கண்மடவீர் பொன்னூச லாடாமோ

திருச்சிற்றம்பலம்

## 2.77 சேக்கிழார் அருளிய பெரியபுராணம் - அன்பரங் கிருப்ப

திருமுறை: 12-1-14

ராகம்: மத்தியமாவதி

தாளம்:

திருச்சிற்றம்பலம்

அன்பரங் கிருப்ப நம்பர்
அருளினால் அளகை வேந்தன்
தன்பெரு நிதியந் தூர்த்துத்
தரணிமேல் நெருங்க எங்கும்
பொன்பயில் குவையும் நெல்லும்
பொருவில்பல் வளனும் பொங்க

மன்பெரும் செல்வ மாக்கி
வைத்தனன் மனையில் நீட
திருச்சிற்றம்பலம்

# 3. திருமுறைப் பதிகங்கள்

## 3.01 திருஞானசம்பந்தர் தேவாரம் - ஓருரு ஆயினை

தலம்: திருக்கழுமலம் (சீர்காழி)

திருமுறை: 1-128

பண்: வியாழக்குறிஞ்சி

தாளம்: ஆதி

பதிக வரலாறு :

வாக்கின்மன்னரை வழியனுப்பியபின் காழித்திருஞான சம்பந்தப் பிள்ளையார் மீண்டும் சீகாழியிற் புகுந்து , வேதவடி வாகிய திருத்தோணியில் வீற்றிருந்த விண்ணவர் பெருமானைப் பாடிப்பணிந்து, அங்கு எழுந்தருளியிருக்கின்ற நாளில், செந் தமிழ்ப் பாமாலையின் விகற்பங்களாகிய மொழிமாற்று, மாலை மாற்று, திருவியமகம், ஏகபாதம், இருக்குக்குறள், எழுகூற்றிருக்கை முதலானவற்றை அருளிச்செய்து, திருப்பாணனாரும் இசைவடிவான மதங்கசூளாமணியாரும் இப்பதிகங்களை ஏழிசைபற்றிப்பாடச் சீகாழியில் எழுந்தருளியிருந்தார்கள். இத்திருப்பதிகத்தை முழுவதும் ஓதினால், திருஞானசம்பந்தப் பெருமான் பாடிய அனைத்து திருப்பாடல்களையும் ஓதிய நற்பலன்கள் கிடைக்கும். புண்ணிய பயன்களை பெறுவதற்கும், தந்தையின் உடல்நலம் மற்றும் மனநலம் சீர்பெறுவதற்கும் ஓத வேண்டிய திருப்பதிகம்

திருச்சிற்றம்பலம்

ஓருரு ஆயினை மானாங்காரத்து
ஈரியல்பாய் ஒரு விண்முதல் பூதலம்
ஒன்றிய இருசுடர் உம்பர்கள் பிறவும்
படைத்தளித்து அழிப்ப மும்மூர்த்திகள் ஆயினை
இருவரோடு ஒருவன் ஆகி நின்றனை
ஓரால் நீழல் ஒண்கழல் இரண்டும்
முப்பொழுது ஏத்திய நால்வர்க்கு ஒளிநெறி
காட்டினை நாட்டம் மூன்றாகக் கோட்டினை
இருநதி அரவமோடு ஒருமதி சூடினை
ஒருதாள் ஈரயின் மூவிலைச் சூலம்
நாற்கால் மான்மறி ஐந்தலை அரவம்
ஏந்தினை காய்ந்த நால்வாய் மும்மதத்து
இருகோட்டு ஒருகரி ஈடழித்து உரித்தனை
ஒருதனு இருகால் வளைய வாங்கி
முப்புரத் தோடு நானிலம் அஞ்சக்
கொன்று தலத்துற அவுணரை அறுத்தனை

ஐம்புலன் நாலாம் அந்தக் கரணம்
முக்குணம் இருவளி ஒருங்கிய வானோர்
ஏத்த நின்றனை ஒருங்கிய மனத்தோடு
இருபிறப் போர்ந்து முப்பொழுது குறைமுடித்து
நான்மறை ஓதி ஐவகை வேள்வி
அமைத்து ஆறங்கம் முதலெழுத்து ஓதி
வரன்முறை பயின்றெழு வான்றனை வளர்க்கும்
பிரமபுரம் பேணினை
அறுபதம் முரலும் வேணுபுரம் விரும்பினை
இகலிய மைந்துணர் புகலி அமர்ந்தனை
பொங்குநாற் கடல்சூழ் வெங்குரு விளங்கினை
பாணி மூவுலகும் புதையமேல் மிதந்த
தோணிபுரத்து உறைந்தனை தொலையா இருநிதி
வாய்ந்த பூந்தராய் ஏய்ந்தனை
வரபுரம் என்றுணர் சிரபுரத்து உறைந்தனை
ஒருமலை எடுத்த இருதிறல் அரக்கன்
விறல்கெடுத்து அருளினை புறவம் புரிந்தனை
முந்நீர்த் துயின்றோன் நான்முகன் அறியாப்
பண்பொடு நின்றனை சண்பை அமர்ந்தனை
ஐயுறும் அமணரும் அறுவகைத் தேரரும்
ஊழியும் உணராக் காழி அமர்ந்தனை
எச்சன் ஏழிசையோன் கொச்சையை மெச்சினை
ஆறு பதமும் ஐந்தமர் கல்வியும்
மறை முதல் நான்கும்
மூன்று காலமும் தோன்ற நின்றனை
இருமையின் ஒருமையும் ஒருமையின் பெருமையும்
மறுவிலா மறையோர்
கழுமல முதுபதிக் கவுணியன் கட்டுரை
கழுமல முதுபதிக் கவுணியன் அறியும்
அனைய தன்மையை ஆதலின் நின்னை
நினைய வல்லவர் இல்லை நீள்நிலத்தே.

திருச்சிற்றம்பலம்

## 3.02 திருஞானசம்பந்தர் தேவாரம் - கள்ளார்ந்த

தலம்: திருப்புள்ளிருக்கு வேளூர்

திருமுறை: 02.043

பண்: சீகாமரம்

தாளம்: ஆதி

பதிக வரலாறு :

திருமறைச் சண்பையராளி திருக்கண்ணார் கோயிலை ஏத்தினார் , பிறகோயிலும் இறைஞ்சினார் , காவிரிவடபால் குடதிசை நோக்கி வருவாராய்க் , காதல் பெருகப் புள்ளிருக்கு வேளூர்க்கோயிலை நண்ணினார் , ஏற்ற அன்பு எய்த வணங்கினார் . இருவர் புள்வேந்தர் இறைஞ்சி ஆற்றிய பூசையைச் சாற்றி இந்த நன்சொற்பதிகத்தை அணிவித்தார்

**திருச்சிற்றம்பலம்**

**கள்ளார்ந்த பூங்கொன்றை மதமத்தங் கதிர்மதியம்**
**உள்ளார்ந்த சடைமுடியெம் பெருமானார் உறையுமிடம்**
**தள்ளாய சம்பாதி சடாயென்பார் தாமிருவர்**
**புள்ளானார்க் கரையனிடம் புள்ளிருக்கு வேளூரே.** 01

**தையலாள் ஒருபாகஞ் சடைமேலான் அவளோடும்**
**ஐயந்தேர்ந் துழல்வாரோர் அந்தணனார் உறையுமிடம்**
**மெய்சொல்லா இராவணனை மேலோடி யீடழித்துப்**
**பொய்சொல்லா துயிர்போனான் புள்ளிருக்கு வேளூரே.** 02

**வாசநலஞ் செய்திமையோர் நாடோறும் மலர்தூவ**
**ஈசனெம் பெருமானார் இனிதாக வுறையுமிடம்**
**யோசனைபோய்ப் பூக்கொணர்ந்தங் கொருநாளும் ஒழியாமே**
**பூசனைசெய் தினிதிருந்தான் புள்ளிருக்கு வேளூரே.** 03

**மாகாயம் பெரியதொரு மானுரிதோ லுடையாடை**
**ஏகாய மிட்டுகந்த எரியாடி உறையுமிடம்**
**ஆகாயந் தேரோடு இராவணனை அமரின்கண்**
**போகாமே பொருதழித்தான் புள்ளிருக்கு வேளூரே.** 04

**கீதத்தை மிகப்பாடும் மடியார்கள் குடியாகப்**
**பாதத்தைத் தொழநின்ற பரஞ்சோதி பயிலுமிடம்**
**வேதத்தின் மந்திரத்தால் வெண்மணலே சிவமாகப்**
**போதத்தால் வழிபட்டான் புள்ளிருக்கு வேளூரே.** 05

**திறங்கொண்ட வடியார்மேல் தீவினைநோய் வாராமே**
**அறங்கொண்டு சிவதன்மம் உரைத்தபிரான் அமருமிடம்**
**மறங்கொண்டங் கிராவணன்றன் வலிகருதி வந்தானைப்**
**புறங்கண்ட சடாயென்பான் புள்ளிருக்கு வேளூரே.** 06

**அத்தியின் ஈருரிமூடி அழகாக அனலேந்திப்**
**பித்தரைப்போற் பலிதிரியும் பெருமானார் பேணுமிடம்**
**பத்தியினால் வழிபட்டுப் பலகாலந் தவஞ்செய்து**
**புத்தியொன்ற வைத்துகந்தான் புள்ளிருக்கு வேளூரே.** 07

**பண்ணொன்ற இசைபாடும் அடியார்கள் குடியாக**
**மண்ணின்றி விண்கொடுக்கும் மணிகண்டன் மருவுமிடம்**
**எண்ணின்றி முக்கோடி வாணாள துடையானைப்**
**புண்ணொன்றப் பொருதழித்தான் புள்ளிருக்கு வேளூரே.** 08

**வேதித்தார் புரமூன்றும் வெங்கணையால் வெந்தவியச்**
**சாதித்த வில்லாளி கண்ணாளன் சாருமிடம்**
**ஆதித்தன் மகனென்ன அகன்ஞாலத் தவரோடும்**
**போதித்த சடாயென்பான் புள்ளிருக்கு வேளூரே.** 09

**கடுத்துவருங் கங்கைதனைக் கமழ்சடையொன் றாடாமே**
**தடுத்தவரெம் பெருமானார் தாமினிதா யுறையுமிடம்**
**விடைத்துவரு மிலங்கைக்கோன் மலங்கச்சென் றிராமற்காப்**
**புடைத்தவனைப் பொருதழித்தான் புள்ளிருக்கு வேளூரே.** 10

**செடியாய வுடல்தீர்ப்பான் தீவினைக்கோர் மருந்தாவான்**
**பொடியாடிக் கடிமைசெய்த புள்ளிருக்கு வேளூரைக்**
**கடியார்ந்த பொழிற்காழிக் கவுணியன்சம் பந்தன்சொல்**
**மடியாது சொல்லவல்லார்க் கில்லையாம் மறுபிறப்பே.** 11

**திருச்சிற்றம்பலம்**

## 3.03 திருஞானசம்பந்தர் தேவாரம் - வாழ்க அந்தணர்

தலம்: பொது

திருமுறை: 3-54

பண்: கௌசிகம்

தாளம்: ஆதி

திருப்பாசுரம்

பதிக வரலாறு:

திருஞானசம்பந்தரோடு, அனல் வாதத்திலும் தோற்ற சமணர்கள், புனல் வாதத்தில், தங்களது ஏட்டை வைகை ஆற்று வெள்ளத்தில் இட்டனர், ஏடும் ஆற்று நீரின்

திசையிலேயே விரைந்தோடி கடலைச் சேர்ந்தது. சைவ மெய்த்திருவுடைய திருஞானசம்பந்தர் தம் திருக்கையினால் ஆற்று நீரில் செலுத்திய "வாழ்க அந்தணர்" எனத் தொடங்கும் திருப்பதிகதை உடைய அவ்வேடு, பெருகி ஓடும் நீரையுடைய வைகையாற்றில் பெரிய இவ்வுலகில் வாழ்பவர்களுக்குக்கெல்லாம், `இதுவே உண்மைப் பொருள் உடையது' என்று எடுத்துக் காட்டிக் கீழ்நோக்கி ஓடும் ஓட்டத்தை எதிர்த்து நீரின் நடுவில் அதைக் கிழித்துக் கொண்டு கூறியபடி மேல்நோக்கிச் செல்லலாயிற்று. அப்போது வானவர்கள் எல்லாம் நீண்ட வாழ்த்து மொழிகளால் வாழ்த்தி மிக்க மலர்மழை பொழிந்து நிலத்தை மறைத்தனர். பாண்டிய மன்னனின் ஆணைப்படி, புனல் வாதத்திலும் தோற்றவர்களான சமணர்கள் எண்ணாயிரம் பேரும் கழுவில் ஏறினர்.

திருச்சிற்றம்பலம்

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரன் நாமமே
சூழ்க வையகமும் துயர் தீர்கவே. 01

அரிய காட்சியராய்த் தமதங்கை சேர்
எரியர் ஏறுகந்து ஏறுவர் கண்டமும்
கரியர் காடுறை வாழ்க்கைய ராயினும்
பெரியர் ஆரறிவார் அவர் பெற்றியே. 02

வெந்த சாம்பல் விரையெனப் பூசியே
தந்தை யாரொடு தாயிலர் தம்மையே
சிந்தியா எழுவார் வினை தீர்ப்பரால்
எந்தை யாரவர் எவ்வகை யார்கொலோ. 03

ஆட்பாலவர்க்கு அருளும் வண்ணமும் ஆதிமாண்பும்
கேட்பான் புகில் அளவில்லை கிளக்கவேண்டா
கோட்பாலனவும் வினையுங் குறுகாமை எந்தை
தாட்பால் வணங்கித் தலைநின்றிவை கேட்க தக்கார். 04

ஏதுக்களாலும் எடுத்த மொழியாலும் மிக்குச்
சோதிக்க வேண்டா சுடர்விட்டுளன் எங்கள்சோதி
மாதுக்கம் நீங்கலுறுவீர் மனம்பற்றி வாழ்மின்
சாதுக்கள் மிக்கீர் இறையே வந்துசார்மின்களே. 05

ஆடும் எனவும் அருங்கூற்றம் உதைத்துவேதம்
பாடும் எனவும் புகழல்லது பாவம்நீங்கக்
கேடும் பிறப்பும் அறுக்கும் எனக்கேட்டீராகில்
நாடும் திறத்தார்க்கு அருளல்லது நாட்டலாமே. 06

கடிசேர்ந்தபோது மலரான கைக்கொண்டு நல்ல
படிசேர்ந்த பால்கொண்டங்கு ஆட்டிடத் தாதைபண்டு
முடிசேர்ந்த காலையற வெட்டிட முக்கண்மூர்த்தி
அடிசேர்ந்த வண்ணம் அறிவார் சொலக்கேட்டுமன்றே. 07

வேதமுதல்வன் முதலாக விளங்கி வையம்
ஏதப்படாமை உலகத்தவர் ஏத்தல் செய்யப்
பூதமுதல்வன் முதலே முதலாப் பொலிந்த
சூதன் ஒலிமாலையென்றே கலிக்கோவை சொல்லே. 08

பாராழி வட்டம் பகையால் நலிந்தாட்ட ஆடிப்
பேராழி யானதிடர் கண்டருள் செய்தல்பேணி
நீராழி விட்டேறி நெஞ்சிடங் கொண்டவர்க்குப்
போராழி ஈந்த புகழும் புகழுற்றதன்றே. 09

மாலாயவனும் மறை வல்ல நான்முகனும்
பாலாய தேவர்பகரில் அமுதூட்டல் பேணிக்
காலாய முந்நீர் கடைந்தார்க்கு அரிதாயெழுந்த
ஆலாலம் உண்டங்கு அமரர்க்கருள் செய்ததாமே. 10

அற்றன்றி அந்தண் மதுரைத் தொகையாக்கினானும்
தெற்றென்று தெய்வம்தெளியார் கரைக்கோலை தெண்ணீர்ப்
பற்றின்றிப் பாங்கெதிர்வின் ஊரவும் பண்புநோக்கில்
பெற்றொன்று உயர்த்த பெருமான் பெருமானுமன்றே. 11

நல்லார்கள் சேர்புகலி ஞானசம்பந்தன் நல்ல
எல்லார்களும் பரவும் ஈசனை ஏத்துபாடல்
பல்லார்களும் மதிக்கப் பாசுரம் சொன்னபத்தும்
வல்லார்கள் வானோர் உலகாளவும் வல்லரன்றே. 12

திருச்சிற்றம்பலம்

## 3.04 திருநாவுக்கரசர் தேவாரம் - மாசில் வீணையும்

தலம்: பொது

திருமுறை: 5-90

திருக்குறுந்தொகை

பதிக வரலாறு:

சமண சமயத்திலிருந்து மீண்டும் சைவம் சார்ந்ததை அறிந்த பல்லவ மன்னன் சமண குருமார்களின் ஏவலால் திருநாவுக்கரசரை அழைத்துவரச்செய்தான். அவர்களின் தூண்டு கோலால் நீற்றறையில் இடுமாறு பணித்தான். அடிகளைச் சமணர்கள்

நீற்றறையில் அடைத்துத் தாளிட்டனர். ஆண்ட அரசு அதனகத்துள் பெருமான் திருவடிகளை எண்ணி ஈசனடியார்க்கு ஈண்டு வரும் துயருளவோ` என்றிருந்தார்கள். நீற்றறை இளவேனில் பருவத்தில் தென்றல் வீசும் செங்கழுநீர்த் தடாகக் கரையைப்போல எம்பிரான் திருவடி நீழலாய்க் குளிர்ந்தது. அந்நிலையைக்காட்டுகிறது இத்திருப்பதிகம்.

திருச்சிற்றம்பலம்

மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே. 01

நமச்சி வாயவே ஞானமுங் கல்வியும்
நமச்சி வாயவே நானறி விச்சையும்
நமச்சி வாயவே நாநவின் றேத்துமே
நமச்சி வாயவே நன்னெறி காட்டுமே. 02

ஆளாகார் ஆளானாரை அடைந்து உய்யார்
மீளா ஆட்செய்து மெய்ம்மையுள் நிற்கிலார்
தோளாத சுரையோ தொழும்பர்செவி
வாளா மாய்ந்து மண்ணாகிக் கழிவரே. 03

நடலை வாழ்வுகொண்டு என்செய்திர் நாணிலீர்
சுடலை சேர்வது சொற்பிர மாணமே
கடலின் நஞ்சமுது உண்டவர் கைவிட்டால்
உடலினார் கிடந்து ஊர்முனி பண்டமே. 04

பூக்கைக் கொண்டரன் பொன்னடி போற்றிலார்
நாக்கைக் கொண்டரன் நாமம் நவில்கிலார்
ஆக்கைக்கே இரை தேடி அலமந்து
காக்கைக்கே இரை யாகிக் கழிவரே. 05

குறிக ளும் அடையாளமுங் கோயிலும்
நெறிகளும் அவர் நின்றதோர் நேர்மையும்
அறிய ஆயிரம் ஆரணம் ஓதிலும்
பொறியிலீர் மன மென்கொல் புகாததே. 06

வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும்
தாழ்த்தச் சென்னியுந் தந்த தலைவனைச்
சூழ்த்த மாமலர் தூவித் துதியாதே
வீழ்த்தவா வினையேன் நெடுங் காலமே. 07

எழுது பாவைநல்லார் திறம் விட்டுநான்
தொழுது போற்றி நின்றேனையுஞ் சூழ்ந்துகொண்டு
உழுத சால்வழியே உழுவான் பொருட்டு
இழுதை நெஞ்சமிது என்படு கின்றதே. 08

நெக்கு நெக்கு நினைபவர் நெஞ்சுளே

புக்கு நிற்கும் பொன்னார்சடைப் புண்ணியன்
பொக்க மிக்கவர் பூவுநீருங் கண்டு
நக்கு நிற்பர் அவர்தம்மை நாணியே. 09

விறகில் தீயினன் பாலில் படுநெய்போல்
மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்
உறவு கோல்நட்டு உணர்வு கயிற்றினால்
முறுக வாங்கிக் கடையமுன் நிற்குமே. 10

திருச்சிற்றம்பலம்

## 3.05 சுந்தரர் தேவாரம் - மற்றுப் பற்றெனக்கின்றி

தலம்: திருப்பாண்டிக்கொடுமுடி

திருமுறை: 7-48

பண் : பழம்பஞ்சுரம்

தாளம்:

பதிக வரலாறு :

சுந்தரர், திருஈங்கோய்மலை முதலாகப் பல தலங்களைத் தொழுது, கொங்குநாட்டில் காவிரியின் தென்கரையில் உள்ள திருப்பாண்டிக் கொடுமுடி அணைந்து, கோயில்முன் குறுகி, வணங்கி, `இங்கிவர் தம்மை மறக்கவொண்ணாது` என்று உள்ளத் தில் எழுந்த குறிப்பினால் திருவைந்தெழுத்தை அமைத்துப் பாடி யருளியது இத் திருப்பதிகம். ஒவ்வொருபாடலின் இறுதியிலும் `சொல்லுநா நமச்சிவாயவே` என்று அருளியிருப்பதால், இதற்கு, `நமச்சிவாயத் திருப்பதிகம்` என்ற பெயர் வழங்கப் படுகிறது. ( தி .12 பெரிய . புரா . ஏயர்கோன் . புரா . 87) குறிப்பு : இத் திருப்பதிகம், கொடுமுடிக் கோயிலில் உள்ள பெருமானது அழகிய திருமேனியைக் கண்டு வணங்கியபொழுது எழுந்த பேரன்பால், `இவரை, யான்மறவேன்` என்னும்கருத்தால் அருளிச் செய்தது. இதன்கண் திருவைந்தெழுத்தை எடுத்தோதியருளினமையின், இது, `நமச்சிவாயத் திருப்பதிகம்` என்னுந் திருப்பெயரைப் பெற்றது.

திருச்சிற்றம்பலம்

மற்றுப் பற்றெனக்கின்றி நின்திருப்பாதமே மனம் பாவித்தேன்
பெற்றலும் பிறந்தேன் இனிப்பிறவாத தன்மைவந்து எய்தினேன்
கற்றவர்தொழு தேத்துஞ் சீர்க்கறையூரில் பாண்டிக் கொடுமுடி
நற்றவா உனை நான்மறக்கினும் சொல்லும்நா நமச்சிவாயவே. 01

இட்ட னும்மடி ஏத்துவார் இகழ்ந்திட்டநாள் மறந்திட்டநாள்
கெட்ட நாள் இவை என்றலால் கருதேன்கிளர் புனல்காவிரி
வட்ட வாசிகை கொண்டடி தொழுதேத்து பாண்டிக்கொடுமுடி
நட்டவா உனை நான்மறக்கினும் சொல்லும்நா நமச்சிவாயவே. 02

ஓவு நாள் உணர்வழியும் நாள் உயிர்போகும் நாள்உயர் பாடைமேல்
காவும் நாள் இவை என்றலால் கருதேன்கிளர் புனல்காவிரிப்
பாவு தண்புனல் வந்திழி பரஞ்சோதி பாண்டிக்கொடுமுடி
நாவலா உனை நான்மறக்கினும் சொல்லும்நா நமச்சிவாயவே. 03

எல்லையில்புகழ் எம்பிரான் எந்தைதம்பிரான் என்பொன்மாமணி
கல்லை யுந்தி வளம்பொழிந்திழி காவிரியதன் வாய்க்கரை
நல்லவர் தொழுதேத்துஞ் சீர்க்கறையூரிற் பாண்டிக் கொடுமுடி
வல்லவா உனை நான்மறக்கினும் சொல்லும்நா நமச்சிவாயவே. 04

அஞ்சினார்க்கு அரண்ஆதியென்று அடியேனும் நான்மிக அஞ்சினேன்
அஞ்சலென்றடித் தொண்டனேற்கு அருள் நல்கினாய்க்கழி கின்றதென்
பஞ்சின் மெல்லடிப் பாவைமார்குடைந்தாடு பாண்டிக் கொடுமுடி
நஞ்சணி கண்ட நான்மறக்கினும் சொல்லும்நா நமச்சிவாயவே. 05

ஏடுவான் இளந்திங்கள் சூடினை என்பின்கொல்புலித் தோலின்மேல்
ஆடு பாம்பது அரைக்கசைத்த அழகனே அந்தண்காவிரிப்
பாடு தண்புனல் வந்திழிபரஞ்சோதி பாண்டிக் கொடுமுடி
சேடனே உனை நான்மறக்கினும் சொல்லும்நா நமச்சிவாயவே. 06

விரும்பி நின்மலர்ப் பாதமேநினைந்தேன் வினைகளும் விண்டனன்
நெருங்கி வண்பொழில் சூழ்ந்தெழில்பெற நின்றகாவிரிக் கோட்டிடைக்
குரும்பை மென்முலைக் கோதைமார் குடைந்தாடு பாண்டிக்கொடுமுடி
விரும்பனே உனை நான்மறக்கினும் சொல்லும்நா நமச்சிவாயவே. 07

செம்பொனேர் சடையாய் திரிபுரம் தீயெழச்சிலை கோலினாய்
வம்புலாங் குழலாளைப்பாகம் அமர்ந்து காவிரிக் கோட்டிடைக்
கொம்பின்மேற் குயில்கூவ மாமயிலாடு பாண்டிக் கொடுமுடி
நம்பனே உனை நான்மறக்கினும் சொல்லும்நா நமச்சிவாயவே. 08

சாரணன்தந்தை எம்பிரான் எந்தைதம்பிரான் என்பொன் மாமணியென்று
பேரெணாயிர கோடி தேவர் பிதற்றிநின்று பிரிகிலார்
நாரணன் பிரமன்தொழும் கறையூரில் பாண்டிக் கொடுமுடிக்
காரணா உனை நான்மறக்கினும் சொல்லும்நா நமச்சிவாயவே. 09

கோணியபிறை சூடியைக் கறையூரில் பாண்டிக் கொடுமுடி
பேணிய பெருமானைப் பிஞ்ஞகப் பித்தனைப் பிறப்பில்லியைப்
பாணுலாவரி வண்டறை கொன்றைத் தாரனைப்படப் பாம்பரை
நாணனைத் தொண்டனூரன் சொல்லிவை சொல்லுவார்க்கில்லை துன்பமே.10

திருச்சிற்றம்பலம்

## 3.06 மாணிக்கவாசகர் அருளிய திருவாசகம் - நமச்சிவாய

தலம்: திருப்பெருந்துறை

திருமுறை: 8-1

சிவபுராணம்

மணிவாசகப் பெருமான் அருளிய திருவாசகத்தில் முதலில் அருளியது சிவபுராணம் ஆகும். சிவபுராணம் திருப்பெருந்துறையில் அருளிச் செய்யப்பட்டது. திருவாசகமானது இவ்வுலக உயிர்கள் உய்யும் பொருட்டு சிவபெருமான், மணிவாசகப் பெருமான் மூலம் அருளிச் செய்யப் பட்டதாகும். சிவபுராணத்தை, நாள்தோறும் காலையும் மாலையும் மிகவும் அன்புடனும் நம்பிக்கையுடனும் சிவபெருமானின் திருவடிகளை நினைந்து ஓதி வந்தால், மனக்கவலைகள் மற்றும் குடும்பத்தில் ஏற்படும் குழப்பங்கள் அனைத்தும் ஒழிந்து, குடும்பத்தில் அமைதியும் ஆனந்தமும் பெருகும்.

வெண்பா:
தொல்லை இரும்பிறவிச் சூழும் தளை நீக்கி
அல்லல் அறுத்து ஆனந்தம் ஆக்கியதே எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவாசகம் என்னும் தேன்.

நமச்சிவாய வாஅழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி ஆண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள்வாழ்க
ஏகன் அநேகன் இறைவன் அடிவாழ்க
வேகம் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்தன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்தன் பூங்கழல்கள் வெல்க
கரம்குவிவார் உள்மகிழும் கோன்கழல்கள் வெல்க
சிரம்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல்வெல்க
ஈசனடி போற்றி எந்தை அடிபோற்றி
தேசனடி போற்றி சிவன் சேவடிபோற்றி
நேயத்தே நின்ற நிமலனடி போற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னனடி போற்றி
சீரார் பெருந்துறைநம் தேவனடி போற்றி
ஆராத இன்பம் அருளும் மலைபோற்றி
சிவனவன் என் சிந்தையுள் நின்ற அதனால்
அவன் அருளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணம் தன்னை
முந்தை வினைமுழுதும் மோய உரைப்பன்யான்
கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற்கு எட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்

எண்ணிறந்து எல்லை இலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமாறு ஒன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருகம் ஆகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல் அசுரராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்ற இத்தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேஉன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யஎன் உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா எனஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமான னாம்விமலா
பொய்யாயின எல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞானம் ஆகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்கம் அளவிறுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பின்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனங்கழிய நின்ற மறையோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்து அடியார் சிந்தனையுள் தேனூறிநின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோர் ஐந்துடையாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றால் கட்டிப்
புறந்தோல் போர்த்தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ்சோரும் ஒன்பது வாயில் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்து உள்ளுருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காஅட்டி
நாயில் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயில் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனா ரமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில் வஞ்சம்கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே

ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கியென் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக்கு அன்பனே யாவையுமாய் அல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்தென்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெய்ஞ் ஞானத்தால் கொண்டுணர்வார் தம்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக்காய் நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவேஎன் சிந்தனையுள்
ஊற்றான உண்ணார் அமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பின் உட்கிடப்ப
ஆற்றேன் எம்ஐயா அரனேஓ என்றென்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்ஆனார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பை கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுள் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லல் பிறவி அறுப்பானே ஓ என்று
சொல்லற்கு அரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்

## 3.07 மாணிக்கவாசகர் அருளிய திருவாசகம் - பூசுவதும்

தலம்: திருத்தில்லை

திருமுறை: 8-12

திருச்சாழல்

பதிக வரலாறு:
சைவத்தை வென்று புத்த மதத்தை நிலைநாட்டி வர ஈழத்தரசன் ஒருவன் தன் ஊமைப் பெண்ணையும் உடன் அழைத்துக் கொண்டு புத்தாசாரியனுடன் தில்லைக்குப் புறப்பட்டான்.

இச்செய்தி தில்லைவாழ் அந்தணர்களுக்கு எட்டியது, அவர்கள் சோழமன்னனுக்கு உடனே தெரிவித்தனர். அன்றிரவு தில்லைவாழ் அந்தணர்கள் அனைவரும் புத்தமத குருவை எவ்வாறு வெல்வது என்ற கவலையுடன் தில்லைச்சிற்றம்பலவனை எண்ணி வணங்கித் துயில்கொண்டனர். நடராசப் பெருமான் அவர்கள் கனவில் எழுந்தருளி

`தில்லையின் கீழ்பால் சிவயோகத்தில் அமர்ந்து தவமியற்றி வரும் நம் அடியவனாகிய வாதவூரனை அழைத்து வந்து இப்புத்த குருவோடு வாதிடச் செய்க, அவன் அவர்களை வெல்வான்; கவலற்க` என்று கூறி மறைந்தார்.

வாதவூரடிகளும் தில்லை மூவாயிரவருடன் சென்று ஆனந்தக் கூத்தனை வணங்கி அவனருள் பெற்று புத்தமதகுரு இருந்த மண்டபத்தை அடைந்தனர்.

சோழன் வாதவூரரைப் பணிந்து, `புத்தர்களை வாதில் வென்று நம் சமயத்தை நிலைபெறச் செய்வது தங்கள் கடமை, தோல்வியுற்ற புத்தர்களை முறைசெய்வது என் கடமை` என்று வேண்டிக் கொண்டான். பின்னர் மணிவாசகர் புத்தகுருவை விளித்து `வந்த காரியம் என்ன?` என்று வாதத்தைத் தொடங்கினார். வாதம் தொடர்ந்து நடைபெற்றது. மணிவாசகர் எத்தனை உண்மைகளை எடுத்துரைத்தாலும் அவை புத்தகுருவின் செவிகளில் ஏறவில்லை. மணிவாசகர் கூறிய வாதத்தை மறுக்கும் வழியின்றி, சிவ நிந்தை செய்யத் தொடங்கினான். அதைக்கண்ட மணிவாசகர் கலைமகளை வேண்டி சிவநிந்தை செய்யும் நாவில் நீ இருத்தல் பொருந்துமோ? இவர்கள் நாவைவிட்டு அகல்வாயாக; இது இறைவன் ஆணை` என்று கூறினார். அவ்வளவில் புத்தகுருவும், அவருடன் வந்தவர்களும் ஊமைகளாயினர். இதைக்கண்டு வியப்புற்ற ஈழமன்னன் வாதவூரரை வணங்கி `அடிகளே என் மகள், பிறவி முதல் ஊமையாக இருக்கின்றாள். அவளைப் பேசும்படிச் செய்தால் நான் தங்களுக்கு அடிமையாவேன்` என்று கூறினான். வாதவூரர் அதற்கிசைந்து அப்பெண்ணை அவைக்கு வரவழைத்து அமர்த்தி, பெண்ணே! இப்புத்தன் கேட்ட கேள்விகளுக்கு விடை கூறு என்று கூறினார். அப்பெண்ணும் அனைவரும் வியந்து மகிழும்படி, புத்த குருவின் வினாக்களை மணிவாசகர் தாமே அப்பெண்ணிடம் கேட்க, அப்பெண் அதற்கு விடையளித்தாள். அந்த வினா - விடைகள் தாம் திருச்சாழல் என்ற திருப்பதிகமாக அமைந்தது. ஈழமன்னனும் அதைக்கண்டு மகிழ்ந்து மணிவாசகர் திருவடிகளிலே விழுந்து வணங்கிச் சைவ சமயம் சார்ந்தான். அவையோர் அனைவரும் மணிவாசகப் பெருமானைப் போற்றித் துதித்தார்கள். ஈழ மன்னன் திருநீறும் கண்டிகையும் பூண்டு அடிகளைப் பணிந்து புத்த குருவும், மற்றவர்களும் பேசும் திறம்பெற அருள் செய்ய வேண்டுமென்று வேண்டினான்.

மணிவாசகர் அவர்கள் மீது திருவருட் பார்வையைச் செலுத்தினார். அவ்வளவில் அனைவரும் ஊமை நீங்கிப்பேசும் திறம்பெற்று மணிவாசகரை வணங்கித் தாங்கள் செய்த குற்றத்தை மன்னிக்கும்படி வேண்டிக்கொண்டனர். புத்தகுருவும் அவரைச் சூழ வந்த அனைவரும் சைவர்களாக மாறினர்.

திருச்சிற்றம்பலம்

பூசுவதும் வெண்ணீறு பூண்பதுவும் பொங்கரவம்
பேசுவதும் திருவாயால் மறைபோலும் காணேடீ
பூசுவதும் பேசுவதும் பூண்பதுவும் கொண்டென்னை
ஈசனவன் எவ்வுயிர்க்கும் இயல்பானான் சாழலோ. 01

என்னப்பன் எம்பிரான் எல்லார்க்கும் தான்ஈசன்
துன்னம்பெய் கோவணமாக் கொள்ளுமது என்னேடீ
மன்னுகலை துன்னுபொருள் மறைநான்கே வான்சரடாத்

தன்னையே கோவணமாச் சாத்தினன்காண் சாழலோ. 02

கோயில் சுடுகாடு கொல்புலித்தோல் நல்லாடை
தாயுமிலி தந்தையிலி தான்தனியன் காணேடீ
தாயுமிலி தந்தையிலி தான்தனியன் ஆயிடினும்
காயில் உலகனைத்தும் கற்பொடிகாண் சாழலோ. 03

அயனை அனங்கனை அந்தகனைச் சந்திரனை
வயனங்கள் மாயா வடுச்செய்தான் காணேடீ
நயனங்கள் மூன்றுடைய நாயகனே தண்டித்தால்
சயமன்றோ வானவர்க்குத் தாழ்குழலாய் சாழலோ. 04

தக்கனையும் எச்சனையும் தலையறுத்துத் தேவர்கணம்
தொக்கனவந்து அவர்தம்மைத் தொலைத்ததுதான் என்னேடீ
தொக்கனவந்து அவர்தம்மைத் தொலைத்தருளி அருள்கொடுத்தங்கு
எச்சனுக்கு மிகைத்தலைமற்று அருளினன்காண் சாழலோ. 05

அலரவனும் மாலவனும் அறியாமே அழலுருவாய்
நிலமுதற்கீழ் அண்டமுற நின்றதுதான் என்னேடீ
நிலமுதற்கீழ் அண்டமுற நின்றிலனேல் இருவரும்தம்
சலமுகத்தால் ஆங்காரம் தவிரார்காண் சாழலோ. 06

மலைமகளை ஒருபாகம் வைத்தலுமே மற்றொருத்தி
சலமுகத்தால் அவன்சடையில் பாயுமது என்னேடீ
சலமுகத்தால் அவன்சடையில் பாய்ந்திலளேல் தரணியெல்லாம்
பிலமுகத்தே புகப்பாய்ந்து பெருங்கேடாம் சாழலோ. 07

கோலால மாகிக் குரைகடல்வாய் அன்றெழுந்த
ஆலாலம் உண்டான் அவன்சதுர்தான் என்னேடீ
ஆலாலம் உண்டிலனேல் அன்றயன்மால் உள்ளிட்ட
மேலாய தேவரெல்லாம் வீடுவர்காண் சாழலோ. 08

தென்பால் உகந்தாடும் தில்லைச் சிற்றம்பலவன்
பெண்பால் உகந்தான் பெரும்பித்தன் காணேடீ
பெண்பால் உகந்திலனேல் பேதாய் இருநிலத்தோர்
விண்பால் யோகெய்தி வீடுவர்காண் சாழலோ. 09

தானந்தம் இல்லான் தனையடைந்த நாயேனை
ஆனந்த வெள்ளத்து அழுத்துவித்தான் காணேடீ
ஆனந்த வெள்ளத்து அழுத்துவித்த திருவடிகள்
வானுந்து தேவர்கட்கோர் வான்பொருள்காண் சாழலோ. 10

நங்காய் இதென்னதவம் நரம்போடு எலும்பணிந்து
கங்காளம் தோள்மேலே காதலித்தான் காணேடீ
கங்காளம் ஆமாகேள் காலாந் தரத்திருவர்
தங்காலம் செய்யத் தரித்தனன்காண் சாழலோ. 11

கானார் புலித்தோல் உடைதலைஊண் காடுபதி
ஆனால் அவனுக்கிங்கு ஆட்படுவார் ஆரேடி
ஆனாலும் கேளாய் அயனும் திருமாலும்
வானாடர் கோவும் வழியடியார் சாழலோ. 12

மலையரையன் பொற்பாவை வாள்நுதலாள் பெண்திருவை
உலகறியத் தீவேட்டான் என்னுமது என்னேடீ
உலகறியத் தீவேளாது ஒழிந்தனனேல் உலகனைத்தும்
கலைநவின்ற பொருள்களெல்லாம் கலங்கிடுங்காண் சாழலோ. 13

தேன்புக்க தண்பனைசூழ் தில்லைச் சிற்றம்பலவன்
தான்புக்கு நட்டம் பயிலுமது என்னேடீ
தான்புக்கு நட்டம் பயின்றிலனேல் தரணியெல்லாம்
ஊன்புக்க வேல்காளிக்கு ஊட்டாம்காண் சாழலோ. 14

கடகரியும் பரிமாவும் தேரும் உகந்தேறாதே
இடபம் உகந்தேறியவாறு எனக்கறிய இயம்பேடீ
தடமதில்கள் அவைமூன்றும் தழலெரித்த அந்நாளில்
இடபமதாய்த் தாங்கினான் திருமால்காண் சாழலோ. 15

நன்றாக நால்வர்க்கும் நான்மறையின் உட்பொருளை
அன்றாலின் கீழிருந்தங்கு அறமுரைத்தான் காணேடீ
அன்றாலின் கீழிருந்தங்கு அறமுரைத்தான் ஆயிடினும்
கொன்றான்காண் புரமூன்றும் கூட்டோடே சாழலோ. 16

அம்பலத்தே கூத்தாடி அமுதுசெயப் பலிதிரியும்
நம்பனையும் தேவனென்று நண்ணுமது என்னேடீ
நம்பனையும் ஆமாகேள் நான்மறைகள் தாமறியா
எம்பெருமான் ஈசாவென்று ஏத்தினகாண் சாழலோ. 17

சலமுடைய சலந்தரன்தன் உடல்தடிந்த நல்லாழி
நலமுடைய நாரணற்கன்று அருளியவாறு என்னேடீ
நலமுடைய நாரணன்தன் நயனம்இடந்து அரனடிக்கீழ்
அலராக இடஆழி அருளினன்காண் சாழலோ. 18

அம்பரமாம் புள்ளித்தோல் ஆலாலம் ஆரமுதம்
எம்பெருமான் உண்டசதுர் எனக்கறிய இயம்பேடீ
எம்பெருமான் ஏதுடுத்தங்கு ஏதமுது செய்திடினும்
தம்பெருமை தானறியாத் தன்மையன்காண் சாழலோ. 19

அருந்தவருக்கு ஆலின்கீழ் அறமுதலா நான்கினையும்
இருந்தவருக்கு அருளுமது எனக்கறிய இயம்பேடீ
அருந்தவருக்கு அறமுதல்நான்கு அன்றருளிச் செய்திலனேல்
திருந்தவருக்கு உலகியற்கை தெரியாகாண் சாழலோ. 20

திருச்சிற்றம்பலம்

# 4. வாழ்த்துப் பாடல்கள்

## 4.1 வாழ்த்து - வையம் நீடுக

ராகம்: மத்தியமாவதி

தாளம் ஆதி

திருச்சிற்றம்பலம்

வையம் நீடுக மாமழை மன்னுக
மெய் விரும்பிய அன்பர் விளங்குக
சைவ நன்னெறி தான்தழைத் தோங்குக
தெய்வ வெண்திரு நீறு சிறக்கவே.

-பெரிய புராணம்

திருச்சிற்றம்பலம்

## 4.2 வாழ்த்து - மல்குக

ராகம்: மத்தியமாவதி

தாளம் ஆதி

மல்குக வேத வேள்வி வழங்குக சுரந்து வானம்
பல்குக வளங்கள் எங்கும் பரவுக அறங்கள் இன்பம்
நல்குக உயிர்கட் கெல்லாம் நான்மறைச் சைவம் ஓங்கிப்
புல்குக உயிர்கட் கெல்லாம் புரவலன் செங்கோல் வாழ்க.

-திருவிளையாடற் புராணம்.

திருச்சிற்றம்பலம்

# 5. உரைநடை

## 5.1 கட்டுரைகள் - சந்தான குரவர்கள்

### மெய்கண்டார்

சைவர்களால் புறச் சந்தான குரவர்கள் எனப் போற்றப்படும் நால்வருள் முதன்மையானவர் மெய்கண்டார். சைவ சித்தாந்த நூல்களுள் தலையாயதான சிவஞான போதத்தை இயற்றியவர் இவரே.

மெய்கண்ட தேவர், திருவெண்ணெய்நல்லூரில், வேளாண் குடியில் பிறந்தவர். கிபி 13 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்தவராகக் கருதப்படுகிறது. இவர் பரஞ்சோதி முனிவர் என்னும் பெரியாரிடம் ஞானோபதேசம் பெற்றவர். இவர் சைவ சித்தாந்தக் கோட்பாடுகளைத் தமிழில் வெளிக்கொணர்ந்த மாணவர் பரம்பரையை உருவாக்கியவர். இவரிடம் 49 மாணவர்கள் கல்வி கற்றனர். இவர்களுள் அருணந்தி சிவாச்சாரியார் தலை சிறந்தவர். இவர் தனது குருவின் சிவஞான போதத்தை அடியொற்றிச் சிவஞான சித்தியார், இருபா இருபஃது என்னும் இரு நூல்களை இயற்றினார். மெய்கண்டாரின் இன்னொரு மாணவரான மனவாசகம் கடந்தார் என்பவர் உண்மை விளக்கம் என்னும் சித்தாந்த நூலை இயற்றினார்.

### பிறப்பு

திருமுனைப்பாடி நாடு என்னும் நாட்டிலே திருப்பெண்ணாகடம் என்ற ஊரில் அச்சுத களப்பாளர் என்று ஒரு சிவனடியார் இருந்தார். அவரின் மனைவியின் பெயர் மங்களாம்பிகை. அவர்தம் குடும்பத்திற்கு வழி வழியாய் திருத்துறையூர் என்னும் ஊரில் ஆதிசைவர் குடும்பத்தில் பிறந்த சகலாகம பண்டிதர் என அழைக்கப்படும் சதாசிவ சிவாச்சாரியார் என்னும் அடியவர் ஆசாரிய பெருமகனாக விளங்கினார். களப்பாளருக்கு ஊழ்வினைப் பயனால் மக்கட் செல்வம் இல்லை. அவரும், அவர்தம் துணைவியாரும் அவர்களது ஆசாரிய சுவாமிகளிடம் சென்று முறையிட்டனர்.

சகலாகம பண்டிதரும், அவர் தம் குறைகளைப் போக்க, திருமுறை பாக்களில் கயிறு சாற்றிப் பார்த்தார், அப்போது, திருஞானசம்பந்தர் அருளிய திருவெண்காட்டு பதிகம் வந்தது.

"பேயடையா பிரிவெய்தும் பிள்ளையினோ டுள்ளநினை
வாயினவே வரம்பெறுவர் ஐயுறவேண் டாவொன்றும்
வேயனதோ ளுமைபங்கன் வெண்காட்டு முக்குளநீர்
தோய்வினையா ரவர்தம்மைத் தோயாவாந் தீவினையே"

சகலாகம பண்டிதர், தனது சீடரையும், அவர்தம் துணைவியாரையும் திருவெண்காடு சென்று அங்குள்ள, முக்குளத்தில் (சூரிய தீர்த்தம், சந்திர தீர்த்தம் அக்னி தீர்த்தம்) நீராடி, திருவெண்காட்டு பதிகம் தனை அனுசந்தானம் செய்து, திரு வெண்காடரை, பணிந்து வருமாறு அருளினார். குருவின் திருவாக்குப் படியே களப்பாளரும் அவர் துணைவியாரும் திருவெண்காட்டிற்கு வந்து சுவேதவனப் பெருமானைப் பூசிக்கலானார்கள். ஒரு நாள் இரவு, களப்பாளரின் கனவில் இறையனார் தோன்றி.....அன்பரே...இப்பிறவியில் உமக்கு குழந்தை பாக்கியம் இல்லை, இருப்பினும், எனது அன்பனான சீர்காழிப் பிள்ளையின் பதிகத்தில் நம்பிக்கை வைத்து வழிபட்டதால், திருஞான சம்பந்தனைப் போலவே உனக்கும் ஒரு தெய்வ மகவு தனை அருளுவோம் என்று திருவாய் மலர்ந்தார்.

கனவிலிருந்து விழித்துக்க் கொண்டவராய் எழுந்த களபாளருக்கு மகிழ்ச்சி தாளவில்லை. அந்த கனவினை, தன மனைவியிடம் தெரிவித்தார். மங்கைபாகர் அருளிய வண்ணமே அந்த திவ்ய தம்பதிகளுக்கு ஒரு ஆண் மகவு பிறந்தது. திருவெண்காடரின் திருவருளால் அவதரித்த மகவாதலால், சுவேதவனப் பெருமாள் என்ற அவரது திருநாமத்தையே வைத்தனர்.

**இளம் பிராயம்**

நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாய் ஸ்வேதவனப் பெருமாள் வளரலானார். இளம் வயதிலேயே சிவ பக்தி மிகுந்தவராய்த் திகழ்ந்தார். ஒரு நாள், திருவெண்ணெய் நல்லூரில் (தம்பிரான் தொண்டரான சுந்தரமூர்த்தி சுவாமிகளை ஆட்கொண்ட திருத்தலம்) உள்ள தனது தாய்மாமாவின் இல்லத்திற்குச் சென்றிருந்தார் ஸ்வேதவனப் பெருமாள், அங்கே தனது நண்பர்களோடு விளையாடிக் கொண்டிருக்கையில், ஆகாய மார்க்கமாக பொதிகை மலை நோக்கி சென்று கொண்டிருந்த பரஞ்சோதி முனிவரின் கண்களில் தேஜோமயமான தெய்வக் குழந்தையான ஸ்வேதவனப் பெருமாள் தென்பட்டார். அவரைக் கண்டதும் கீழிறங்கி வந்து அவருக்கு மெய்ஞானம் தன்னை உபதேசித்தருளி அவருக்கு மெய்கண்டார் என்னும் திருநாமத்தையும் சூட்டி அருளினார். இப் பெயர் பரஞ்சோதி முனிவரின் ஞானாசிரியரான சத்திய ஞான தரிசிகள் என்னும் வடமொழிப் பெயரின் தமிழ் வடிவமாகும்.

**நூற் பணி**

தனது குருவான பரஞ்சோதியார் உபதேசித்த சிவஞான சூத்திரங்களை தமிழில் அருளிச் செய்தார் மெய்கண்டார். அதற்கு அவரே வார்திகமும் அருளிச் செய்தார். அந்த நூல் சிவஞான போதம் என்று வழங்கலாயிற்று. (மெய்கண்ட சாத்திரங்களுள் முதலாவதாக விளங்கும் நூல்). அந்த நூலே பிற்காலத்தில் திரு அவதாரம் செய்தருளிய சந்தான ஆசாரியர்களின் சைவ சித்தாந்த நூல்களுக்கு ஆதாரமான நூலாக அமைந்தது.

**அருணந்தி சிவாச்சாரியர் சீடராதல்**

இவ்வாறாக மெய்கண்டாரின் பேரும் புகழும் நாடெங்கும் பரவியது. இதனை கேள்விப்பட்ட, அவரது குல ஆசாரியரான சகலாகம பண்டிதர், மெய்கண்டாரைக் காண திரு வெண்ணை நல்லூருக்கு எழுந்தருளினார். அச்சமயம், ஊரில் உள்ள மக்கள் அனைவரும் மெய்கண்டாரின் அருளுரை தனை கேட்க குழுமியிருந்தனர். மெய்கண்டாரும், அவர்களுக்கு நல்லாசி வழங்கிக் கொண்டு, ஆணவ மலந்தனைப் பற்றி அருளுரை வழங்கிக் கொண்டிருந்தார்.

அருளுரை வழங்கிக் கொண்டிருந்த மெய்கண்டாரின் முன் சென்று...."இந்தச் சிறுவனுக்கு என்ன தெரியும்?" என்ற ஆணவத்தோடு, ஆணவம் ஆவது யாது? அதன் வடிவம் என்ன? என்று கேட்டார் சகலாகம பண்டிதர். பதிலேதும் பேசாமல், மெய்கண்டார் தனது விரல்களினால் சகலாகம பண்டிதரை ஆணவத்தின் வடிவமென சுட்டிக் காட்டினார்.

மெய்கண்டதேவரின் அருள் நோக்கால், தன்னிலை உணர்தவாராய், மெய்கண்டாரின் திருவடிகளில் தண்டனிட்டு எழுந்த சகலாகம பண்டிதர் மெய்கண்டாரிடம், தன்னை அவர்தம் சீடராக ஏற்று அருளும்படி வேண்டினார். மெய்கண்டாரும், அவரை ஆட்கொண்டருளத் திருவுளம் கொண்டு சகலாகம பண்டிதருக்கு சிவ தீக்ஷை தந்தருளி, அவருக்கு அருணந்தி சிவம் என்ற திருநாமந் தனையும் வழங்கினார். சைவர்களால் சந்தானக் குரவர்களுள் ஒருவராக, மெய்கண்ட தேவருக்கு அடுத்த நிலையில் வைத்து மதிக்கப்படுகிறார் அருணந்தி சிவாச்சாரியார். இவர் மெய்கண்டாரின் சிவஞான போதம் என்னும் நூலை அனுசரித்து சிவஞான சித்தியார் எனும் புகழ் பெற்ற சைவ சித்தாந்த நூலை இயற்றி அருளினார். இந் நூலின் சிறப்புக்கு, சிவத்தின் மேல் தெய்வமில்லை சிவஞான சித்திக்கு மேல் சாத்திரம் இல்லை என்று வழங்கும் பழமொழியே சான்றாகும். சிவஞான சித்தியார் தவிர, மெய்கண்ட சாத்திரங்களுள் அடங்கும் இன்னொரு நூலான இருபா இருபது என்னும் நூலும் இவர் அருளியதே. சந்தான குரவர்களில் மூன்றாமவரான மறைஞான சம்பந்தர் இவர் மாணாக்கர் ஆவார்.

**முத்தி**

மெய்கண்டதேவர் ஐப்பசி மாத சுவாதி நட்சத்திரத்தில் முத்தியடைந்தார். இவரின் குருபூசைத் தினத்தைச் சைவர்கள் சிறப்பாகக் கொண்டாடுவர்.

**அருள் நந்தி சிவாச்சாரியார்**

அருணந்தி சிவாச்சாரியார், சைவ சித்தாந்தக் கோட்பாடுகளைப் பரப்பிய பெரியார்களுள் ஒருவர். இவர் சைவர்களால், சந்தான குரவர்களுள் ஒருவராக, மெய்கண்ட தேவருக்கு அடுத்த நிலையில் வைத்து மதிக்கப்படுகிறார். இவர் சிவஞான சித்தியார் எனும் புகழ் பெற்ற சைவ சித்தாந்த நூலை இயற்றியவர். சைவ சித்தாந்த

நூல்களுள் தலையாயதாகக் கருதப்படும் சிவஞான போதத்தை இயற்றியவரான மெய்கண்ட தேவரை இவர் ஆசிரியராகக் கொண்டார்.

இவர் தமிழ் நாட்டில் திருத்துறையூர் என்னும் ஊரில் ஆதிசைவர் குடும்பத்தில் பிறந்தவர். இவர் இளம் வயதிலே இலக்கண, இலக்கிய நூல்கள் பலவற்றையும் கற்றுத் தேர்ந்ததுடன், சைவ சித்தாந்தக் கோட்பாடுகளில் சிறந்த அறிவு கொண்டவராகவும் தான் அறிந்ததை மற்றவர்களுக்கு உணர்த்தும் திறமை பெற்றவராகவும் இருந்தார்.

**மெய்கண்டாரைக் குருவாகக் கொள்ளல்**

பல மாணவர்களுக்குக் கல்வி கற்பித்து வந்த இவர், தன்னுடைய மாணவர்களிற் பலர் திருவெண்ணெய் நல்லூரைச் சேர்ந்த மெய்கண்ட தேவர் என்பவரிடம் பாடங் கேட்கச் சென்று விட்டதை அறிந்தார். தனது அறிவில் இறுமாப்புக் கொண்டிருந்த அருணந்தியார், மெய்கண்ட தேவரின் சிறப்புத் தான் என்ன என்பதை அறிய விரும்பித் தனது மாணாக்கர்களையும் அழைத்துக்கொண்டு திருவெண்ணெய் நல்லுருக்குச் சென்றார். மெய்கண்ட தேவர், அருணந்தி சிவாச்சாரியாரிலும் வயதில் இளையவர். எனினும், அருணந்தியார் வந்ததைக் கண்டும் காணாதவர்போல இருந்து, மாணவர்களுக்கு ஆணவ மலத்தைப்பற்றிப் பாடம் நடத்திக் கொண்டிருந்தார். சினம் கொண்டு அங்கும் இங்குமாக நடந்து கொண்டிருந்த அருணந்தியார், இடையே குறுக்கிட்டு, ஆணவம் என்றால் என்ன என்று கேட்டார். அருணந்தியாரின் மனநிலையை உணர்ந்துகொண்ட மெய்கண்டார், அவரை நோக்கி, "நீர் நிற்கும் நிலைதான் அது" எனக் கூற, அருணந்தியார் தனது தவறை உணர்ந்து, மெய்கண்ட தேவரைத் தனது குருவாக ஏற்றுக்கொண்டார்.

**நூல்கள்**

மெய்கண்டாரின் தலைமை மாணவனாகத் திகழ்ந்த இவர், அவரால் இயற்றப்பட்ட தலை சிறந்த சைவ சித்தாந்த நூலான சிவஞான போதத்தைத் தழுவி, சிவஞான சித்தியார் என்னும் நூலை இயற்றினார். இந் நூலின் சிறப்புக்கு, சிவத்தின் மேல் தெய்வமில்லை சிவஞான சித்திக்கு மேல் சாத்திரம் இல்லை என்று வழங்கும் பழமொழியே சான்றாகும். சிவஞான சித்தியார் தவிர, மெய்கண்ட சாத்திரங்களுள் அடங்கும் இன்னொரு நூலான இருபா இருபஃது என்னும் நூலும் இவர் இயற்றியதே.

சந்தான குரவர்களில் மூன்றாமவரான மறைஞானசம்பந்தர் இவர் மாணாக்கர் ஆவார்

**மறைஞான சம்பந்தர்**

மறைஞானசம்பந்தர் 16ஆம் நூற்றாண்டில் சிதம்பரத்தில் வாழ்ந்தவர். சந்தான குரவர் மரபில் அருணந்தி சிவாச்சாரியாரின் சீடராக விளங்கியவர். மெய்கண்ட தேவரைப் போன்று பக்குவ நிலையை எய்திய மறைஞானசம்பந்தர் சைவசித்தாந்த வளர்ச்சிக்குப்

பங்களிப்புச் செய்துள்ளார். மறைஞானசம்பந்தரின் சைவப் பணிகளுள் பிரதானமானது சைவசித்தாந்த தத்துவ உண்மைகளை எளிமையான வடிவில் போதித்தமையாகும். தனக்கு முன்னர் வாழ்ந்த மெய்கண்டதேவர், அருணந்தி சிவாச்சாரியார் ஆகியோர் அருளிய சித்தாந்த நூல்களாகியசிவஞானபோதம், சிவஞான சித்தியார், இருபா இருபஃது ஆகிய நூல்களைக் கற்று அவை கூறும் சித்தாந்த உண்மைகளை தம் மாணக்கருக்குக் கற்பித்தார்.

மறைஞானசம்பந்தரது பெருமைகளையும், அவரது சைவ சித்தாந்தப் பணிகளையும், இவரின் சீடராகிய உமாபதி சிவாச்சாரியார் தனது நூல்கள் வாயிலாக வெளிப்படுத்தியுள்ளார். சந்தான குரவர் நால்வருள் மறைஞானசம்பந்தர் மட்டுமே சித்தாந்த நூல்கள் எதனையும் எழுதவில்லை.

**உமாபதி சிவாசாரியர்**

உமாபதி சிவாசாரியர், சைவ சித்தாந்த நூலாசிரியர்களுள் முக்கியமானவர். நாயன்மார்களுக்குப் பின் சைவ சித்தாந்தக் கோட்பாடுகளைப் பரப்பியவர்களுள் முக்கியமானவராக இவர் விளங்குகிறார். சைவர்களால் சந்தான குரவர்கள் என போற்றப்படும் நால்வருள் இவரும் ஒருவர். மெய்கண்ட சாத்திரங்கள் எனப்படும், சைவ சித்தாந்த நூல்கள் பதினான்கில் சிறிதும் பெரிதுமான எட்டு நூல்களை இயற்றியவர் இவரே.

**இளமைக் காலம்**

13 ஆம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியிலும், 14 ஆம் நூற்றாண்டின் முற் பகுதியிலும் வாழ்ந்த இவர் சிதம்பரத்திலே தில்லைவாழ் அந்தணர் மரபில் பிறந்தவர். இவர் மெய்கண்ட தேவரின் மாணவரான மறைஞான சம்பந்தரைக் குருவாகக் கொண்டு அவரிடம் சைவ நூல்களைப் பயின்றவர்.

**நூல்கள்**

மெய்கண்ட சாத்திரங்களுள் அடங்கும், சிவப்பிரகாசம், திருவருட் பயன், வினா வெண்பா, போற்றிப் பஃறொடை, கொடிக்கவி, நெஞ்சுவிடுதூது, உண்மை நெறி விளக்கம், சங்கற்ப நிராகரணம் என்னும் எட்டு நூல்கள் இவரால் இயற்றப்பட்டவை.

இவை தவிர, சேக்கிழாரின் திருத்தொண்டர் புராணத்தைச் சுருக்கித் திருத்தொண்டர் புராண சாரம் என்னும் பெயரிலும், சேக்கிழாரின் வரலாற்றைச் சேக்கிழார் புராணம் என்னும் பெயரிலும் எழுதினார். சிதம்பரம் கோயிலின் வரலாற்றைக் கோயிற் புராணம் என்னும் பெயரில் 100 பாடல்களால் பாடியுள்ளார். திருமுறை கண்ட புராணம், திருப்பதிக் கோவை என்னும் பிரபந்தங்களும் இவரால் இயற்றப்பட்டவையே.

**கொடிக்கவி பாடிய வரலாறு**

சிதம்பரம் கோயிலில் பூசை செய்யும் உரிமை கொண்ட தில்லை மூவாயிரவர்களுள் ஒருவர். இவர் தீட்சிதர் அல்லாதவரான ஒருவரைத் தனது குருவாகக் கொண்டார். இதனால் தில்லைவாழ் அந்தணர்கள் இவரைத் தங்கள் சமுதாயத்திலிருந்து நீக்கியதுடன் கோயிலில் பூசை செய்யும் உரிமையையும் மறுத்தனர். இதனால் இவர் சிதம்பரத்தை விட்டு நீங்கி வேறிடத்தில் வாழ்ந்துவந்தார். அடுத்த தடவை கோயிலில் கொடியேற்றுவதற்கென இவருடைய முறை வந்தபோது அதற்கான உரிமை இன்னொரு அந்தணருக்கு வழங்கப்பட்டது. எனினும் அவர் ஏற்றும்போது கொடி ஏறவில்லையாம். அப்போது சிவபிரானின் திருவருளால் உண்மை உணர்ந்த அந்தணர்கள் உமாபதி சிவத்தை வரவழைத்துக் கொடியேற்றும்படி கேட்டுக் கொண்டனராம். அச் சமயம் உமாபதியார் நான்கு பாடல்களைப் பாடி ஏறாதிருந்த கொடியை ஏற்றி வைத்தாராம். இவ்வாறு கொடியேறப் பாடிய நான்கு பாடல்களும் கொடிக்கவி என்ற பெயரில் மெய்கண்ட சாத்திரங்களுள் ஒன்றாக மதிக்கப்படுகின்றது.

## 5.2 கட்டுரைகள் - தமிழின் தெய்வீக தன்மை

நமது திருமுறைகள் – ஆசிரியர் ஆ. பக்தவச்சலம்

தமிழ் மொழி தெய்வீக தன்மை வாய்ந்தது. தெய்வமொழி தமிழ் என்றே சொல்லுவார்கள். இம்மொழியின் அருமையும் பெருமையும் அளவிடற்கரியது.

தமிழின் நீர்மை பேசித்தாளம் வீணை பண்ணி நல்ல
முழவமொந்தை மல்குபாடல் செய்கையிடம் ஓவார்
- திருமுறை 1-73-8

செந்தமிழ்ப் பாடல்கள் எங்கெல்லாம் பாடப்படுகின்றதோ, அங்கெல்லாம் சிவபெருமான் விளங்கி அருளுவார் என்கிறார் திருஞான சம்பந்தபெருமான். இவர் சொல்லுவதெல்லாம் சிவபெருமான் சொன்னதே ஆகும். ஏன் எனில்? இலம்பைங்கோட்டுர் பதிகத்தில் பத்து பாடல்களில் எனதுரை தனதுரையாகக் கொண்டவன் என்று சம்பந்தர் கூறியுள்ளதால் இதனை அறியலாம்.

அந்தனர்குலம் கவுணியர் கோத்திர நற்குடியில் அவதரித்தவர் திருஞானசம்பந்தப்பெருமான். தன்னை நால்வேத சதுரன் என்று சொல்லும் இப்பெருமான், சிவனடியை வாழ்த்தி வழிபட தேர்ந்தெடுத்தமொழி தமிழ்மொழியே என்கிறார்.

அருமறை ஞானசம்பந்தன் அந்தண்
சிரபுர நகருறை சிவனடியைப்
பரவிய செந்தமிழ் பத்தும் வல்லார்
திருவொடு புகழ்மல்கு தேசினரே

திருமுறை 1-109-11

தமிழிசையில் மிகு விருப்பமுடையவர் சிவபெருமான். இதனால் தான் திருநாவுக்கரசருக்கும் திருஞானசம்பந்தருக்கும் திருவீழிமிழலையில் தினமும் படிக்காசு அளித்து வந்தார் என்று சுந்தரமூர்த்தி சுவாமிகள் வாக்கினால் அறியமுடிகிறது.

திருவீழிமிழலை இருந்து நீர் தமிழோடு இசை கேட்கும்
இச்சையால் காசு நித்தல் நல்கினீர்

திருமுறை 7-88-8

தமிழால் இறைவனை வாழ்த்தி வணங்கவே தான் படைக்கப்பட்டதாக கூறுகின்றார் திருமூலநாயனார்.

என்னை நன்றாகப் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே

திருமந்திரம்

**மழையைப் பொழிவித்தது தமிழ்**

தருமபுர ஆதினத்து 14-வது பீடாதிபதியாக விளங்கியவர் கந்தப்ப தேசிகர் எனும் மாதவர். இவர் திருநெல்வேலியில் தங்கி நெல்லையப்பரை வழிபட்டு வருகிறார். அது சமயம் மழை இன்மையால் மக்கள் வரி செலுத்த இயலவில்லை. அனைவரும் ஆங்கிலேய கலக்டரிடம் சென்று வரியை தள்ளுபடி செய்யுமாறு வேண்டினார்கள். அந்த ஆங்கிலேய கலக்டர் ஊருக்குப் புதிதாக வந்துள்ள உங்கள் குருவிடம் சொல்லி மழையைக் கொண்டுவாருங்கள் என ஏளனமாக பதிலுரைத்தார். இச்செய்தி குருமகா சந்நிதானத்திடம் வந்தது.

குருமூர்த்திகள் தமது ஆத்மார்த்த Yமூர்த்தியாகிய சொக்கநாதப் பெருமானை தியானித்து

சைவ சமயஞ் சமயமெனில் அச்சமயத்
தெய்வம் பிறைசூடும் தெய்வமெனில் - ஐவரைவென்று
ஆனந்த வெள்ளத் தழுந்துவது முத்தி எனில்
வானங்காள் பெய்க மழை

எனும் பாடலைப் பாடிய உடனே பெருமழை பொழிந்து கிணறு, குளம், ஏரி யாவும் நிரம்பியது. இதை அறிந்த ஆங்கிலேய கலக்டரும் மாதவப்பெருமானிடம் வந்து வணங்கி நூறு பொற்காசுகள் காணிக்கையாக அளித்து ஆசிபெற்றுச் சென்றார்.

திருவாமாத்துர் கலம்பகத்தைப் பாடியவர்கள் இரட்டையர்கள் (குருடரும் முடவரும்) ஆமாத்துர் பெருமான் மாதை நாதர் பம்பை ஆற்றின் கீழக் கரையில் கோயில் கொண்டுள்ளார். ஆனால் இரட்டையர்கள் தமது கலம்பகத்தில் மேற்குக் கரையில் கோயில் கொண்டுள்ளதாகப் பாடிவிட்டார்கள்.

இப்பாடல் பொய்க்கக்கூடாது என்று திருவுளம் பற்றிய சிவபரம்பொருள் பெருமழையைப் பொழிவித்தது. கூம்பை ஆறும் வெள்ளம் மிகுதியினால் நிலைமாறி ஓடியது பாடலுக்கு ஏற்றபடி ஆலயம் மேற்குக்கரை கோயிலாக அமைந்தது. இப்படி பாடிய பாடலுக்கு ஏற்ப ஆற்றினை மாறி ஓடும்ிபடிச் செய்தது தமிழ்மொழி என்கிறார் வண்ணசரபம் தண்டபாணி சுவாமிகள் தாம் இயற்றிய தமிழ் அலங்காரத்தில்.

ஆலவாய் அமர்ந்த சொக்க நாதப் பெருமான் சேரமான் பெருமானுக்கு எழுதிய திருமுக பாசுரம் தமிழில் அமைந்துள்ளதை யாவரும் அறிவோம். மதிமலி புரிசை எனத் துவங்கும் இப்பாசுரம் தமிழ் வேதம் பதினொன்றில் சேர்க்கப்பட்டுள்ளது.

கொற்றங்குடி உமாபதி சிவாச்சாரியாருக்கு தில்லை கூத்தப்பெருமான் எழுதிய திருமுகமும் அழகிய செந்தமிழில் அமைந்துள்ளதும் நாம் அறிவோம்.

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்சோதியாகிய சிவபெருமானே சங்கப்புலவனாய் அமர்ந்து தமிழ் ஆய்ந்தது வேறு எந்த மொழிக்கு உண்டு என்பது சொல்லாமலே விளங்கும்.

குமரகுருபரர் மீனாட்சி அம்மை பிள்ளைத்தமிழை அரங்கேற்றம் செய்யும்பொழுது தொடுக்கும் கடவுள் எனும் பாட்டிற்கு மகிழ்ந்து, அர்ச்சகரின் மகள்போல வந்து தன் கழுத்தில் இருந்த முத்து மாலையை கழற்றி குமரகுருபரருக்குச் சூட்டியதாகவும் அறிகிறோம்.

குமரகுருபர சுவாமிகள் தெய்வத்தமிழ் (மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ் - 49) என்று தமிழைப் பாராட்டி மகிழ்கின்றார்.

முத்தமிழுக்கு பயனாகச் சிவபெருமானே உள்ளார் என்று மதுரைக் கலம்பகத்தில் கூறியுள்ளார்.

பண்முத் தமிழ்க்கொர் பயனே சவுந்தர பாண்டியனே
(குமரகுருபரர் - மதுரை கலம்பக பாடல் - 46)

முழுமுதற்பொருளாகிய சிவபெருமானே சுந்தரபாண்டியராகவும், உமாதேவியார் தடாதகைப் பிராட்டியாராகவும், முருகக்கடவுள் உக்கிர குமார பாண்ிடியராகவும்

அவதரித்ததற்கு காரணம் தண்டமிழின் இனிமையைப் பருகுதற்கேயாகும் என்று மதுரைக் கலம்பகத்தில் கூறுகின்றார் குமரகுருபரர்.

துமர நீர்ப் புவன முழுதொருங் கீன்றாள்
தடாதகா தேவியென் றொருபேர்
தரிக்கவந் ததுவுந் தனிமுத லொருநீ
சவுந்தர மாறனா னதுவும்
குமரவேள் வழுதி யுக்கிர னெனப் பேர்
கொண்டதுங் தண்டமிழ் மதுரம்
கூட்டுண வெழுந்த வேட்கையால் எனில்இக்
கொழிதமிழ்ப் பெருமையா ரறிவார்
(மதுரை கலம்பகம் - 93)

இப்படிப்பட்ட தமிழின் பெருமையை அளவிடமுடியுமா என்கிறார் சுவாமிகள்

அருணகிரிநாதர் தமிழால் வைதாலே வாழ வைப்பவன் முருகபெருமான் என்று தமிழின் அருமையைப் பாடுகின்றார்

முத்தமிழால் வைதாரையும் வாழவைப்போன்
(கந்தர் அலங்காரம்)

மூன்று வயதில் ஞானப்பாலுண்ட திருஞானசம்பந்தர் தமிழே சிவபெருமான், சிவபெருமானே தமிழ் என்கிறார்.

பண்ணும் பதம் ஏழும் பலவோசைத் தமிழவையும்
..
..
விண்ணும் முழுதானானிடம் வீழிம் மிழலையே
-முதல் வேதம்

இவற்றையெல்லாம் உணர்ந்த சேக்கிழார் பெருமான் இறைவனை அர்சித்து வணங்கவேண்டுமா தமிழால் பாடுங்கள். அர்ச்சனைப் பாட்டே யாகும் என்கிறார்

இதனைச் சுந்தரமுர்த்தி சுவாமிகள் மிக அழகாகக் கூறுகின்றார். சம்பந்தபெருமானும், நாவுக்கரசரும் பாடிய நற்றமிழ் பாமாலையே நாமும் பாடவேண்டும் என்பது பெருமான் விரும்புகின்றார் என்கிறார்.

நல்லிசை ஞானசம் பந்தனும் நாவினுக்
கரையனும் பாடிய நற்றமிழ் மாலை
சொல்லியவே சொல்லி ஏத்துகப்பானை

-திருமுறை 7-65-5

இத்தகைய தெய்வீகத்தன்மை உடைய தமிழ் மொழியில் அருளப்பட்டுள்ள தேவாரத்திருமுறைப் பாடல்களை ஒரு நெறிய மனத்துடன் பாடித் துதிப்போம் பிறவிப்பயன் பெறுவோம்.

## 5.3 கட்டுரைகள் - சைவத்தின் ஐம்பெருந்தூண்கள்

*சிவத்திரு கணேசன் அழகப்பன் – சிங்கப்பூர்*

எல்லாம் வல்ல இறைவன் எம்பிரான் சிவனே முழு முதற்கடவுள் என்ற திட நம்பிக்கைக்கு ஏற்றம் வண்ணம் எடுத்தியம்பிட ஏராளமான அற்புதங்கள் உண்டு. யார் நமது முதற்கடவுள் என்றும், அத்தகைய நமது நம்பிக்கையின் அடிப்படை என்னவென்றும் இளம் குழந்தைகளும் தெளிவுறும் வண்ணம், எளிதான ஒரு தெளிந்தக் கருத்தை விரிவுபடுத்த நாம், பிரம்மாண்டமானக் கட்டத்தைத் தாங்கி நிற்கும் தூண்கள் போன்று சைவத்தின் ஐம்பெருந்தூண்கள் என்ற அடிப்படையில் நமது தலைப்புப் பொருளைப் பற்றி சிந்திப்போம்.

**முதற் தூண் - ஒரே கடவுள்**

நம்மைப் போன்றே இறைவர் சிவனே இவ் அவனியில் முழுமுதற்கடவுள் என்று நம்புகிறவர்களே சைவர்கள் என்றும் சைவநெறியாளர்கள் என்றும் அறியப்படுகின்றனர். நமது நம்பிக்கை சைவம் என்று அறியப்படுகிறது. இந்த நெறியானது கி.மு. பலநூற்றாண்டுகளுக்கு முன்னதாகவேத் தோன்றிய மிகப்பழமையான நெறியாகும். இம்மண்ணுலகில் பிற மதநெறிகள் தோன்றுவதற்கு முன்னரே நிலைபெற்றிருந்த நெறியாகும். இறைவர் ஒருவரே என்பதுதான் நமது அடிப்படை முக்கியத்துவம் வாய்ந்தக் கருத்தாகும். அத்தகைய இறைவன் எவ்வடிவின்னுமல்லன், எந்நாமமும் (பெயரும்)கொண்டிருக்கவில்லை, மனிதக்கற்பனைக்கு அப்பாற்பட்டவர். ஆனால் அவர் நம்மீது அன்புசெலுத்துகின்றக் காரணத்தால் அவர் எண்ணிறந்தத் திருப்பெயர்கள் கொண்டும், ஏராளமான அற்புதப் பண்புகள் கொண்டும்,பலவடிகளை மேற்கொள்கிறார். அத்தகையத் திருப்பெயர்களில் மிக முக்கியமான அவரது பெயர் சிவபெருமான். அவரே இறைவர் "சிவன்" என்றும் பெயர் பெறுகிறார்.

இறைவர் சிவன் மூன்று வழிகளில் தம்மை வெளிக்காட்டுகிறார்.

- மனிதவடிவில் - அப்போது அவர் மகேசுவரன் எனப்படுகிறார்.(எ.கா) நடராஜர், மற்றும் தட்சிணாமூர்த்தி.
- முற்றிலும் யாதொரு வடிவுமில்லாமல்-அங்கு அவர் சிவன் என்று அழைக்கப்படுகிறார். (எ.கா) காற்று, நீர்,ஒலி,விண், மற்றும் ஒளி.

- அருவமான உருவம் என்ற சிறப்பு அமைப்பு, அதாவது உருவமில்லாத வடிவம். இங்கு அவர் சதாசிவன் என்று அழைக்கப்படுகிறார். இந்த வடிவமே நாம் அனைத்து சிவாலயங்களிலும் காணுகின்ற சிவலிங்கம்.

**<u>இரண்டாம் தூண் - இரண்டு சின்னங்கள்</u>**

சமயச் சின்னங்கள் நமக்கு ஒரு அடையாளத்தையும், ஈடுபாட்டையும் அளிக்கின்றன. சைவநெறியில் இரு புனிதச் சின்னங்களுண்டு.

**முதற்சின்னமாவது நீறு ( திரு நீறு அல்லது பூதி ) :-**

இந்த நீறு உலர் பசுசாணத்தினின்றும் சிறப்பு முறையில் தயாரிக்கப்படுகிறது.

- வெண்மை நிறமானது, தூய எண்ணங்களையே நமது உள்ளத்திலும், ஆழ் இதயத்திலும் எப்போதும் நிலை நிறுத்த வேண்டும் என்றும் நினைவுறுத்துவதாகும்.
- இதன் எளிய தோற்றமானது நாம் எப்போதுமே ஆணவம் விட்டொழித்து எளிய மனத்திராயும், எளிய வாழ்வுமுறையினராயும் இருக்க வேண்டும் என்று நம்மை வலியுறுத்துகிறது.

**புனிதத் திருநீற்றினைப் கையாளும் முறைகள்:**

1. திருநீற்றினைப் பெறுகின்ற போது இடது உள்ளங்கையின் மீது வலது உள்ளங்கையை வைத்து அவ்வலக்கரத்தால் மிகப்பணிவுடன் திருநீற்றைப் பெறுதல் வேண்டும். முகத்தினை மேல்நோக்கி நிமிர்த்தி சிவசிவ என்ற திரு நாமத்தினைத் தரிக்க வேண்டும். உடற்பகுதி, கழுத்துப்பகுதி இவைகளில் பூசுவதன் நிமித்தம் அத்திருநீற்றினை இடதுகைக்கு மாற்றுதல் என்பது கூடாது.

2. திரு நீற்றினை நமது நெற்றியில் ஒரே பட்டையாகப் பூசுதல் வேண்டும்.இது நிர்மலமான இறைவர் சிவனார் தம்மை எப்போதும் காத்து நிற்கிறார் என்பதை நமக்கு நினைவுறித்துவதாகும்.மற்றொரு வகையில் இத்திருநீற்றினை மூன்று கோடுகளாகவும் நமது நெற்றியில் தரிக்கலாம். இது இவ்வுலக பந்தத்தில் நம்மைக் கட்டுகின்ற மூன்று மன அழுக்குகளிலிருந்தும்(மும்மலங்கள்) நம்மை விடுபடச்செய்ய இறைவனின் அருளை வேண்டுவதாகும்.

**இரண்டாவது சின்னமாவது உருத்திராட்ச மணிகள்:-**

சைவநெறியாளர்களுக்குரிய இரண்டாவது மங்கலச் சின்னமாவது உருத்திராட்ச மணிகள். "உருத்திர" என்பது செம்மேனி கொண்ட இறைவன் எனப்பொருள்படுகிறது.

அன்பினால் அல்லாது அறியாமையில் இறைவனைத் தேடமுற்பட்ட அயன் மற்றும் மாலுக்கு, அனல் பிழம்பின் வண்ணமான் செம்மேனியனாக்க் காட்சியளித்தார்

என்பதையே இது குறிக்கிறது. "அட்ச"(அக்ச)என்பது இறைவர் சிவனின் மூன்று கண்களையும் குறிப்பதாகும் தொன்மை ஏடுகளிலிருந்து நாம் தெரிந்து கொள்கின்ற உண்மை யாதெனின் மூன்று அசுரர்களும் இவ்வுலகிர்குச் செய்த கொடுமைகளின் விளைவாக ஏற்பட்டத் துன்பநிலை கண்டு வருந்திய இறையனார் உதிர்த்த கண்ணீர் துளிகளிலிருந்து முளைத்த மரங்களின் விதையே இந்த ருத்ராட்ச மணிகள் என்பதாகும். இத்தகைய ருத்ராட்ச மணிகளை மாலையாக அணிபவர்கள் எல்லா இடையூறுகளிலிருந்தும் விடுவிக்கப்படுவார்கள் என்று கருனைக் கடலான நம் இறையனாரே அறிவித்திருக்கிறார். இவ்விதம் அணியும் போது இறைவர் சிவன் தமது அருளை அனைவர்பாலும் பொழிந்து துன்பங்களிலிருந்து காத்தருளிகிறார்.

**மூன்றாம் தூண் - முப்பெருங்கடமைகள்:-**

**முதற்கடமை :-** இறைவர் சிவனே மூலமுழுமுதற்கடவுள் என்பதனை என்றும் நினைவு கூற கீழ்க்காணும் பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

- இன்பத்திலும் துன்பத்திலும் அவர் மீது,அவர் ஒருவரே மீதே உறுதியான நம்பிக்கை வைத்திருத்தல்.
- இறைவரின் சித்தப்படியே எல்லாம் நிகழ்ந்தேறுகின்றன என்பதை ஐயந்திரியுற அச்சமின்றி ஏற்றுக்கொள்ளல்.
- நமக்களிக்கப்படும் எல்லாப் பணிகளையும் அவரது பெயராலே மேற்கொண்டு விளைவுகளை அவரிடமே ஒப்படைத்திட வேண்டும்.
- அதிகாலையும் , அந்திசாயும் நேரமும் அவரை கனிந்த மனத்தோடும் தெளிந்த இதயதோடும் கீழ்க்கண்டவாறு வணங்கிடல் வேண்டும்.
  - இறைவன் புகழ்பாடும் பன்னிருத் திருமுறைப்பாடல்களைப் பாடுதல்.
  - அவரது திரு நாமம் ஓதி வருதல். குறிப்பாக ஐந்தெழுத்து மந்திரம்.
  - அவரது ஆலயத்தினை சுத்தப்படுத்தல்,விளக்கேற்றுதல் போன்ற உழவாரப் பணிகளை மேற்கொள்ளுதல்.
  - திருமுறைப் பாடல்களின் பொருளுணர்ந்து சைவநெறிகளைத் தெறிந்துகொள்ளுதல்.
  - சிவபக்தர்களிடம் அன்புடன் உரையாற்றி அவர்களுக்கு அமுதுபடைத்தல்(உணவளித்தல்).
  - நமது விருப்பத்திற்கு மாறான நிகழ்வுகள் நேரிடும் போது ஒருபோதும் கோபம் கொள்ளுதல் ஆகாது.எது நேரினும் அது இறைவன் சித்தமே. அவரே நம்மைக் காத்துக்கொள்வார் என்று அமைதியுடன் ஏற்றுக்கொள்ளவேண்டும்.

**இரண்டாவது கடமை :-**நம்மைச் சுற்றியுள்ள எல்லோர் மீதும், எல்லாவற்றின் மீதும் அன்புபாராட்ட அடியிற்காண் வழிமுறைகளைப் பின்பற்றிட வேண்டும்.

- எல்லா உயிரின்ங்களையும் படைத்த இறையனார் அவற்றோடு இணைத்தே நம்மையும் படைத்தார்.இறைவரின் எல்லாப் படைப்பையும் நேசிப்பதே நமது சைவப் பணியாகும் என்பதை ஏற்றுக்கொள்ளவேண்டும்.ஆகவே நமது சுற்றுச் சூழலைப் பற்றிய ஒரு கவனம் நம்மிடையே இருத்தல் வேண்டும்.நாம்

இறைவர் சிவனை உண்மையிலேயே நேசிப்பதாக இருப்பின் ஊன் உண்ணுதலை அறவே மறுத்திடல் வேண்டும்.

- சிவனைப் புரிந்துக்கொண்டு சிவனின் சித்த்த்தில் பற்றுடையவராயின், நம்மை ஆழ்த்தியுள்ள ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மலங்களையும் வெற்றிகொள்ளலாம்.

**மூன்றாவது கடமை :-** சைவந்றியினை வளர்த்து சிவனருட் செல்வர்களுக்கு துணைநிற்றல்.

- அகில உலகிலும் அன்பே சிவம் என்று அறுதியிட்டுக் கூறிய ஆதி நெறியே நமது சமயம்.இந்நெறியிலுள்ள முற்கால முற்கால் நம்பிக்கையைப் பாதுகாத்தலும், பரப்புதலும் நமது கடமையாகும்.ஆகவே நமது முற்கால சிவாலயங்களைப் பராமரித்தல், ஆலயங்களில் சைவநெறிமுறை பற்றிய சமய வகுப்புகள் நடைபெறுதல் போன்ற வகைகளுக்கு நாம் நமது பங்களிப்பைச் செய்யவேண்டும்.தேவையெனில் இவ்வாலயங்களில் தொண்டாற்றும் ஓதுவார்கள், குருக்கள், இசைக்கலைஞர்கள், துப்புரவாளர்கள், காவலர்கள் மற்றும் பல்வகைப் பணியாளர்களின் தேவைகளுக்கு இயன்ற வகையில் உதவி செய்தல் வேண்டும்.
- பன்னிரு திருமுறைகளிலுள்ள 18246 பாடல்களில் காணும் நமது தத்துவங்கள் எல்லாமே நற்றத் தமிழில் அமைந்துள்ளன.எனவே குறிப்பாக சிவாலய வழிப்பாட்டின்போது நமது தாய்மொழியாம் தமிழ் மொழி நல்ல பயில் மொழியாக இயங்கிட வழிவகைகள் செய்திடல் வேண்டும். ஆலவாய் அண்ணல் சிவன் உள்பட பலதிருமுறை ஆசிரியர்கள் நமது எழில் கொஞ்சும் தமிழ்மொழியிலேயேப் பாடல்கள் இயற்றி அருளியுள்ளனர்.எனவே இறைவனின் பொற்பாதம் தேடும் நமது நற்பணியில் சிவமும் தமிழும் நிச்சயமாக நமது இருகண்களாகத் திகழவேண்டும்.
- இறுதியாக உண்மையான சமய நெறியாளர்கள் மற்றும் அதனைப் பின்பிற்றுபவர்கள் இல்லாமல் ஒருசமயம் என்பது நிலைபெற இயலாது.எனவே எத்தகையப் பின்னணியில் உள்ளவர்களாயினும் சிவநேயச் செல்வர்களின் நலன் காக்கப்பட வேண்டும்.எவ்வகையிலேனும் இத்தகைய சைவ நெறியாளர்களின் முன்னேற்றத்திற்கு, அவர்கள் இவ்வுலகில் எந்த எல்லையிலிருந்தாலும்,(மூலையிலிருந்தாலும்)நாம் பெரிதும் உதவிட வேண்டும்.

**நான்காவது தூண் :- நான்குபடிகள்:-**

இறைவரை அடைவதற்கு எண்ணிறந்த வழிகள் உண்டு ஆயினும் இறைவனைத் தொழுது அவரது அன்பான உறவினைத் தொடர்வதற்கு ஏற்றவகையில் ஒரு நான்கருக்கு ஆன்மவழியில் சைவமானது நம்பிக்கை வைத்துள்ளது.அவையாவன சரியை, கிரியை, யோகம் மற்றும் ஞானம் என்பவையாகும்.ஒவ்வொரு படியும் முந்தைய நிலைக்கு அறைகூவல் விடுவது போன்று ஒருவிஞ்சிய நிலை.இறைவர் ஒவ்வொரு நிலையினருக்கும் வெவ்வேறு வகையில் அருள்பாலிக்கிறார்.இந்நாங்கு நிலைகளுமே மிக முக்கியமானவையே இவற்றை முழுமனத்தோடும், நிறைந்த பக்தியோடும் பின்பற்றுவதே இறைவரைச் சேர வழியாகும்.பக்தியென்பது

இறைவரிடமிருந்து திரும்ப எதையும் எதிர்நோக்காது இந்நான்கு படிகளையும் இணைக்கும் பொதுவான நூலிழைதான் பக்தி என்பது.

**சரியை (புறவழிபாடு):-**

- இது இறைவனை வழிபாட்டு முறையை குறிக்கிறது.இறைவனின் சேவகர்கள் என்றமுறையில் இறைவரை அணுகுவதற்குரிய முதல்நிலையே இது. இந்த நிலையில் உள் அடங்கிவையாவன.
    - ஆலயங்களைத் தூய்மைப் படுத்துதல், ஆலயங்களில் விளக்கேற்றுதல் சிவலிங்கத்தை நன்னீராட்ட ஆலயக் குருக்களுக்கு உதவிசெய்தல், தனிப்பட்ட முறையில் சிவபூஜை செய்தல், ஆண்டவனை அலங்கரிக்க மலர் மாலை புனைதல்.
    - பிறரையும் இதுப்போன்றப் புறவழிபாட்டுப் பணிகளில் ஈடுபடச்செய்தல்.ஆலயநிர்மானம் அல்லது புனர் நிர்மானமும் இதில் அடங்கும்.
    - இத்தகையப் பக்தி நெறியாளர்களுக்கு இறைவர் சிவன் தம்மை உணர்த்தாமலே அருள் பாலிக்கிறார்.அன்னைப் பசுவைக் கண்ணால் காணாமலேயேப் பசியாறப் பால் குடிக்கும் கன்றினைப் போன்றதே இந்த நிலை.

**கிரியை (அகவழிபாடு):-**

நன்மக்க்கள் தங்கள் அன்புடைத் தந்தையை நினைப்பது போன்று இதயத்தால் இறைவனை வழிப்பட்டு அவரது ம்ந்திரங்களை உச்சரிக்கும் நிலைதான் இது.

- மந்திரங்கள் ஓதுவதன் மூலம் புறவழிபாடு உள்நோக்கித் தூண்டப்படுகிறது.
- சிவமந்திரங்கள் ஓதப்படுகின்ற வேளைகளில் எந்த வகையில் சிவன் நினைக்கப்படுகிறாரோ அவ்வகையில் காட்சிகொடுத்து அருள்பாலிக்கிறார்.அன்னைப் பசுவை எண்ணிய மாத்திரத்தில் பாலைப் பெறுகின்ற கன்றினைப் போன்றதுதான் இந்த நிலை.

**யோகம் (மன ஒருமைபாடு):-**

- அகக்  கண்ணால் ஆண்டவன் பால் தமது சிந்தனைகளை ஒருநிலைப் படுத்துவதே இந்தநிலை. நண்பன் ஒருவன் எப்போதும் தன் உற்ற நண்பனையே எண்ணியிருப்பதுபோலவே இந்த நிலை.
  இதில்,
- சிவனாரின் குறிப்பிட்ட ஒரு சிறப்பினை நெஞ்சில் நிறுத்தி சிவனையெண்ணி தவநிலை மேற்கொள்வதே இந்த நிலையில் அதிக கவனம் பெறுகிறது.
- இந்நிலையில் இறயனார், தவமேற்கொண்டவர் தன்னை எண்ணியப்படியே தம்மை வெளிப்படுத்தி அவருக்கு அருள்பாலிக்கிறார்.அன்னைப் பசுவின் அடிமடியில் தன் வாய் வைத்தவுடனே பால் பருகும் பசுங்கன்று போல்தான் இந்த நிலை.

**ஞானம் அல்லது வீடு (அருளொளி அருளல்):-**

- எங்கும் எல்லாமே சிவனது கருனை மற்றும் அருளின் பிரதிபலிப்பே என்று ஒரு இறுதியான உணர்வினையோ அன்றி அனுபவத்தினையோ, ஒரு உயிர்நிலை ஆண்டவனையுணர்ந்து போன்ற தன்மையைக் குறிக்கிறது.
- சத்து என்று அழைக்கப்படும் ஆன்மாவின் துணையின் தேடல் அனுபவம் காரணமாக்க் கிடைத்திடும் ஓர் ஆன்மீக அறிவு.
- ஒவ்வொரு தனிவாழ்வின் நோக்கமே இறை உணர்வு என்ற அருள் ஒளி (சித்து தான்).
- தாய்ப் பசுவின் தனிப் பெருங்கருணையை உணர்ந்து கொண்ட கன்றிற்குத் தாயாகவே பால் சுரக்கும் ஆவின் மடியைப் போன்று என்றும் நிலைபெறும் பேரானந்தம் அல்லது பற்றறு நிலை (ஆனந்தம்) என்பது இறைவன்.சிவனாரால் அருளப்படும் ஒரு இறுதிநிலை.

**ஐந்தாவது தூண் (ஐந்தெழுத்து):-**

- சிவாயநம அல்லது நமச்சிவாய என்ற ஐந்தெழுத்து மந்திரம் (பஞ்சாட்சரம்) என்பது வேதம் ஆகமம், பன்னிரு திருமுறை மற்றும். பதினாங்கு சித்தாந்த சாத்திரம் போன்ற சைவத் தத்துவங்களுக்கெல்லாம் மூலமாகும்.இது நாம் மற்ற நம் இறைவரின் நாயாகரணமாகும். அடியாற்கையில் கிடைத்த அற்புதச் சொல்மாலை.
- இம் மந்திரத்தின் ஐந்து பண்புகளாவன:-
- எழுத்து அல்லது சொல்வடிவிலான இந்த மந்திரம் இறைவனின் மந்திரத் திருமேனியைக் குறிக்கிறது.
- வடிவில்லா அத்தன்மையால் இறைவன் பல வகையில், அதாவது எழுத்து வடிவமான பஞ்சாக்கர மந்திரத்தைப் போன்று தோற்ற வடிவினனாகவும் உச்சரிக்கப்படுகின்ற ஐந்தெழுத்து மந்திரத்தைப் போன்று ஒலி வடிவினனாகவும், அம்மந்திரத்தைச் சிந்தை செய்தல் அல்லது உட்பொருள் உணர்தல் தன்மையினால் உளவடிவின்னாகவும் தோற்றமளிக்கிறார்.
- வணங்குதல், ஓதுதல், தவநிலை, ஆன்மீக அனுபவம், போன்ற நான்கு நிலைகளுக்குமே இதுவே ஒரு இணை மையமாகும்.

**சி :- பரமாத்மாவான முழு முதற்கடவுளைக் குறிக்கிறது.**
**வ:- ஆன்மாவின் மீது சிவனின் கருனையைக் குறிக்கிறது.இது அன்னை பார்வதி(உமையவள்)யின் வடிவமாக உருவகப் படுத்தப் படுகிறது.**
**ய:- ஜீவாத்மா எனப்படும், ஒவ்வொரு படைப்பின் ஆன்மாவைக் குறிக்கிறது.**
**ந:- ஆனமாவின் இறை உணர்வை மறைக்கின்ற அறியாமை எனும் திரையைக் குறிக்கிறது.**
**ம:- முற்றிலும் அழிக்கப்பட வேண்டிய மும்மலங்களான ஆணவம் கன்மம் மாயை இவற்றினைக் குறிக்கிறது.**

ஐந்தெழுத்து மந்திரம் ஓதுவதற்குரிய சில அடிப்படை உண்மைகள்.

- உள்மனத்திலோ அல்லது உரக்க உச்சரித்தோ, அதிகாலை மற்றும் அந்திசாயும் வேளைகளில் 108 முறை ஓதவேண்டும். மண்ணுலக

மகிழ்ச்சிக்கு நமச்சிவாய என்றும், விண்ணுலகப் பேரானந்தத்திற்கு சிவாயநம என்றும் ஓத வேண்டும்

- ஓதுகின்றவேளைகளில் ஐந்தெழுத்து மற்றும் அதன்உட்பொருளைத் தியானம் செய்யவேண்டும்
- இம் மந்திரங்களே எல்லையற்ற இறைப்பேரறிவையும், என்றும் மாறாத எளிமை கலந்த விழிப்புணர்வையும் எல்லாவகைத் திறமைகளையும், மண்ணுலக நற்பயன்களையும் நமக்குத் தருகின்றன.
- ஆணவம் என்ற இருளையகற்றி, தன்னுணர்வுப் பாதையில் ஒளியேற்றும் அற்புத சக்தி இந்த மந்திரங்களின் உள்ளே நிறைத்திருக்கின்றன.
- கர்மவினைகளினால் வரும் துன்பங்களை நீக்குவதற்கும், தீங்கு விளைவிப்போரை வீழ்த்துவதற்கும் இதுவே உரிய தவமாகும்
- எல்லாம் வல்ல முழுப் படைப்பாளியின் பெயராக விளங்கி நிற்கின்றத் தன்மையால் இது பகையை ஒழித்து அன்பும் அமைதியும் நிலைப்பெறச் செய்கிறது.

"வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதுஎல்லாம் அரநாமமே
சூழ்க வையகமும் துயர் தீர்கவே"

-திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் 3.54.1

## 5.4 கட்டுரைகள் – இணையத்தில் சைவம்

http://www.tamilvu.org

தமிழ் இணையக் கல்விக் கழகம், தமிழக அரசால் நடத்தப்படுகின்றது, உலகில் நாற்பதுக்கும் மேற்பட்ட நாடுகளில் பரவி வாழும் தமிழர்கள் தங்களுடைய மரபுகளையும், விழுமியங்களையும், பண்பாட்டையும் பாதுகாக்க வேண்டும். இத்தேவையை நிறைவேற்ற அவர்கள் தங்கள் மொழி, கலை, இலக்கியம் இவற்றோடு நீங்காத தொடர்புடன் வாழ வேண்டும். உலகு தழுவி வாழும் தமிழ் மக்களின் பண்பாட்டுத் தேவைகளை மனத்திற்கொண்டு நடத்தப்படுகின்றது. மின்நூலகம் இணையவழிக் கல்வித் திட்டங்கள் என்று பல செய்திகள் அடங்கியுள்ள இணையத்தளம். தமிழ் இலக்கியங்கள், சைவ சமய நூல்கள், கட்டுரைகள் அடங்கிய இணையத்தளம்.

www.thevaaram.org

தருமபுரம் ஆதீனம் உருவாக்கியுள்ள முழுமையான திருமுறைகளுக்கான இணையத்தளம். பன்னிரு திருமுறைகள் பாட்டும் பொருளும், சைவ சமயச் சாத்திர நூல்கள், திருமுறைக் கட்டுரைகள், திருமுறை ஆசிரியர்கள் வரலாறு, காணொளி, அனைத்து நாட்டினரும் பயன்பெறும் வகையில் பல மொழிகளில் பன்னிரு

திருமுறைகள் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. பன்னிரு திருமுறைகள் ஒலி வடிவத்திலும், திருமுறைத்தலங்கள் காணொலியும் இடம்பெற்றுள்ளது.

http://singaithirumurai.org/

சிஙகை திருமுறை மாநாட்டு ஏற்பாட்டுக்குழுவால் அமைக்கப்பட்ட இணையத்தளம், ஆண்டுதோறும் நடைபெறும் மாநாடு, திருமுறைப் போட்டிகள் விபரங்கள், கல்விக்கழக பாடத்திட்டங்கள் விபரங்கள், ஒலிப்பேழைகள் இடம்பெற்றுள்ளன. நடப்புச் செய்திகள் போட்டி முடிவுகள் ஆண்டுதோறும் வெளியிட பயன்பட்டுவருகின்றது.

http://shaivam.org/

சிவ வழிபாட்டை பரப்பும் நோக்கில் அமைந்துள்ள இணையத் தளம். 1996 முதல் செயல்பட்டு வருகின்றது. 5000 மேற்பட்ட பக்கங்களும்,புத்தகங்களும், திருமுறை ஒலிப்பதிவுகள், பல மொழியில் இடம்பெற்றுள்ள சைவ சமய நூல்கள், வேதங்கள், ஆகமங்கள் அடங்கிய முழுமையான இணையத்தளம்.

http://panniruthirumurai.org/

**பன்னிரு திருமுறை ஆய்வு மையம்** :: கற்பகம் பல்கலைக்கழகம்
ஒவ்வொரு திருமுறைகளையும் ஆய்ந்து ஒவ்வொரு பதிகச் சிறப்பினையும் அதன் பண் மற்றும் தாளம் ஆகியவற்றை ஆய்வு செய்து விரிவாக விளக்கி வெளியிட்டுள்ள நூல்கள் கொண்ட இணையத்தளம்.

http://www.noolaham.org

இலங்கைத் தமிழ் பேசும் சமூகங்களின் எழுத்தாவணங்களை எண்ணிமப்படுத்தி ஆவணப்படுத்தும் செயற்பாடுகளை ஊக்குவிப்பதோடு, தகவல் வளங்களையும் அறிவுச்சேகரங்களையும் ஒழுங்குபடுத்தி அனைவருக்கும் கிடைக்கச் செய்துவரும் இலாப நோக்கற்ற இணையத்தளம். இலங்கையில் வெளிடப்பட்ட பல பயனுள்ள சைவ நூல்கள் இத்தளத்தின் நூலகத்தில் கிடைகின்றன.

http://www.kaumaram.com

முருக வழிபாட்டினைப் பற்றிய முழுமையான தளம், அருணகிரிநாதர் முதல் பல அருளாளர்கள் அருளிய முருகனைப்பற்றி பாடிய பாடல்கள் இடம்பெற்றுள்ளன. முருகன் குடிக்கொண்டுள்ள தலங்கள் பற்றிய குறிப்புகள், விழாக்கள், நூல்கள் ஆகியவை இடம்பெற்றுள்ளன.

கடல்கடந்து வாழும் சைவர்களுக்கு இணையத்தில் கிடைக்கும் பல அரிய தமிழ் சைவ நூல்கள் பல பயனகளைத் தருகின்றது. இன்னும் தேடினால் பல வலைத்தளங்களில் பல சைவசமய நூல்கள் கிடைகின்றன.

## 5.5 திருத்தலங்கள் – திருவையாறு (ஐயாறப்பர் கோவில்)

இறைவன் பெயர் ஐயாறப்பர் , பஞ்சநதீஸ்வரர்

இறைவி பெயர் தர்மசம்வர்த்தினி, திரிபுரசுந்தரி

பதிகம்

திருநாவுக்கரசர் - 12

திருஞானசம்பந்தர் - 5

சுந்தரர் - 1

காவிரிக்கரையில் காசிக்கு சமமாகக் கருதப்படும் 6 சிவஸ்தலங்களில் திருவையாறும் ஒன்றாகும். மற்ற 5 சிவஸ்தலங்கள் 1. திருவெண்காடு, 2. சாயாவனம், 3. மயிலாடுதுறை, 4. திருவிடைமருதூர் மற்றும் 5. திருவாஞ்சியம்.

கோவில் அமைப்பு: திருவையாறு சுமார் 15 ஏக்கர் பரப்பளவில் 7 நிலைகளையுடைய ராஜகோபுரமும், 5 பிரகாரங்களும் உள்ள ஒரு பெரிய கோவிலாகும். திருவையாறு மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய முச்சிறப்பும் உடைய தலமாகும். முதல் பிரகாரத்தில் எழுந்தருளியுள்ள தக்ஷிணாமூர்த்தம் மிகச் சிறப்புடையது. இரண்டாம் பிரகாரத்தில் சோமஸ்கந்தருக்கு தனி ஆலயம் உள்ளது. அருகில் உள்ள ஜப்பேசுரமண்டபத்தில் பஞ்சபூதலிங்கங்களும், சப்தமாதர்களும், ஆதிவிநாயகரும், நவகிரகங்களும் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கின்றன. மேலும் இச்சுற்றில் விநாயகர், சுப்பிரமணியர், சோமச்கந்தர், தட்சினாமூர்த்தி, நடராஜர் ஆகிய திருவுருவங்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளன. மூன்றாம் பிரகாரத்தில் கிழக்கிலும் தெற்கிலும் இருகோபுரங்கள் உள்ளன. நான்காம் பிரகாரத்தில் சூரியபுஷ்கரணி தீர்த்தமும், அப்பர் கைலாயக் காட்சி கண்ட வடகயிலாயம் அமைந்துள்ளன. இச்சுற்றின் 4 புறமும் கோபுரங்கள் இருக்கின்றன. ஐந்தாம் பிரகாரத்தில் கிழக்கு நோக்கிய ஐயாரப்பன் சந்நிதியும் திரிபுரசுந்தரி சந்நிதியும் இருக்கிறது. சுவாமி சந்நிதியிலும், அம்பாள் சந்நிதியிலும் தனித்தனியாக ராஜகோபுரங்கள் உள்ளன. இறைவன் சந்நிதி கருவறை விமானத்தின் பின்புறக் கோஷ்டத்தில் அமைந்துள்ள அர்த்தநாரீஸ்வரர் சிற்பம் சற்று மாறுபட்டது. வழக்கமாக இந்த அர்த்தநாரீஸ்வரர் சிற்பங்களில் சிவபெருமான் வலப்புறமும், உமையம்மை இடப்புறமும் தான் காணப்படுவர். ஆனால் இங்கு சிவன் இடப்புறமும் உமை வலப்புறமும் அமைந்திருப்பதைக் காணலாம். மேலும் இறைவன் கருவறையை சுற்றி வர முடியாது என்பதும் இத்தலத்தின் முக்கிய அம்சம், இறைவனின் கருவறையில் விரிசடை படர்ந்திருப்பதால் அதை சென்று மிதிக்கக் கூடாது என்பதால் கருவறை சுற்றுப் பிராகாரத்தை வலம் வரக்கூடாது என்பது இத்தலத்தில் கடைபிடிக்கப்படுகிறது.

தென் கைலாயம்

இத்தலத்திலுள்ள வடகயிலாயம், தென்கயிலாயம் ஆகிய இரு சந்நிதிகள் முக்கியமானவை.. இக்கோவிலின் மூன்றாம் பிரகாரத்தின் வடபுறம் "ஓலோக மாதேவீச்சுரம்" என்ற கற்கோவில் உள்ளது. இது "வட கைலாயம்" எனப்படும். அப்பர் கைலாயக் காட்சி கண்ட வடகயிலாயம் முதல் இராஜராஜசோழனின் பட்டத்தரசி உலகமகாதேவியால் எழுப்பப்பட்டது. மூன்றாம் பிரகாரத்தின் தென்புறம் "தென் கைலாயம்" எனப்படும் கற்கோவில் உள்ளது. இது முதலாம் இராஜேந்தர சோழனின் மனைவிகளில் ஒருவரான பஞ்சவன்மாதேவியால் பழுது பார்க்கப்பட்டு திருப்பணி செய்யப்பட்டுள்ளது.. சந்நிதி முன்னுள்ள சொக்கட்டான் மண்டபம், கீழைக் கோபுரத்திற்கு அருகிலுள்ள நூற்றுக்கால் மண்டபம் ஆகியவை கட்டட, சிற்பக்கலைச் சிறப்பு மிக்கவை.

இறைவனுக்கும், இறைவிக்கும் கிழக்கு நோக்கியவாறு உள்ள சந்நிதிகளைக் கொண்டு தனித்தனி கோவில்கள் உள்ளன. மூலவர் ஐயாறப்பர் ஒரு சுயம்பு லிங்கமாகும். இந்த லிங்கம் ஒரு பிருத்வி லிங்கம் ஆகையால் அபிஷேகம் செய்யப்படுவதில்லை. ஆவுடையார் மேல் மட்டுமே அபிஷேகம் செய்யப்படும். லிங்கத் திருமேனிக்கு புனுகுச் சட்டம் மட்டுமே சாத்தப்பெறும். திருக்கச்சி ஏகம்பம் ஆலய மூலவர் ஏகாம்பரநாதரும் ஒரு பிருத்வி லிங்கம் ஆதலால் அங்கும் புனுகுச் சட்டம் மட்டுமே சாத்தப்பெறும். திருவாரூர் ஆலய மூலவர் வன்மீகநாதரும் ஒரு பிருத்வி லிங்கம் என்பது குறிப்பிடதக்கது. இறைவி தர்மசம்வர்த்தினி காஞ்சி காமாட்சியைப் போன்றே இறைவனிடம் இருநாழி நெல் பெற்று 32 அறங்களையும் செய்தமையால் அறம் வளர்த்த நாயகி என்றும் அறியப்படுகிறாள். இத்தலத்தில் இறைவி இடக்கரம் இடுப்பில் ஊன்றியுள்ளபடியும், மேல் இரு கரங்களில் சங்கு சக்கரம் போன்றவையுடன் காணப்படுவதால் இத்தலத்தில் அம்பிகை மஹாவிஷ்னு ஸ்வரூபத்தில் தோற்றமளிக்கிறாள்.

திருப்புகழ் தலம்: இத்தலத்தில் முருகப்பெருமான் வில், வேல், அம்பு ஆகிய படைக்கலங்களுடன் வில்லேந்திய வேலவனாக "தனுசுசுப்ரமணியம்" என்ற பெயருடன் விளஙகுகிறார். இவர் ஒரு திருமுகமும் நான்கு திருக்கரங்களும் கொண்டு நின்ற திருக்கோலத்தில் பின்புறம் மயில் விளங்கக் காட்சி தருகின்றார். மயிலின் முகம் தெற்கு நோக்கி உள்ளது. அருகில் இருபுறமும் தேவியர் எழுந்தருளியுள்ளனர். அருணகிரிநாதரின் திருப்புகழில் இத்தல முருகப்பெருமான் மீது ஒரு பாடல் உள்ளது.

இங்குள்ள தட்சினமூர்த்தி ஸ்ரீஹரிகுருசிவயோக தட்சினாமூர்த்தி என்று அழைக்கப்படுகிறார். வலது கரங்களில் கபாலம், அபய முத்திரையும், இடது கரங்களில் சூலம், வேதச்சுவடிகள் தாங்கியும் ஸ்ரீதட்சிணாமூர்த்தி காட்சி தருகிறார். மகாவிஷ்ணுவுக்கு குருவாக இருந்து ஸ்ரீதட்சிணாமூர்த்தி வேதங்களை உபதேசித்த ஒப்பற்ற திருத்தலம் திருவையாறு ஸ்ரீபஞ்சநதீஸ்வரர் திருக்கோயில். திருவீழிமிழலையில் கண்மலரிட்டு அர்ச்சனை செய்து ஸ்ரீசக்கரத்தைப் பெற்ற திருமால், வேதங்களின் பெருமைகளை உணர்ந்து, இந்தத் தலத்துக்கு வந்து ஸ்ரீதட்சிணாமூர்த்தியிடம் உபதேசம் பெற்றார் என்று தலபுராணம் கூறும். இங்குள்ள தட்சினாமூர்த்தியின் பாதத்தின் கீழே கூர்மம் (ஆமையின் உருவம்) அமைந்திருப்பது ஒரு சிறப்பம்சமாகும். குரு ஸ்தலம் எனப் போற்றப்படுகிற இந்தக் கோயிலில், மாதந்தோறும் உத்திரட்டாதி நட்சத்திர நாளில், குரு பகவானுக்கு சிறப்பு பூஜைகள்,

அபிஷேகங்கள் நடைபெறுகின்றன. இதில் கலந்துகொண்டு, அபிஷேகம் செய்து ஸ்ரீதட்சிணாமூர்த்திக்கு விளக்கேற்றி வழிபட்டால், சகல தோஷங்களும் நீங்கி, சந்தோஷம் நிலைக்கும் என்பது பக்தர்களின் நம்பிக்கை.

ஆலயத்தின் தென்கோபுர வாசலில் உள்ள ஆட்கொண்டார் சந்நிதி மிகவும் முக்கியமானது. இச்சந்நிதியில் எப்போதும் குங்கிலியம் இங்கு மணந்து கொண்டே இருக்கும். பக்தர்கள் இங்குள்ள குண்டத்தில் குங்கிலியம் அர்ப்பணிப்பார்கள். சிவபெருமான் சுசரிதன் என்ற சிறுவனை எமனிடமிருந்து காப்பாற்றிய சமயம் எடுத்த உருவமே ஆட்கொண்டார். இவரை வணங்கி விட்டு கோவிலுக்குச் செல்வது ஒரு மரபு. இவரை வணங்கினால் எமபயம் நீங்கும் என்பது பக்தர்கள் நம்பிக்கை.

சுந்தரரும், சேரமான் பெருமானும் திருவையாறு வரும் போது காவிரியில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடிகொண்டிருந்தது. கலங்கி அக்கரையில் நின்ற சுந்தரர் பதிகம் பாட, இக்கரையில் இருந்த விநாயகர் "ஓலம் ஓலம்" என்று குரல் கொடுத்து காவிரியில் வெள்ளப் பெருக்கைக் கட்டுப்படுத்தி அவரை அழைத்து வந்ததால் இங்குள்ள விநாயகர் ஓலமிட்ட விநாயகர் என்று அழைக்கப்படுகிறார்.

மூன்றாம் பிரகாரத்தில் தென்மேற்கு மூலையில் நின்று வடக்கு நோக்கி ஐயாறா என்று அழைத்தால் ஏழு முறை அது எதிரொலிக்கும். திருவையாறு செல்பவர்கள் இதனையும் அனுபவியுங்கள்.

அப்பர் கண்ட கைலாயம்: திருநாவுக்கரசர் கைலாயம் சென்று சிவபெருமானை தரிசிக்க விரும்பினர். காசியில் தன்னுடன் வந்த அடியார்களை தங்கியிருக்குமாறு சொல்லிவிட்டு தனித்துப் புறப்பட்டார். கைலாயப் பயணம் மிகவும் கடினமாக இருந்ததால் முதலில் நடந்து சென்ற அவர் பிறகு நடக்க முடியாமல் தவழ்ந்து செல்லத் தொடங்கினார். திருநாவுக்கரசர் படும் சிரமத்தைப் பார்த்த இறைவன் அவரை ஆட்கொள்ள நினைத்தார். அருகில் ஒரு குளத்தை ஏற்படுத்தி ஒரு முனிவர் வேடத்தில் அவரை நெருங்கி கைலாயம் செல்லும் வழியில் உள்ள சிரமங்களை எடுத்துக் கூறி திரும்பிச் செல்லும்படி கூறினார். இறந்தாலும் கைலைநாதனைக் காணாமல் ஊர் திரும்ப மாட்டேன் என்ற உறுதியுடன் இருந்த திருநாவுக்கரசரை ஆகாயத்தில் இருந்து அசரீரியாக அழைத்த சிவபெருமான் அங்குள்ள குளத்தில் மூழ்கி திருவையாற்றில் எழுவாய்! அங்கே உனக்கு கைலாயக் காட்சி தருகிறேன் என்று அருளினார். அதே போல் குளத்தில் மூழ்கி திருவையாற்றில் சூரியபுஷ்கரணி தீர்த்தத்தில் எழுந்தார். சிவபெருமான் தான் கூறியபடி அவருக்கு கைலாயக் காட்சி தந்து அருளினார். திருநாவுக்கரசரும்

> மாதர் பிறைகண்ணி யானை மலையான் மகளொடும் பாடிப்
> போதோடு நீர்சுமந் தேத்திப் புகுவா ரவர்பின் புகுவேன்
> யாதுஞ் சுவடு படாம லையா றடைகின்றபோது
> காதன் மடப்பிடி யோடுங் களிறு வருவன கண்டேன்
> கண்டேனவர்திருப் பாதங் கண்டறி யாதன கண்டேன்

என்ற பாடலுடன் தொடங்கும் பதிகம் பாடி இறைவனை தரிசித்தார். இந்த வரலாற்றை உணர்த்தும் வகையில் ஆலயத்தின் வெளிப் பிரகாரத்தில் உள்ள வடகைலாயம், தென்கைலாயம் ஆகிய இரண்டும் காண வேண்டிய ஒன்றாகும்.

இறைவன் ஆதி சைவராக வந்தது: திருவையாற்றில் இறைவனுக்கு பூஜை செய்யும் உரிமை பெற்றவர்கள் 24 பேர் இருந்தனர். அவர்களில் ஒருவர் காசி யாத்திரை மேற்கொண்டார். நெடுநாள் ஆகியும் அவர் திரும்பி வராததால் அவருக்குரிய நிலபுலன்கள் மற்ற சொத்துக்களை தமக்கே உரிமை என்று ஏனைய 23 ஆதி சைவ அந்தணர்களும் கைப்பற்றிக் கொண்டனர். காசி யாத்திரை சென்ற ஆதி சைவரின் மனைவியும், மகனும் இறைவனிடம் நடந்ததை முறையிட்டு வேண்டினார்கள். அவர்களுக்கு அருள் புரியவும் மற்ற அந்தணர்களுக்கு பாடம் புகட்டவும் எண்ணிய சிவபெருமான் காசிக்குச் சென்ற அந்தணர் உருவத்தில் கங்கை நீருடன் ஐயாறப்பர் ஆலயத்திற்கு வந்து இறைவனுக்கு பூஜையும் செய்தார். மனைவியும், மகனும் மகிழ மற்ற 23 அந்தணர்களும் ஒடுங்கிப் போயினர். சில நாட்கள் கழித்து உண்மையான அந்தணர் காசியில் இருந்து கங்கை நீருடன் திரும்பிவர, இருவரில் யார் உண்மையான ஆதி சைவர் என்ற குழப்பம் ஏற்பட்டது. உண்மை அறியும் பொருட்டு யாவரும் கூடியிருக்க முதலில் வந்த ஆதி சைவர் திடீரென்று மறைந்துவிடுகிறார். வந்தவர் சிவபெருமானே என்று எல்லோரும் உணர்கின்றனர். இவ்வாறு ஆதி சைவராக வந்து தனக்குத் தானே பூஜை செய்து கொண்டவர் இத்தலத்து இறைவன் ஐயாறப்பர் .

### 5.6 திருத்தலங்கள் – திருவெண்காடு (சுவேதாரன்யேஸ்வரர் கோவில்)

இறைவன் பெயர் சுவேதாரன்யேஸ்வரர்
இறைவி பெயர் பிரம்மவித்யா நாயகி
பதிகம்
திருநாவுக்கரசர் - 2
திருஞானசம்பந்தர் - 3
சுந்தரர் - 1

காவிரிக் கரையில் உள்ள 6 சிவஸ்தலங்கள் காசிக்கு சமானமாக கருதப்படுகின்றன. அவற்றில் திருவெண்காடு தலமும் ஒன்றாகும். மற்றவை 1. திருவையாறு, 2. திருசாய்க்காடு (சாயாவனம்), 3. திருவிடைமருதூர், 4. திருவாஞ்சியம் மற்றும் 5. மயிலாடுதுறை ஆகும். சுமார் 12 ஏக்கர் நிலப்பரப்பில் இந்தக் கோவில் அமைந்திருக்கிறது. கோவிலைச் சுற்றி நான்கு தேரோடும் வீதிகள் உள்ளன. கோவில் உள்ளே நான்கு பிரகாரங்கள் இருக்கின்றன. இந்த ஆலயத்திற்கு கிழக்கிலும் மேற்கிலும் இராஜ கோபுரங்கள் உண்டு. வெளிப் பிரகாரத்திலிருந்து உள்ளே செல்ல இரு கூடகோபுரங்கள் இருக்கின்றன.சூரியனும் சந்திரனும் இங்குள்ள மூலவரை வழிபட்டுள்ளனர். இக்கோவிலில் கண்டெடுக்கப்பட்ட கல்வெட்டுகளில் இருந்து அக்காலத்து சோழ மன்னர்கள் ஆதித்திய சோழன், ராஜராஜ சோழன் ஆகியோர் பல தானங்களைச் இக்கோவிலுக்கு செய்திருப்பது தெரிய வருகிறது. ஆதிசிதம்பரம் என்ற பெயரும் பெருமையும் திருவெண்காடு ஸ்தலத்திற்கு உண்டு. மூலவர் சுயம்பு வடிவானவர். இங்கும் சிதம்பரம் போன்றே நடராஜர் சபை, ஸ்படிக லிங்கம், ரகசியம் அமைந்துள்ளது. ஸ்படிக லிங்கத்திற்கு தினமும் 4 முறை அபிஷேகமும் நடராஜருக்கு வருடத்திற்கு 6 முறையும் அபிஷேகம் நடைபெறுகின்றன. இத்தலத்தில் உள்ள துர்க்கை

சந்நிதியும், காளி சந்நிதியும் மிகவும் பிரசித்தி பெற்றவை. துர்க்கை அம்மனின் உருவச் சிற்பமும், காளிதேவியின் உருவச் சிற்பமும் மிகுந்த கலை அழகுடன் பார்த்துக் கொண்டே இருக்க வேண்டும் என்ற எண்ணத்தை ஏற்படுத்தும். அதே போன்று இங்குள்ள நடராஜ மூர்த்தியும் மிகுந்த கலை அழகு கொண்டது. சிதம்பரத்தில் உள்ளதைப் போன்றே இங்கும் நடராஜர் சபைக்கு அருகில் மஹாவிஷ்னுவின் சந்நிதி இருக்கிறது.

இங்குள்ள அகோரமூர்த்தி இந்த ஆலயத்தின் தனிச் சிறப்பு பெற்றவர். பிரம்மாவிடம் பெற்ற வரங்கள் காரணமாக மருத்துவன் என்ற அசுரன் தேவர்களை துன்புறுத்தியதனால் அவர்கள் திருவெண்காடு வந்து தங்கி இருந்தனர். அசுரன் திருவெண்காட்டிற்கு வந்து மேலும் தேவர்களுக்கு துன்பத்தைத் தர ரிஷபதேவர் அசுரனுடன் தேவர்களைக் காப்பாற்ற போரிட்டார். மருத்துவாசுரன் ரிஷபதேவர் மீது மாயச் சூலத்தை ஏவ, அச்சூலம் நந்தியின் உடலை ஒன்பது இடங்களில் துளைத்துவிட்டுப் போயிற்று. இஃதையறிந்த இறைவன் சிவபெருமான் கோபமுற்று அவருடைய 5 முகங்களில் ஒன்றான ஈசான்ய முகத்தில் இருந்து அகோரமூர்த்தி தோன்றினார். அகோரமூர்த்தியைக் கண்டவுடன் அசுரன் சிவனிடம் சரணாகதி அடைந்தான். அகோரமூர்த்தியாக வடிவு கொண்டு வந்து மருத்துவாசுரனை அழித்தநாள் ஞாயிற்றுக்கிழமை பூரநட்சத்திரம். இதனால் இன்றும் இத்திருக்கோயிலில் ஞாயிற்றுகிழமைகளில் இரவு 10 மணிக்குமேல் (இரண்டாங்கால முடிவில்) அகோரமூர்த்திக்குச் சிறப்பு வழிபாடு நடைபெறுகிறது. திருவெண்காடு வருவோர், ஞாயிறு நாளாக அமைந்தால் அன்றிரவு தங்கி, ஆலயத்தில் இவ்வழிபாடு நடைபெறும் சரியான நேரத்தைக் கேட்டுத் தெரிந்துகொண்டு கட்டாயம் இவ்வழிபாட்டைத் தரிசிக்க வேண்டும். இவ்வரலாற்றையொட்டிச் சுவாமி சந்நிதிக்கு எதிரில் வெளியே உள்ள நந்தியின் உடம்பில் ஒன்பது துவாரங்கள் இருப்பதை இன்றும் காணலாம். சிவனின் 64 மூர்த்தங்களுள் ஒன்றான அகோர மூர்த்தியை இத்தலத்தில் மட்டுமே காணலாம்.

இத்தலத்தில் உள்ள மூர்த்திகள் மூன்று - சுவேதாரண்யேஸ்வரர், நடராஜர், அகோரமூர்த்தி

இத்தலத்தில் உள்ள சக்திகள் மூன்று - பிரம்ம வித்யாநாயகி, காளிதேவி, துர்க்கை

இத்தலத்தில் உள்ள தீர்த்தங்கள் மூன்று - சூரிய தீர்த்தம், சந்திர தீர்த்தம், அக்கினி தீர்த்தம்

இத்தலத்தில் உள்ள தலவிருட்சங்கள் மூன்று - வடவால், வில்வம், கொன்றை.

இக்கோவிலில் உள்ள சந்திர தீர்த்தம் அருகில் உள்ள ஆலமரத்தின் அடிப்பகுதியில் ருத்ரபாதம் இருக்கிறது. இங்கே சிவபெருமானின் திருவடிகள் வரையப்பட்டுள்ளன. இந்த ஆலமரத்தின் அருகில் நமது முன்னோர்களுக்கு திதி தர்ப்பணங்கள் செய்தால் நல்ல பலன் கிடைக்கும். திதி தர்ப்பணங்கள் செய்வதற்கு உகந்த தலங்களில் திருவெண்காடு தலமும் முக்கியமான ஒன்றாகும்.

ஆதி சிதம்பரம்: திருவெண்காடு தலம் ஆதி சிதம்பரம் என்று போற்றப்படுகிறது. நடராசசபை சிதம்பரத்தில் உள்ளது போன்றே செப்பறையில் அமைந்துள்ளது. உள்ளே இருக்கும் ஸ்படிக லிங்கத்திற்கும் சிதம்பரத்தில் நடப்பது போன்று நாடொறும் பூசை

நடைபெறுகிறது. சிதம்பர ரகசியமும் இங்குள்ளது. சிவபெருமான் இத்தலத்தில் ஆனந்த தாண்டவம், காளி தாண்டவம், கௌரி தாண்டவம், முனி தாண்டவம், சந்தியா தாண்டவம், திரிபுர தாண்டவம், புஜங்க தாண்டவம், சம்ஹார தாண்டவம், பைஷாடனம் ஆகிய ஒன்பது தாண்டவங்களை ஆடியுள்ளார்.

நவக்கிரஹ ஸ்தலம்: திருவெண்காடு நவக்கிரஹங்களில் புதனுக்கு உரிய ஸ்தலமாகும். அம்பாள் பிரம்ம வித்யா நாயகியின் கோவிலுக்கு இடது பக்கத்தில் தனி சந்நிதியில் புத பகவான் பக்தர்களுக்கு அருள் பாலிக்கிறார். புதனின் தந்தையான சந்திரனின் சந்நிதியும், சந்திர புஷ்கரணி தீர்த்தமும் புதன் சன்னதிக்கு எதிரில் அமைந்துள்ளது. புத பகவானை வழிபட்டால் உடலில் உள்ள நரம்பு சம்பந்தமான நோய்கள் நீங்குதல், கல்வி மேன்மை, நா வன்மை, செய்யும் தொழில் சிறப்பு ஆகிய நலன்கள் உண்டாகும்.இசைக்கு அதிபதியான புதனை இசைக்கலைஞர்களும், திரைப்படக்கலைஞர்களும் வழிபட்டு பயன் பெறுகின்றனர்.

நன்மக்கட்பேறு பெற: திருவெண்காடு சுவேதாரண்யேஸ்வரர் ஆலயத்தில் உள்ள அக்கினி தீர்த்தம், சூரிய தீர்த்தம், சந்திர தீர்த்தம், என்னும் முக்குளங்களிலும் முறையே நீராடி மூலவர் சுவேதாரண்யேஸ்வரை வழிபட்டால் பெரும் பலனும் நன்மக்கட்பேறும் இறைவன் அருளால் கிடைக்கும். திருஞானசம்பந்தர் இத்தலத்து இறைவன் மேல் பாடிய பதிகங்கள் ஒன்றின் 2வது பாடலில் இதை குறிப்பிடுகிறார்.

பேயடையா பிரிவெய்தும் பிள்ளையினோடு உள்ளநினைவு
ஆயினவே வரம்பெறுவர் ஐயுறவேண்டா ஒன்றும்
வேயனதோள் உமைபங்கன் வெண்காட்டு முக்குளநீர்
தோய்வினையார் அவர்தம்மைத் தோயாவாம் தீவினையே

63 நாயன்மார்களில் ஒருவரான சிறுத்தொண்ட நாயனாரின் மனைவி திருவெணகாட்டுநங்கை பிறந்த தலம் என்ற சிறப்பும் திருவெண்காட்டிற்கு உண்டு. இந்திரன், ஐராவதம், சுவேதகேது, சுவேதன், மகாவிஷ்ணு, சூரியன், சந்திரன், அக்னி ஆகியோர் இங்குள்ள மூலவரை வழிபட்டுள்ளனர்.

## 5.7 திருத்தலங்கள் – திருவாவடுதுறை (கோமுக்தீஸ்வரர் கோவில்)

இறைவன் பெயர் மாசிலாமனி ஈஸ்வரர், கோமுக்தீஸ்வரர்

இறைவி பெயர் அதுலகுச நாயகி, ஒப்பிலா முலையம்மை

பதிகம்

திருநாவுக்கரசர் - 5

திருஞானசம்பந்தர் - 1

சுந்தரர் - 2

தலத்தின் சிறப்பு: சிவனும் மகாவிஷ்ணுவும பார்வதியை நடுவராக வைத்து சொக்கட்டான் ஆடிக்கொண்டிருந்த போது ஆட்டத்தில் காய் உருட்டியதில் சந்தேகம் வர பார்வதியிடம் கேட்கிறார் சிவன். பார்வதி மகாவிஷ்ணுவிற்கு சாதகமான பதிலை

கூறியதால் சிவபெருமான் பார்வதியை பசுவாக பூமியில் பிறக்கும் படி சாபம் இடுகிறார். இப்படி பசுவாக பிறந்த பார்வதி பூவுலகில் பல இடங்களில் இறைவனை பூஜித்தாள். இத்தலத்தில் தம்மை வழிபட்டு வர சாபம் நீங்கப்பெறும் என்றார் சிவன். அதன்படி அம்பாள் பசுவின் வடிவில் இங்கு வந்து, சிவனை வேண்டி தவமிருந்தாள். சிவன் அவளுக்கு காட்சி தந்து, தன்னுடன் அணைத்துக்கொண்டு, விமோசனம் கொடுத்தார். "கோ"வாகிய பசுவிற்கு விமோசனம் தந்தவர் என்பதால் கோமுக்தீஸ்வரர் என்று பெயர் பெற்றார்

திருஞானசம்பந்தர், இத்தலத்தில் தன் தந்தையார் சிவபாத இருதயருடன் சிலகாலம் தங்கியிருந்தார். அப்போது சீர்காழியில் யாகம் நடத்த வேண்டுமென சிவபாத இருதயர் விரும்பினார். எனவே யாகத்திற்கு வேண்டிய பொன்னும், பொருளும் வேண்டுமென சம்பந்தரிடம் கேட்டார். சம்பந்தர் யாகத்திற்கு பொருள் வேண்டி இடரினுந் தளரினும் எனதுறுநோய் தொடரினும் உனகழல் தொழுதெழுவேன் என்று தொடங்கும் பதிகம் பாடினார். சிவன் பூதகணங்கள் மூலமாக, எடுக்கக் குறையாத ஆயிரம் பொன் கொண்ட ஒரு பொற்கிழியை கொடுத்து அதனை இக்கோயிலில் உள்ள பலிபீடத்தின் அகன்ற பீடத்தில் வைக்கச் செய்தார். பொன் பெற்ற சிவபாத இருதயர் சீர்காழிக்கு சென்று யாகத்தை நடத்தி முடித்தார். பொற்கிழி வைக்கப்பட்ட இந்த பலிபீடம் வெளிப் பிரகாரத்தில் நந்திக்கு அருகில் இருக்கிறது. இதனைச் சுற்றிலும் பொற்கிழி கொண்டு வந்த பூதகணங்கள் இருக்கிறது. இங்கிருந்து சிவனிடம் வேண்டிக்கொண்டால் குடும்பத்தில் ஐஸ்வர்யம் பெருகும் என்பது நம்பிக்கை.

ஒன்பதாம் திருமுறையான திருவிசைப்பாவில் நான்கு பதிகங்கள் பாடிய திருமாளிகைத்தேவர் போகரின் சீடர். இவர் இத்தலத்தில் சிவத்தொண்டு செய்து வந்தார். ஒருசமயம் அவர் மீது வீண்பழி சுமத்தப்பட்டதால், மன்னன் படை வீரர்களை அனுப்பி அவரை தாக்க முயன்றான். திருமாளிகைத் தேவர், நரசிங்கன் என்னும் மன்னனின் படைகளை கோயில் மதிலில் உள்ள நந்திகளை உயிர் பெற்றெழச் செய்து விரட்டி அற்புதம் நிகழ்த்திய தலம் திருவாவடுதுறை. இன்றும் இவ்வாலயத்தின் மதில்களில் நந்திகள் இல்லையென்பதைக் காணலாம்.

முசுகுந்த சக்கரவர்த்திக்கு மகப்பேறு அருளி இத்தலத்தைத் திருவாரூராகவும் தம்மைத் தியாகேசராகவும் காட்டிய சிறப்பும் உடையது இத்தலம். புத்திர பாக்கியம் இல்லாமல் தவித்த முசுகுந்த சக்கரவர்த்தி இந்திரனிடம் பெற்ற தியாகேசரை தொடர்ந்து வழிபட்டு வந்தான். ஒருசமயம் சிவன் அவரது கனவில் தோன்றி, இத்தலத்தில் தன்னை வழிபட குழந்தை பாக்கியம் கிடைக்கப்பெறும் என்றார். அதன்படி இங்கு வந்து சிவனை வணங்கி புத்திரப்பேறு பெற்றார் முசுகுந்தன். எனவே, புத்திரப்பேறு இல்லாதவர்கள் இங்கு வேண்டிக்கொண்டால் அப்பாக்கியம் கிடைக்கும் என்பது நம்பிக்கை.

சுந்தரநாதர் எனும் சிவயோகியார் கயிலாயத்திலிருந்து பூலோகம் வந்து சிவத்தலங்களை தரிசித்து வந்தார். அவர் இத்தலம் வந்தபோது, மூலன் எனும் இடையன் இறந்து கிடக்க, அவனைச் சுற்றிலும் பசுக்கள் அழுது கொண்டிருந்ததைக் கண்டார். பசுக்களின் மீது பரிவு காட்டிய அவர் தன் உயிரை மூலன் உடலில் புகுத்தி எழுந்தார். பின் பசுக்களை வீட்டில் விட்டுவிட்டு இத்தலத்தில் தவம் செய்யத் துவங்கினார். மூலன் வீட்டிற்கு

திரும்பாததால், அவனது மனைவி இங்கு வந்து சுந்தரநாதரை தன்னுடன் வரும்படி அழைத்தார். அவர் செல்ல மறுத்தார். மூலன் சிவஞானம் பெற்றதாக உறவினர்கள் கூறவே மனைவியும் விட்டுச் சென்றுவிட்டாள். இவரே திருமூலர் என்று பெயர் பெற்றார். இவர் ஆண்டுக்கு ஒரு பாடல் வீதம், மொத்தம் 3 ஆயிரம் பாடல்களை பாடினார். இவையே திருமூலர் திருமந்திரமாக தொகுக்கப்பட்டது. இத்தலத்தின் வெளிப் பிரகாரத்தில் திருமூலருக்கு சன்னதி இருக்கிறது.

சுவாமி சன்னதிக்கு வலப்புறத்தில் தியாகேசர் சந்நிதி உள்ளது. பிரகாரத்தில் தெற்கு நோக்கிய சந்நிதியில் இத்தலத்தின் உற்சவ மூர்த்தியான அணைத்தெழுந்த நாயகர் இருக்கிறார். இவர் அம்பாளை அணைத்த கோலத்தில் இருந்தாலும், அம்பாள் மீது கைகள் படாதவாறு சிலை அமைக்கப்பட்டிருப்பது சிறப்பம்சம். இவர் இங்கு வரப்பிரசாதியாக திகழ்கிறார். பிரிந்திருக்கும் தம்பதியர் இவரிடம் வேண்டிக்கொண்டால் மீண்டும் இணைவர் என்பது நம்பிக்கை.

5 நிலை கிழக்கு நோக்கிய இராஜகோபுரத்துடன் இவ்வாலயம் விளங்குகிறது. கோபுர வாயிலுக்கு எதிரில் கோமுக்தி தீர்த்தம் உள்ளது. கோபுர வாயிலின் இருபுறமும் பசுவான உமைக்குத் துணையாக வந்த விநாயகர், முருகன் சந்நிதிகள் உள்ளன. கோபுர வாயிலைக் கடந்தால் நீண்ட நடைபாதை. அதன் முடிவில் உள்ள மண்டபத்தில் பெரிய நந்தியுள்ளது. இந்த நந்திக்குப் பின்னால் உள்ள பலிபீடமே ஞானசம்பந்தருக்குப் பொற்கிழி வைத்தருளிய இடமாகும். பலீபீடத்தின் நான்கு புறமும் பூதகணங்கள் தாங்கி நிற்கின்றன. திருஞானசம்பந்தர் இப்பீடத்தின் அருகில் தமிழ்மணம் கமழ்வதை அறிந்து பீடத்தின் கற்களை பெயர்க்க அதன் அடியில் இருந்து திருமூலர் பாடிய திருமந்திரம் வெளிப்பட்டது. பெரிய நந்திக்கு முன்புறம் மற்றொரு சிறிய நந்தியும் இருக்கிறது. பிரதோஷ வேளையில் இவருக்கு மகாஅபிஷேகம் நடக்கிறது. திருவிடைமருதூர் தலத்திற்கான பரிவாரத் தலங்களில் இத்தலம் நந்தி தலமாக இருப்பதால் இங்கு நந்தியிடம் வேண்டிக்கொள்வது விசேஷம்.

சிவன் இத்தலத்தில் போகர் முதலிய நவகோடி சித்தர்களுக்கு அஷ்டமாசித்திகளை உபதேசித்ததாக ஐதீகம். தருமதேவதை இறைவனை வழிபட்டு அவருக்கு வாகனமாகும் பேறு பெற்றதும் இத்தலத்தில் தான். திருமூலர், திருமாளிகைத் தேவர் முதலிய மகான்களுடைய சமாதிகள் இருப்பதும் இத்தலத்தில் தான். இவ்வளவு சிறப்புப் பெற்ற திருவாவடுதுறை தலத்தை அவசியம் சென்று தரிசியுங்கள்.

## 5.8 நாயன்மார்கள் வரலாறு – இளையான்குடி மாற நாயனார்

நாயன்மார் கதை – ஆசிரியர் வாகீச கலாநிதி கி.வா. ஜகந்நாதன்

இளையான்குடி என்னும் ஊரில் மாறனார் என்ற வேளாளச் செல்வர் ஒருவர் இருந்தார். அவர் சிவனடியார் எவரானாலும் எத்தனிப் பேர் வந்தாலும் அவர்களை வரவேற்று வழிபட்டு உபசரித்து விருந்து செய்வித்து அனுப்புவது வழக்கம். இறைவன் அருளால் பெருஞ் செல்வராக இருந்தமையால் இந்த திருத்தொண்டு நல்லோர் போற்றும்படி இடையறாது நிகழ்ந்து வந்தது.

“கையில் பொருள் இருந்தால் யாரும் இப்படி விருந்து போடலாம்” என்று எவரேனும் நினைத்திருக்கலாம். வறுமை வந்து அடைந்தாலும் தம்முடைய தொண்டை இறுதி வரையில் செய்யும் மனப்பாங்குடையவர் மாறனார் என்பதை உலகுக்குக் காட்ட வேண்டி இறைவன் அவருக்கு வறுமை வந்து அடையும்படி செய்தான். இளையான்குடி மாற நாயனார் அப்போதும் மாகேசுர பூசை செய்வதில் இளையாதவராகித் தம் கையில் உள்ள பொருளை எல்லாம் விற்றுத் தம் தொண்டைப் புரிந்து வந்தார்.

ஒருநாள் நள்ளிரவு மழைக்காலமாதலால் மழை சோவெனப் பெய்து கொண்டிருந்தது. தம்மிடம் இருந்த நெல்லில் ஒரு பகுதியைக் குத்தி அன்பர்களை உண்வித்தார் மாறர். மற்றொரு பகுதியைத் தம்முடைய வயலில் தெளித்திருந்தார்.

அவருக்கும் அவருடைய மனைவிக்கும் உணவு இல்லாமல் போயிற்று. அன்று அவர்கள் பட்டினியாகவே படுத்துக்கொண்டார்கள்.

அந்த நள்ளிரவில் இறைவன் ஓர் அடியவர் வேடம் பூண்டு மாற நாயனார் வீட்டை அடைந்தார். வந்த தொண்டரை வரவேற்று அவர்மேல் உள்ள ஈரத்தை துடைத்து அமரச் செய்து, அவர் பசியை ஆற்ற வழி தேடலானார். தம்முடைய மனைவியரிடம், “இவ்வடியார் மிகப் பசித்திருக்கிறார். இவருக்கு உணவு அருந்த வேண்டும் என் செய்வது?” என்று கேட்டார்.

“வீட்டில் ஒரு பண்டமும் இல்லை. அயலார் அனைவரையும் கேட்டு வாங்கிய பண்டங்களுக்கும் அளவு இல்லை. இனி நமக்குக் கொடுப்பார் இல்லை. இப்போது நள்ளிரவு வேறு துர்ப்பாக்கியமுடைய யான் என் செய்வேன்!” என்று அந்த மங்கை நல்லார் வருந்தினார். பிறகு ஏதோ ஓர் எண்ணம் தோன்றவே, “காலையில் விதைத்த நெல்லை வாரிக்கொண்டு வந்தால் சமைத்துப் போடலாம்” என்று சொன்னார்.

நாயனார் புதையல் எடுத்தவரைப்போல மிக்க மகிழ்ச்சி அடைந்து ஒரு கூடையை எடுத்துக் கொண்டு வயலுக்கு ஓடினார். வீட்டிலே சிவனடியாரைச் சற்றே படுத்திருக்கச் சொல்லிவிட்டு அந்த நள்ளிரவில் கொட்டும் மழையில் வயலுக்கு ஓடினார். வயலை அடைந்து பெருவெள்ளத்தில் மிதந்த முளை நெல்லைக் காலினால் தடவிப் பார்த்துக் கையினால் வாரி வாரிக் கூடையில் நிரப்பினார். பிறகு அந்த கூடையைத் தலையில் சுமந்துகொண்டு வந்தார்.

“ஐயோ! சமைக்க விறகு இல்லையே!” என்று அவர் மனைவியார் வருந்தினார்.

நாயனார் சற்றும் யோசிக்காமல் வீட்டு மேற் கூரையில் கட்டியுள்ள கொம்புகளைப் பிரித்துக் கொடுத்தார். அம்மையார் அடுப்பு மூட்டி முளை நெல்லை முதலில் வறுத்துப் பின்பு குத்தி அரிசியாக்கி உலையிட்டார். கறியமுதிற்கு என்ன செய்வோம் என்று யோசித்தபோது வீட்டுக் கொல்லையில் போட்டிருந்த பயிருக்குழி நினைவிற்கு வந்தது. மிக இளைய பயிராக இருந்த அதை அப்படியே பறித்துக் கொண்டு

வந்த நாயனார் கொடுத்து, “அடியவர் மிகப் பசித்தார், விரைவிலே உணவு சமைத்துப் போடவேண்டும்” என்றார்.

அவருடைய உள்ளம் போல ஏவல் புரியும் அம்மையார். அந்தப் பயிரைக் கொண்டு கறியமுது சமைத்தார். ஒருவாறு உணவு சமைத்தான பிறகு, நாயனார் சிவனடியாரை அழைப்பதற்காக அவர் படுத்திருந்த இடத்திற்குச் சென்றார். சென்று “சுவாமி அமுது செய்ய எழுந்தருள வேண்டும்” என்று எழுப்பியபோது இறைவன் சோதிப் பிழம்பாகத் தோன்றினான். அதைக்கண்டு நாயனாரும் அவர் மனைவியாரும் திகைத்து நிற்க, இறைவன் உமாதேவியாரோடு இடபத்தின்மேல் எழுந்தருளும் கோலங் காட்டி, “அன்ப, நீயும் நின் மனைவியும் சிவலோகத்தில் இன்புற்று வாழ்வீர்களாக!” என்று அருள் செய்து மறைந்தான்.

விருந்தினரை உண்பித்தலே இல்லறத்தின் தலையாய இலக்கணம். அதிலும் சிவனடியாருக்கு விருந்தளித்தல் இம்மைப் பயனும் மறுமைப் பயனும் ஒருங்கே தரவல்லது பொருள் இருந்தால் அறம் செய்ய இயலும் என்பது உண்மை அன்று. மனம் இருந்தால்தான் அறம் செய்ய முடியும். பொருள் இல்லாத நிலையிலும் மனத்தில் துணிவு இருந்தால் எப்படியேனும் அறம் செய்வார்கள். இளையான்குடி மாற நாயனார் வறுமையிலும் அடியார்க்கு உணவு அளித்தார். முளை நெல் என்றும் பாராமல், விதைத்து விட்டோமே என்றும் எண்ணாமல், நள்ளிரவாயிற்றே என்றும் தடியுறாமல், அடியார் பசியோடு இருக்கிறாரே என்ற எண்ணம் ஒன்றையே கொண்டு வயலுக்குச் சென்று முளை நெல்லை வாரி வந்தார். தாம் உண்ணாமல் இருந்ததையும் பொருட்படுத்தாமல் அடியார் பசியைப் போக்க முந்தினார் இறைவனிடத்திலும் அடியாரிடத்திலும் முறுகிய பக்தி இருந்தாலன்றி, இத்தகைய செய்கையைச் செய்வது இயலாது. செயற்கரிய இந்த செய்கையைச் செய்ததனால்தான் இவர் நாயன்மாருள் ஒருவராக எண்ணும் பெருமையை அடைந்தார்.

## 5.9 **நாயன்மார்கள் வரலாறு –** ஏனாதி நாயனார்

நாயன்மார் கதை – ஆசிரியர் வாகீச கலாநிதி கி.வா. ஜகந்நாதன்

ஓர் ஊரில் இரண்டு கூத்தாடியா? ஒன்று அவனுக்கே எல்லா வரும்படியும் வரவேண்டும்; இல்லையானால் நானே வாட்போர் பயிற்றி நன்மை பெறவேண்டும் என்றான் அதிசூரன்.

“இருவருமே சமாதானமாக இருந்து நம்முடைய இளைஞர்களுக்குப் படைக்கலப் பயிற்சி அளிக்கக் கூடாதா? என்று அருகில் இருந்த முதியவர் கேட்டார்.

“அது எப்படி முடியும்? எயின்னூர் என்ன பெரிய பட்டினமா? இந்தச் சின்ன ஊரில் இரண்டு பள்ளிக்கூடமா?

“எத்தனை பள்ளிக்கூடம் இருந்தால் என்ன? சோழ மன்னனுடைய பெரும் படைக்கு எத்தனை வீரர்களைக் கொடுத்தாலும் தகும்” என்று முதியவர் கூறினார்.

“அந்த அந்த ஊர்களில் உள்ளவர்கள் அங்கங்கே பயிற்சிக்கூடம் வைத்திருக்கின்றார்கள். ஆகையால் இந்த ஊரில் ஒன்று இருந்தால் போதும் என்று அதிசூரன் தன் கருத்தையே வற்புருத்தினான்.

சோழ நாட்டில் எயின்னூர் என்ற ஊரில் ஏனாதி நாயனார் என்பவர் படைக்கலப் பயிற்சியில் சிறந்த வீரர். சோழ மன்னர் படையில் சேனாதிபதியாக இருந்தவரிகளின் வழி வந்தவர். ஏனாதி என்பது சேனாதிபதிகளுக்கு அளிக்கும் பட்டம். ஏனாதி நாதர் இளைஞர்களுக்குப் படைக்கலங்களைப் பயிற்றுவித்து வந்தார். அவருடைய திறமையினாலும் நல்ல குணத்தாலும் அவரிடம் பலர் வந்து சேர்ந்தனர்.

எப்படியாவது ஏனாதி நாதனை அடக்க வேண்டுமென்று எண்ணினான் அதிசூரன். ஆனால் அதை வெளிப்படையாகச் சொல்லாமல், அந்த சின்ன ஊரில் ஒருவர் இருந்தால் போதுமென்று போலி நியாயம் பேசினான்.

நானே சென்று அவனிடம் சொல்லப் போகிறேன், “இந்த ஊரில் ஒன்று நீ இருக்க வேண்டும்; அல்லது நான் இருக்க வேண்டும். யார் இருப்பது என்பதை நம் வாள் பலம் நிர்ணயிக்க வேண்டும்” என்று அறை கூவப் போகிறேன். இருவரும் போரிட்டு யார் வெல்கிறாரோ அவருக்கே பள்ளிக்கூடம் நட்த்தும் உரிமை இருக்கட்டும்” என்று அவன் தனக்கு வேண்டியவர்களை வைத்துக்கொண்டு சொன்னான். அவனிடம் பயிலும் இளைஞர்களும் வேறு சிலரும் அப்படியே செய்யலாம் என்று அவன் கருத்திற்கு ஆதரவு நல்கினர்.

வீரமும் பலமும் நிறைந்த புலி வாழும் குகையின்முன் ஒரு குள்ளநரி போய் ஊளையிட்டது போல, அதிசூரன் ஏனாதி நாதர் வீட்டு வாசலுக்குச் சென்று போர் செய்ய அழைத்தான். ஏனாதி நாதர் அதைக் கேட்டார். வலிய போர் புரிய அழைக்கும் அதிசூரனுடைய வீரத்துக்கு அவருடைய வீரமும் துணிவும் குறைவா? அவர் போர்க்கோலம் புனைந்து புறப்பட்டார்.

ஏனாதி நாதர் சிறந்த சிவபக்தர். தம்முடைய தொழிலில் வரு வருவாயைச் சிவனடியார்களை வழிபட்டு உபசரிப்பதிலேயே செலவிட்டு வந்தார். திருநீறு பூசிய தொண்டர் யாரைக் கண்டாலும் உடனே அவர் காலில் விழுந்து பணிந்துவிடுவார். உடம்பிலுள்ள பெருந்திறலும் உள்ளத்தில் இருந்த பெருந் தீரமும் போரிலும் படைக்கலப் பயிற்சியிலும் சிறந்து விளங்கின. அடியார்களைக் கண்ட போது உடல் குழைய உள்ளம் நெகிழப் பணிந்து உபசரிப்பார். பகைவர்முன் நிமிர்ந்து நிற்கப் பழகிய அவர், அடியார் முன் பணிந்து நிற்பார்.

ஏனாதி நாதர் போர்க்கோலம் கொண்டு புறப்பட்டார். அவரைச் சார்ந்தவர்களும் அவருடன் சேர்ந்து கொண்டார்கள். அதிசூரனுடனும் பலர் படைகளுடன் வந்து சேர்ந்தனர். ஒரு பரந்த வெளியில் இரு சாராருக்கும் போர் நடைப்பெற்றது. இரண்டு கட்சியினரும் கடுமையாகப் போர் புரிந்தனர். பலர் மாண்டனர். இறுதியில் அதிசூரன் படைத் தோற்றது. அவன் தன் தலையைத் தொய்வாகப் போட்டுக்கொண்டு வீட்டுக்கு போய் சேர்ந்தான்.

அன்று இரவு முழுவதும் அவனுக்குத் தூக்கமே வரவில்லை. ஏனாதி நாதரை வென்றுவிடலாம் என்ற எண்ணம் குலைந்துவிட்டதை எண்ணி வருந்தினான். எப்படியாவது அவரைத் தொலைத்துவிட வேண்டும் என்ற எண்ணம் பின்னும் தலைத்தூக்கி எழுந்தது. வஞ்சக முறையினால் அவரை வென்றுவிட வேண்டுமென்று தீர்மானித்தான். அதற்குரிய வழிகளையும் வகுத்துக் கொண்டான்.

காலையில் எழுந்தவுடன் ஏனாதி நாதருக்கு ஓர் ஆள் மூலம் செய்தி ஒன்றை அனுப்பினான். “இரண்டு பேரும் போர் செய்து யாருக்கு வெற்றி என்று தீர்மானிக்கும் திறத்தில் நம்மைச் சார்ந்தவர்களையும் ஈடுபடுத்துவதில் வீண் சேதம் உண்டாகும். நாம் மாத்திரம் தனித்து ஒருவரும் அறியாமல் வாட்போர் செய்யலாம். அதனால் நம் வலிமையை அறிந்து கொள்ளலாம்” என்று சொல்லி அனுப்பினான். ஏனாதி நாதர் அதற்கு உடன்பட்டார்.

குறித்த இடத்தில் குறித்த நேரத்தில் இருவரும் வாட்போர் புரிவதென்று தீர்மானமாயிற்று. அப்போது அதிசூரன் தன் திட்டப்படியே ஒன்று செய்ய ஆரம்பித்தான். திருநீறு பூசியவருக்கு ஏனாதி நாதர் ஒரு தீங்கும் செய்யமாட்டார் என்பதை அவன் கேள்வியுற்றிருந்தான். ஒரு நாளும் திருநீற்றைத் தொட்டறியாத அந்த

தீயவன், அன்று நெற்றி நிறைய திருநீறு பூசிக்கொண்டான். வெண்ணீறு முகத்தில் இருந்ததேயன்றி, அகத்தில் வஞ்சக எண்ணமாகிய கறுப்பை வைத்துக்கொண்டு சென்றான்.

போர் புரியும் களத்திற்குச் செல்லும் போது தன் முகம் மாத்திரம் தெரியாமல் கைக் கேடயத்தால் மறைத்துக் கொண்டான். இருவரும் போர்த் தொடங்கினர். ஏனாதி நாதர் தம் பகைவனை ஒரே வீச்சில் கொன்றுவிடும் சமயம் அறிந்து புலிப்போலப் பாய்ந்தார். அந்த சமயத்தில் அதிசூரன் தன் முகம் அவருக்கு நன்றாகத் தெரியும்படியாகக் கேடயத்தைக் கீழே தாழ்த்தினான்.

அதிசூரனுடைய நெற்றியை ஏனாதி நாதர் கண்டார். திருநீறு அதில் பளிச்சென்று தோன்றியது. " அடடா! என்ன காரியம் செய்தேன்! இதற்கு முன்பு இவர்மேல் காணாத திருநீறு இவர் நெற்றியில் விளங்குகிறதே!" இவர் சிவனடியார் ஆகிவிட்டார். இனி இவர் நமக்கு பகைவர் அல்லர். இவருடைய விருப்பம் நிறைவேறும்படி செய்வது நம் கடமை" என்ற எண்ணம் மீதூரத் தம் வாளையும் கேடயத்தையும் கீழே போட நினைத்தார். ஆனால் அடுத்த கணம் வேறு ஓர் எண்ணம் குறுக்கிட்டது. "நாம் படைக்கலத்தைக் கீழே போட்டுவிட்டால் நிராயுதபாணியைக் கொன்ற பாவம் இவரைச் சாரும். அதற்கு இடமின்றிச் செய்ய வேண்டும்!" என்று கருத்து தோன்றியது. அதனால் வாளையும் பலகையும் கையில் பற்றியபடியே போர் செய்பவரைப் போலவே பாசாங்கு செய்தார்.

முன்னாலே நின்ற பாதகன் எளிதில் தன் வாளை ஓச்சித் தன் கருத்தை நிறைவேற்றிக் கொண்டான். ஏனாதி நாதர் உடம்பிலிருந்து அவர் தலை துணிந்தது. ஆனால் அவர் கொள்கை – திருநீற்றுத் தொண்டர் விருப்பத்தை நிறைவேற்ற வேண்டும் என்ற விரதம் – துணியாமல் வென்றது. அந்த விரதத்தை அவர் தம் உயிரைக் கொடுத்துக் காப்பாற்றினார்.

அப்போது ஏனாதி நாத நாயனாருடைய பெருமையை உலகத்தோருக்குத் தெரிவிக்க இறைவன் உமாதேவியாருடன் எழுந்தருளி, அவரைத் தம் அணுக்கத்தொண்டராகிய சிவகணத்தில் ஒருவர் ஆக்கிக் கொண்டார்.

அடியார்களைப் போற்றும் திறத்தில் உயிர் போனாலும் தம் கொள்கையை விடாமல் மெய்யான வீரத்தில் சிறந்து நின்றார் ஏனாதி நாதர். அதனோடு அடியார் பகைவராக இருந்தாலும், அவர் விருப்பத்தைக் குறைவின்றி நிறைவேற்றும் வகையில் செயல் செய்தார். உயிரினிடத்தும் இருக்கும் ஆசையிலும் கொள்கையில் இருக்கு உறுதி சிறந்து நிற்பதால், இத்தகையவர்கள் செயற்கரிய செய்த பெரியவர்களாயினர்.

## 5.10 **நாயன்மார்கள் வரலாறு** சண்டேசுர நாயனார்

நாயன்மார் கதை – ஆசிரியர் வாகீச கலாநிதி கி.வா. ஜகந்நாதன்

மாட்டுக்கு ஏதோ உற்சாகமோ அல்லது கோபமோ தெரியவில்லை. அது தன் தலையைத் தாழ்த்திக்கொண்டு கொம்பினால் ஆய்க்குலச் சிறுவனை முட்ட வந்தது. அவன் சற்றே விலகிக் கொண்டு பின்பு அதைத் தட்டிக் கொடுத்திருக்கலாம். அப்படி செய்திருந்தால் சண்டேசுரர் பெருமை உலகுக்குத் தெரிந்திராதே! தன்னை முட்ட வந்த பசுமாட்டை வெளுவெளுவென்று வெளுத்துவிட்டான் அந்த ஆயச் சிறுவன். பசுவின் கண்ணில் நீர் வந்த்தோ என்னவோ அங்கே நின்ற பிரம்மச்சாரி ஒருவனுடைய கண்ணில் கடகடவென்று நீர் அருவிப் புறப்பட்டது.

சோழவள நாட்டில் மண்ணியாற்றங் கரையில் உள்ள சேய்ஞலூரில் நடந்த செயல் இது. வேத வேள்வியைப் போற்றி வாழும் அந்தணாளர் மலிந்த ஊர் அது. எப்போதும் வேத முழக்கமும் வேள்விப் புகையும் நிரம்பிய பெரும்பதி. முருகன் இறைவனை வழிபட்ட நல்ல ஊர். ஆதலால் அதற்குச் சேய்ஞலூர் என்ற திருநாமம் உண்டாயிற்று. அதுவே இறைவனுக்கு மற்றொரு சேயை வழங்கும் நல்ல ஊராகவும் ஆயிற்று.

சேய்ஞலூர் அந்தணர்களில் எச்சதத்தன் (யக்ஞதத்தன்) என்பவன் ஒருவன் அவனுடைய குமாரன் விசாரசர்மன். அந்தப் பிள்ளையாண்டானே ஆயன் கைக்கோலால் அடிப்பட்ட ஆவைக் கண்டு கண்ணீர் சொரிந்தவன்.

மறையவர் வீட்டு ஆவினத்தை மேய்த்துவரும் கடமையைச் செய்பவன் அந்த ஆய்க்குலச் சிறுவன். அவன் மாட்டை அடித்தவுடன் இந்த அந்தணச் சிறுவனுக்கு உள்ளம் கலங்கியதற்குக் காரணம். அவன் இளமையில் இறைவன் அருளொளி வீசும் அறிவு நிறைந்தவனாக இருந்ததுதான். உபநயனம் செய்வதற்கு முன்பே அவனுக்கு வேதமந்திரங்கள் தெரிந்துவிட்டன். அவனுக்கு ஏழு வயசில் முப்புரிநூல் அணிவித்தனர். அதன்பின் வேத அறிவில் தலைச்சிறந்து நின்றான். அந்த அறிவோடு இறைவனை எண்ணி வாழும் பேரன்பும் அவனிடம் உண்டாயிற்று.

ஆய்க்குலச் சிறுவன் பசுவை மேலும் அடிக்காமல் சென்று அவனைத் தடுத்தான் விசாரசர்மன். அவனுடைய மனக்கண்முன் ஆவினத்தின் பெருமைகள் ஒன்றப்பின் ஒன்றாகத் தோன்றின. “எல்லாத் தேவர்களையும் எல்லாத் தீர்த்தங்களையும் தன் உடம்பில் கொண்டு விளங்கும் புண்ணியத் திருவுருவம் அல்லவா பசு? நம்மையாளும் சிவபெருமானுடைய அபிசேகத்திற்குப் பஞ்சகவ்வியங்களை வழங்கும் பெருமை உடையதாயிற்றே. சிவபெருமானுக்கு உகந்த திருநீற்றுக்குரிய மூலம் அவதாரம் செய்யும் மூர்த்தம் அன்றோ? எல்லாவற்றுக்கும் மேலாக இறைவன் எழுந்தருளும்

விடைத்தேவருடைய குலம் அல்லவா இந்த ஆவின் குலம்?" என்ற நினைவினால் அவன் உருகினான்.

"இனிமேல் இந்த பசுக்களை நீ மேய்க்க வேண்டாம். நானே மேய்க்கிறேன்" என்று ஆயனைப் பார்த்து மறைச் சிறுவன் கூறி, அன்றுமுதல் அவற்றைப் பாதுகாக்கும் செயலை மேற்கொண்டான். மறையவர்களும் அதற்கு உடன்பட்டார்கள்.

பசுக்களின் மேன்மையை அறிந்தவனாதலின் அவற்றை வளப்பமான புல் உள்ள இடங்களுக்கு ஓட்டிச் சென்று மேயவிட்டும்; தானே புல்லைப் பறித்து அளித்தும், நல்ல நீர் உள்ள இட்த்தில் நீரருந்தச் செய்தும் கண்ணும் கருத்துமாகப் போற்றி வந்தான். அதனால் பசுமாடுகள் முன்பைவிட அழகும் வளமும் பெற்று நிரம்பப் பாலைப் பொழிந்தன. வீட்டிலே கன்றைவிட்டுவிட்டு வந்த பசுக்கள், மறைக் கன்றாகிய விசாரசர்மனிடத்தில் மிக்க அன்பு உடையவனாகி அவனை நக்கிக் கொடுத்தும், அவன்மேல் உராய்ந்தும், மறைக்காமல் மடியிலிருந்து பாலைப் பொழிந்தும் தம் அன்பைப் புலப்படுத்தின.

ஆவினங்கள் பால் பொழிவதைக் கண்ட சிறுவனுக்கு ஒரு நினைவு உண்டாயிற்று. "இறைவனுக்கு அபிசேகம் செய்வதற்குரியது அல்லவா இப்பால்" என்ற எண்ணத்தால் ஒரு காரியம் செய்யத் தொடங்கினான். மண்ணியாற்றங் கரையிலே மணலாலே ஒரு கோயில் கட்டினான். அதன் நடுவே மணலால் சிவலிங்கம் அமைத்தான். புதிய பாண்டங்களைக் கொண்டுவந்து பசுக்களின் மடியிலிருந்து பாலைக் கறந்து வைத்துக் கொண்டு அவற்றை மந்திரங் கூறி அபிசேகம் செய்தான். அங்கே கிடைக்கும் மலர்களையும் இலைகளையும் பறித்து வந்து அருச்சனை செய்தான். இந்த அன்புப் பூசை நாள்தோறும் நடைப்பெற்று வந்தது. பூசை செய்ய புகுந்துவிட்டால் அச்சிறுவன் எல்லாவற்றையும் மறந்து அப்பூசையில் ஈடுபட்டிருப்பான். இந்தப் பூசைக்கு பால் வழங்குவதனால் வீட்டில் சுரக்கும் பாலின் அளவு குறையவில்லை. பின்னும் மிகுதியாயிற்று.

ஒருநாள் அயலூரான் ஒருவன் அந்த இளம் பெரியான் செய்யும் பூசையைக் கண்டான். அந்தப் பிரமச்சாரியின் பக்தியைத் தெரிந்து கொள்ளும் பாக்கியம் அவனுக்கு இல்லை. பையன் விளையாட்டாகப் பாலையெல்லாம் மணலில் ஊற்றி வீணாக்குகிறான் என்று எண்ணினான். அதோடு அவன் நிற்கவில்லை. உடனே சேய்ஞலூர் சென்று "இந்த பைத்தியக்காரப் பிள்ளையாண்டானை நம்பி மாடுகளை மேய்க்க அனுப்பியிருக்கிறீர்களே! இவன் பாலைக் கறந்து கறந்து மணலில் கொட்டுகிறானே!" என்று ஊர்ப்பெரியவர்களிடம் சொல்லிவிட்டான்.

அவர்கள் எச்சதத்தனை அழைத்து, "உன் பிள்ளை இப்படிச் செய்கிறானாமே?" என்று விசாரித்தார்கள்.

எனக்கு இச் செய்தி தெரியாது. இதுவரையில் நடந்ததைப் பொறுத்துக் கொள்ளுங்கள். இனி நடவாமல் பார்த்துக் கொள்கிறேன்" என்று அவன் உறுதி மொழி கொடுத்தான். இதைத் தன் பிள்ளையிடம் சொல்லாமல் அன்று இரவு இருந்த எச்சதத்தன், மறுநாள் தம் மகனுடைய செயலைக் கவனிக்கப் புறப்பட்டான்.

வழக்கம்போல் புண்ணிய உருவாகிய அச் சிறுவன். பல மண் பாண்டங்களில் பாலைக் கறந்து அருகே வைத்துக் கொண்டு பூசைச் செய்யத் தொடங்கினான். அவனுடைய தந்தையோ, என்ன நடக்கின்றது என்பதைக் காண அருகே ஒரு குரா மரத்தின்மேலே ஏறி மறைந்து கொண்டிருந்தான். ஆவாகனம் முதலியவற்றை முறைப்படியே செய்த இளம் பக்தன் பசுவின் பாலை எடுத்து மஞ்சனம் ஆட்டத் தொடங்கினான். அப்போது சினம் மிக புதல்வன் முதுகில் அடித்தான். பூசையில் ஈடுபட்டுத் தேக உணர்வையும் மறந்திருந்த விசாரசர்மனுக்கு அந்த அடி உறைக்கவில்லை. அவன் பூசையை நிறுத்தவில்லை.

பின்னும் தந்தைக்குக் கோபம் அதிகமாயிற்று. அங்கே பாலை நிரப்பி வைத்திருந்த பாண்டங்களைக் காலால் தட்டினான். அப்போதுதான் விசாரசர்மனுக்கு உண்மை தெரிந்தது. தன் தந்தை செய்யும் அடாத காரியம் அவன் கண்ணில் பட்டது. அருகில் இருந்த கோலை எடுத்தான். திருவருட் பலத்தால் அதுவே கோடரியாக மாறியது. இறைவனுக்குரிய திருமஞ்சன பால் வைத்த குடங்களைச் சிதைத்த கால்களின் மேல் அதை வீசினான் கால் இரண்டும் துண்டுபட்டு முதியவன் கீழே விழுந்தான். அதே சமயத்தில் வான வெளியில் இறைவன் விடையூர்தியின் மேல் உமாதேவியுடன் தோன்றினான்.

பக்தி முதிர்ந்த பாலகன் அப் பெருமானுடைய திருத்தாளில் விழுந்து பணிய இறைவன் அச் சிறுவனை எடுத்து அணைத்து. பெற்றெடுத்த தந்தையை நீ மழுவால் எறிந்தாய். அந்த தகப்பனை நீ போக்கினாய். இனி உனக்கு நாமே தந்தை" என்று சொல்லி அவனுடைய உச்சிமோந்து திருவருள் பாலித்தான். சிவபெருமானுடைய அணைப்பிலே தெய்வ ஒளிமயமாகத் திகழ்ந்தான் சிறுவன். இறைவன் தன்னுடைய திருவடியில் இருந்த கொன்றைமாலையை எடுத்து விசாரசர்மனுக்கு அணிந்து, "அப்பா நம்மைப் பூசை செய்த நிர்மால்யங்களும், நிவேதனம் செய்த பிரசாதமும் உனக்கு உரிமையாகும்படி செய்தோம். உனக்கு சண்டீச பதம் வழங்கினோம். இனி நீ சிவன்டியார்களாகிய மாகேசுவர்களுக்கெல்லாம் தலைவனாகப் பிரதம மாகேசுவரனாக விளங்குவாய்" என்று அருளினான். அதுமுதல் விசாரசர்மர் சண்டேசர் ஆனார். இறைவன் பூசையின் நிர்மால்யங்களை அவருக்கு அணிந்து வழிபட்டார்கள் பக்தர்கள். திருக்கோயில்களில் நிவந்தம் அமைப்பாரும் பிறரும் முதல் மாகேசுவரராக வழிபட்டுத் தொண்டு புரிந்தனர்.

தான் செய்த அபசாரத்திற்குரிய தண்டனையைப் பேரடியால் பெற்ற எச்சதத்தன், அத் தண்டனையால் பாவம் நீங்கிச் சிவலோகப் பதவியை அடைந்தான்.

விசாரசர்மர், தாமே பாலைச் சோரவிட்ட ஆவின் அன்பையும், அப்படிக் கீழே சொரியும் பாலையும் கண்டு, மக்களுக்கு வேண்டிய அளவுக்கு மேற்பட்டுப் பெருகும் அப்பாலை. பின்னும் சிறந்த தொண்டுக்குப் பயன்படுத்த எண்ணினார். அதனால் சிவ பூசைக்குப் பயன்படுத்தினார். அவருக்குச் சிவபூசையே விளையாட்டின்பத்தை தந்தது. ஒருமை மனத்தோடு இறைவன் பூசையில் ஈடுபட்ட அதுவே அவருக்கு தவமாயிற்று. வேண்டிய வேண்டியாங்கு எய்தும் தவத்தால் அவர் உயர்ந்த பதவியைப் பெற்றார்.

## 5.11 **நாயன்மார்கள் வரலாறு –** திருநாளைப் போவார்

நாயன்மார் கதை – ஆசிரியர் வாகீச கலாநிதி கி.வா. ஜகந்நாதன்

சோழ நாட்டில் உள்ள பல பிரிவுகளில் மேற்கா நாடு என்பது ஒன்று. கொள்ளிடத்தின் கரையில் அந்த நாட்டில் ஆதனூர் என்ற ஊர் நீர் வளமும் நிலவளமும் நிரம்பியிருந்தன. அவ்வூரில் உள்ள மக்கள் மிக்க செல்வப் பெருக்கு உடையவர்களாக வாழ்ந்தனர். பல பெருங்குடி மக்கள் நெருங்கி வளர்ந்துவரும் வளப்பம் உடையது அது.

அவ்வூரைச் சார்ந்த புலைப்பாடியில் பஞ்சம குலத்தில் உள்ள மக்கள் உழுதல் முதலிய தம் கடமைகளைச் செவ்விதாகச் செய்து தம்க்குரிய உரிமைகளைப் பெற்று மனைவி மக்களோடு இன்புற்று வாழ்ந்து வந்தார்கள். அவர்களில் நந்தனார் என்பவர் ஒருவர். அவர் பிறந்து உணர்வு வந்தது முதலே சிவபெருமானிடம் இடையீடு இல்லாத அன்பு உடையவராக இருந்தார். வேறு நினைவின்றி எப்போதும் இறைவன் திருவருளையே சார்பாகக் கொண்டு வாழ்ந்து வந்தார்.

தமக்கு பரம்பரையாக விட்டிருந்த சுதந்திரமாகிய நிலத்தைத் தம்முடைய வாழ்க்கைக்கு உரிய துணையாகக் கொண்டு தாம் செய்ய வேண்டிய தொழில்களைச் செய்து அறம் திறம்பாத நெறியில் நின்றார் நந்தனார். பறை குலத்தினருக்குரிய தொழில்களில் வல்லவராகிய அவர் தம் செயல்களில் சிவபெருமான் திருத்தொண்டையே செய்து வந்தார். தோல், நரம்பு முதலியவற்றை மக்களின் உபயோகத்திக்கு மற்றவர்கள் கொடுத்து அதனால் வரும் ஊதியத்தைப் பெற்று வாழ்ந்தார்கள். நந்தனாரோ சிவபெருமானுடைய கோயில்களில் உள்ள பேரிகை முதலிய தோற் கருவிகளுக்கு வேண்டிய தோலைக் கொடுப்பார். கோயிலில் இசைச் தொண்டு புரிப்வர்களுடைய வீணைக்கும் யாழுக்கும் வேண்டிய நரம்புகளை அளிப்பார். கோயில்களில் ஆராதனைக்குக் கோரோசனையைக் கொடுப்பார்.

இறைவனுடைய அன்பர்கள் உலகத்தில் தொழில் செய்து வாழ்ந்தாலும், அந்த தொழிலிலும் இறைவனுடைய திருத்தொண்டு இடம் கொள்ளும் தம்முடைய ஜீவனோபாயமாகக் கொண்ட தொழில் எதுவானாலும், அதிலும் சிவத்தொண்டு

செய்வதற்கு வாய்ப்பு உண்டு. இறைவன் திருக்கோயிலுக்குள் சென்று தொண்டு புரியும் நிலையைப் பெறாமல் இருந்தும், நந்தனார் தம் தொழிலுக்கு ஏற்ற வகையில் அக்கோயில்களுக்குப் பயன்பட்டார். மனம் இருந்தால் வழியும் உண்டாகும் அல்லவா?

ஒவ்வொரு கோயிலிலும் முரசு, பேரிகை முதலிய இசைக் கருவிகள் இருக்கும் அவற்றுக்கு வேண்டிய தோல், வார், நரம்பு ஆகியவற்றைக் கொடுப்பதற்காக நந்தனார் ஒவ்வொரு நாளும் கோயில்களை நோக்கிச் செல்வார். கோயிலில் வாயிலின் புறத்தே நின்று தாம் கொணர்ந்தவற்றைக் கொடுத்துவிட்டு, அங்கே நின்றபடியே கோயிலையும் பார்த்துப் பார்த்து இன்புறுவார்; குதிப்பார்; கூத்தாடுவார்; பாடுவார்.

கோயிலையும் கோபுரத்தையும் தரிசிக்கும் இன்பத்தைத் தம்முடைய தொழிலோடு பிணைத்துக் கொண்டார் நந்தனார். மற்றவர்கள் புலைச்சேரி வாழ்க்கையில் அருவருக்கும் வகையில் வாழ்ந்தாலும், நந்தனார் அவ்வாழ்க்கையில் தூய்மையும் தொண்டு நெறியும் உடையவராகி விளங்கினார்.

ஒரு முறை திருபுன்கூர் போய் வரவேண்டும் என்ற ஆவல் அவருக்கு உண்டாயிற்று அங்கே போய்த் தம்மால் இயன்ற பணிகளைச் செய்ய வேண்டும் என்பது அவர் எண்ணம். மிக்க ஆவலோடு அத்திருப்பதியை அணைந்து திருக்கோயிலுக்குச் சென்றார். திருவாயிற்புறத்தே நின்று உள்ளே உள்ள சிவலிங்கப் பெருமானைத் தரிசிக்க ஆவல் கொண்டார். அங்குள்ள பெருமானுடைய திருநாமம் சிவலோகநாதன் என்பது அவருடைய விருப்பம் நிறைவேறத் தடையாக இருந்தது சந்நிதியில் இருந்த நந்தி. அதைக் கண்டு வருந்திய நந்தனார், “இறைவனைத் தரிசிக்க இயலவில்லையே!” என்று மனம் வாடித் துயரமடைந்தார். அதுகண்ட சிவபெருமான் தன் சந்நிதியில் இருந்த நந்தியை விலகச் செய்து தரிசனம் தந்தருளினான். நந்தனார் வாயிற்புறத்தில் நின்றபடியே சிவபெருமானைத் தரிசித்து ஆனந்தக் கூத்தாடினார். பிறகு அவ்வூரைச் சுற்றி வரும்போது அங்கே ஒரு பள்ளம் இருப்பதைக் கண்டார். திருக்கோயிலுக்குப் போகும் அன்பர்களுக்குப் பயன்படும்படி அங்கே ஒரு குளம் வெட்டலாம் என்ற எண்ணம் அப்போது நந்தனாருக்கு தோன்றியது. அப்படியே அவர் முயன்று அங்கே ஒரு குளத்தை வெட்டினார்.

தம்முடைய உடல் வலிமையினாலும் தொழிலினாலும் சிவத்தொண்டையும் சிவனடியார் தொண்டையும் செய்து வந்த நந்தனாருக்கு ஒவ்வொரு நாளும் பெருமானுடையை நினைவாகவே சென்றது. அருகிலும் சேய்மையிலும் உள்ள தலங்களுக்குச் சென்று குளம் வெட்டியும் சுவர் வைத்தும் தோல் வார் அளித்தும் தம் தொண்டு வகைகளைப் பெருக்கிக் கொண்டார். “நமக்கு இதனால் பயன் உண்டா, நம்மை யாரேனும் புகழ்ந்து பாராட்டுகின்றார்களா?” என்று பாராமல் தம்மால் இயன்ற தொண்டுகளைச் செய்து வந்தமை நந்தனாரின் உண்மையான சிவபக்தியைக் காட்டியது. உயிர் குலத்துக்குச் செய்யும் தொண்டுகளையும் இறைவனுடைய திருத் தொண்டாகவே கருதுவது பெரியோர் இயல்பு. “நாமும் அவருடைய நிலையில்

வசதிகளோடு இருந்தால் எவ்வளவோ செய்வேன்” என்று சொல்கின்றவர்கள் உண்டு. தொண்டு புரிவதற்கு இதுதான் உரிய பதவி. இதுதான் உரிய வசதி என்ற வரையறை இல்லை. எல்லோரும் தொண்டு புரியலாம். ஆனால் எல்லோருக்கும் ஒன்று இன்றியமையாதது தொண்டு புரிய வேண்டும் என்ற ஆர்வம் மாத்திரம் இருக்க வேண்டும். அது இருந்துவிட்டால் அவரவர்களுக்கு ஏற்ற வகையில் செய்யும் தொண்டுகள் இன்னவையென்று அவர்களுக்கே புலப்படும்.

நந்தனார் அக்காலத்து வருணாசிரம அமைப்பின்படி திருகோயிலுக்குள் புக இயலாத நிலையில் இருந்தார். ஊருக்குள்ளும் தம் விருப்பப்படி சென்று பழகும் வாய்ப்பு அவருக்கு இல்லை. ஆனாலும் அவர் சிவபிரான் கோயில்களுக்குச் சென்றார். பக்தி செய்தார், பலருக்குப் பயன்படும் தொண்டுகளைச் செய்தார். இறைவன் திருக்கோயிலில் முரசு அறைவது ஒரு தொண்டு. அந்த தொண்டை நேர்முகமாக நந்தனார் செய்ய இயலாது ஆயினும் அந்த முரசுக்குத் தோலும் வாரும் கொடுப்பதனால் முரசுத் தொண்டு செய்த பயனும் இன்பமும் அவருக்கு உண்டாயின. தம் கையால் முரசு அறைந்து தொண்டு புரியும் பக்தர் முரசை அறையும் போது இன்புற்றார். அந்த ஒலியைக் கேட்டு நந்தனாரும் இன்பம் அடைந்தார். தம் குழந்தைக்கு ஒரு விளையாட்டுப் பொம்மையைத் தந்தை வாங்கி தருகிறார். அந்த பொம்மையை வைத்துக் கொண்டு குழந்தை விளையாடி இன்புறுகின்றது. பொம்மையை வாங்கிக் கொடுத்தவர் தாமே அதை வைத்து விளையாடுவதில்லை. ஆனால் குழந்தை விளையாடுவதைக் கண்டு அவரும் மிக்க இன்பத்தை அடைகிறார். இதே மனநிலை நந்தனாருக்கு தொண்டுகளைச் செய்ய இயலவில்லையே!” என்ற எண்ணம் இன்றி, அத்தொண்டுகளைச் செய்பவர்களைப் பார்த்து, அவற்றில் தாமும் பங்கு கொண்ட்தாகவே இன்புற்றார்.

நந்தனார் சிவனடியார்களை நீராட்டவில்லை. இறைவன் திருமஞ்சனத்துக்கு நீர் சுமந்து செல்லவும் இல்லை. அப்படி செய்ய முடியவில்லையே என்று எண்ணி ஏங்கிக் கொண்டு நிற்கவில்லை அவர். குடத்தோடு நீர் அளிப்பதைத் தான் உலகத்தில் சமுதாயத்தில் சட்டம் தடுத்ததே ஒழிய குளத்தோடு நீர் அளிப்பதைத் தடுக்கவில்லை. அவர் ஒருகுடம் நீர் தரவில்லை;ஆனால் பல குளம் வெட்டிப் பல குள நீர் தந்தார். அவற்றில் எத்தனை தொண்டர்கள் நீராடனார்கள்! இறைவனுடைய திருமஞ்சனத்துக்கு எத்தனை குளங்கள் பயன்பட்டன! இந்த உண்மையை நினைந்து தொண்டு புரிந்தார் நந்தனார்.

இவற்றில் பல தலங்களுக்குச் சென்று தம்முடைய திருத் தொண்டிற் சிறந்து நின்ற நந்தனாருக்கு ஓர் ஆசை எழுந்தது. எல்லாக் கோயில்களிலும் சிறந்தமையால் கோயில் என்று அடையின்றிச் சொன்னாலே தன்னை நினைக்கும் தலைமையுடன் விளங்கும் சிதம்பரம் செல்ல வேண்டும் என்ற ஆர்வம் உண்டாயிற்று அது வரவரப் பெருகியது. ஒருநாள் இரவு முழுவதும் தூக்கமே இல்லாமல் தில்லையைப் பற்றியே நினைத்துக் கொண்டிருந்தார். அத் திருதலத்துக்குச் சென்றவர்கள் அதன் பெருமையைப் பற்றியும்

அதன் அமைப்பைப் பற்றியும் சொல்லக் கேட்ட செய்திகள் யாவும் இப்போது அவர் நினைவுக்கு வந்தன. “நம்முடைய குலத்தினார்கள் அங்கே சென்று ஒன்று செய்ய இயலாதே! பல பிரகாரங்களையுடைய அக்கோயிலுக்குள் புகுவது நடவாத காரியம். புறத்தே இருந்து தரிசிக்க முடியாது. பெரிய திருக்கோயில். இந்த நிலையில் அங்கே போய் என்ன செய்யப் போகிறோம்?” என்ற எண்ணம் தோன்றவே சற்று சோர்வு உண்டாயிற்று. ஆனலும் அவருடைய விருப்பம் தனியவில்லை. தில்லைக்கு செல்லவேண்டும் என்ற காதல் மேலும் மேலும் பெருகியது. “நாளைப் போவேன்” என்று துணிந்தார்.

மறுநாள் விடிந்தது; விரிந்த உலகமும் தாம் வாழும் புலைச்சேரியும் அதில் வாழ்வார்களுக்கு அமைந்திருக்கும் கட்டுப்பாடுகளும் மறுபடியும் நினைவுக்கு வந்தன. “நான் அங்கே போய் எதைப் பார்க்க முடியும்?” “மூவாயிரம் அந்தணர்கள் இடைவிடாமல் இறைவனுகு தொண்டுபுரியும் திருக்கோயில் அது” என்று சொல்கிறார்கள். அவர்கள் வாழும் இடத்தை நான் போய்ப் பார்க்க முடியுமா? கோயிலுக்கு உள்ளே சிறிதேனும் செல்ல முடியுமா?” என்ற எண்ணங்கள் வரவே. அன்று புறப்படவில்லை. மறுபடியும் அவர் உள்ளம் அவரை உந்தியது. “நாளைக்குப் போகலாம்” என்று ஆறுதல் பெற்றார். இப்படி “நாளைப் போவேன்”, “நாளைப் போவேன்” என்று ஒவ்வொரு நாளாகக் கழிந்துக் கொண்டிருந்தது.

“சிதம்பரம் போகப் போறீராமே? எப்போது போகிறீர்?” என்று அவரைக் கண்டு நண்பர்கள் கேட்பார்கள். “நாளைக்குப் போகலாம் என்று எண்ணியிருக்கின்றேன். இறைவன் திருவருள் புரியவேண்டும்” என்று சொல்லிக் கொண்டே இருந்தமையால் அவரை யாவரும், “நாளைப் போவான்” என்று வழங்கத் தலைப்பட்டனர்.

நந்தனாருக்குத் தில்லைக்குச் செல்லாவிட்டால் உலகில் வாழ்ந்து பயன் இல்லை என்ற அளவிற்கு ஆர்வம் முதிர்ந்தது. ஒருநாள் புறப்பட்டேவிட்டார். கொள்ளிடத்தைக் கடந்து சென்று திருத்தில்லையின் எல்லையில் வந்து நின்றார். “நாளைப் போவேன்” என்று சொன்னவர். “இன்று வந்தேன்” என்ற நிலையில் இருந்தார். ஊருக்குள் வேதம் ஓதும் கிடைகளும் வேள்வி செய்யும் சாலைகளும் பல இருக்கும் என்று முன்பு கேட்டிருந்தார். வேத ஒலியால் அங்கே கிடைகள் இருப்பதையும் வேள்விப் புகையால் அங்கே வேள்விச் சாலைகள் இருப்பதையும் உணர்ந்து கொண்டார். “நாம் எப்படி உள்ளே செல்வது?” என்று அஞ்சினார்.

ஊரின் திருமதிலை வலம் வந்து வணங்கித் திருமதில் வாயிலில் வந்து நின்றார். இப்படியே இரவும் பகலும் வலம் செய்து கொண்டே வந்து “எம்பெருமானைத் தரிசிக்கும் வாய்ப்பு நமக்கு இல்லையே!” என்று உருகி நைந்தார். “இறைவனுடைய ஆனந்த நடனத்தைப் பற்றி எவ்வளவோ கேட்டிருக்கிறேன். இந்த உடம்பை வைத்துக் கொண்டு

நான் எப்படித் தில்லை அமபலவாணனைத் தரிசிக்க முடியும்?" என்று அரற்றினார். மிகவும் ஏங்கினார். சோர்வு மிகுதியினால் கீழே படுத்துத் துயின்றார்.

அப்போது அவருடைய கனவில் சிவபெருமான் எழுந்தருளி, "இந்த உடம்புடன் எப்படி நான் நடன தரிசனம் செய்வேனென்று வருந்துகிறாயே. நீ அஞ்சாதே, நீ தீயிடை மூழ்கி எழுந்து தில்லை வாழ் அந்தணர்களுடன் நம்முடைய சந்நிதிக்கு வருவாயக" என்று திருவாய் மலர்ந்தான். அப்படியே தில்லைவாழ் அந்தணர் கனவிலும் தோன்றி, நம்மைத் தரிசிக்கும் பேரார்வத்துடன் திருக்குலத்தில் தோன்றிய நந்தன் என்னும் அன்பன் திருமதிற்புறத்தே பாடு கிடக்கிறான். அவனை அழைத்து வந்து நெருப்பிற் குளிப்பாட்டி என் சந்நிதிக்கு அழைத்து வாருங்கள்" என்று கட்டளையிட்டான்.

நந்தனார் துயிலினின்றும் எழுந்து எம்பெருமானுடைய திருவருளை எண்ணி எண்ணி உருகினார். "நாயேனுடைய ஆசை நிறைவேற இயலாதென்று தானே உலகம் கூறும்? அதை நிறைவேறத் திருவருளை துணிந்தபோது யார் எதிர்நிற்க முடியும்? எளியேனிட்த்தில் எம்பெருமானுக்குள்ள பெருங் கருணைதான் என்னே!" என்று குதித்து கூத்தாடினார்.

கனவு கண்ட அந்தணர்கள் எம்பெருமான் இட்ட கட்டளைப்படியே திருமதிற்புரத்தை அணுகி நந்தனாரிடம் வந்து, "ஐயரே, எம்பெருமான் இட்ட கட்டளையை நிறைவேற்றத் தங்களிடம் வந்தோம். தீ அமைத்துத் தரும்படி பெருமான் பணித்தான்" என்று கூறினார். "நாயேன் உய்ந்தேன்" என்று கூறி அவர்களை வணங்கினார் நந்தனார். அந்தணர்கள் திருமதிலின் தெற்கு வாயிலுக்கு புறத்தே வேறு அந்தணர்கள் அமைந்திருந்த தீக்குழிக்கு அவரை அழைத்துச் சென்றார்கள். அங்கே நந்தனார் இறைவன் திருவடியை உளத்தே கொண்டு அவ்வெரியை வலஞ் செய்து வணங்கி அதன்கண் மூழ்கினார். மூழ்கியவுடன் எழுந்தார். அப்போது தேசு மாமுனிவர் கோலத்தோடு விளங்கினார். அவரைக் கண்டு தில்லை வாழ் அந்தணர்கள் கைதொழுது வணங்கினார்கள். எம்பெருமான் திருவருளையும் நாளை போவருடைய பெருமையையும் எண்ணி எண்ணி அதிசயம் கொண்டார்கள்.

மற்றச் தொண்டர்கள் நீரில் ஆடித் திருக்கோயிலுக்கு செல்வார்கள். நந்தனாரோ நெருப்பில் ஆடித் திருக்கோயிலுக்குள் புகலானார். இறைவன் தீயாடி. அவன் அடியாரும் இப்போது தீயாடினார். தாம் அவ்வளவு காலம் வளர்த்த வேள்வித் தீயில் புகையும் புண்ணியத்தையும் கண்ட தில்லைவாழ் அந்தணர்கள் இப்போது வளர்த்த எரியில் மக்கள் குலத்தின் புண்ணியப் பயனைப் போன்ற மறை முனிவரைக் கண்டார்கள். இரசவாதம் செய்பவர்கள் செம்பை எரியிலிட்டுத் தங்கமாக எடுப்பது போல, இறைவனுடைய திருவருளால் எரியில் புகுந்த திருக்குலத் திருமேனி கொண்ட நந்தனார் முனிபுங்கவராக எழுந்த அதிசயத்தை அவர்கள் கண்டு மனம் கரைந்தார்கள்.

அந்தணர்கள் சூழ, வாத்தியங்கள் முழங்க, மறையொலி ஒலிக்கத் திருநாளைப் போவார் தம்மைக் கனவில் வந்து அழைப்ப அப்பனைக் காணச் சென்றார்.

திருக்கோபுரத்தைக் கை தொழுது ஏனைய சந்நிதிகளைந் கடந்து வலமாக வந்து இறைவன் உலகுய்ய நடமாடும் எல்லியினைத் தலைப்பட்டார். அப்பால் அவரைக் காணாமல் அந்தணர் அதிசயித்தார். தன்பால் வந்தணைந்த திருத்தொண்டரின் பிறவியையும் வினையையும் நீறாக்கி இறைவன் தன் திருவடிக் கண்ணே சேர்த்துக் கொண்டான்.

நந்தனாருக்குப் புறவாழ்வில் இறைவனுடைய திருவருளுக்கு உரியவராதற்கு இயலாத நிலை இருந்தது. அவரைப் போன்ற நிலையில் உள்ளவர்கள் அந்தப் புறத் தடைக்கு அஞ்சி இருந்தார்கள். ஆனால் நந்தனார் அகவாழ்வில் இறைவனுடன் அளவளாவினார். சாதி, குலம் முதலிய தடை ஏதும் அகவாழ்வில் இல்லை. ஆதலின் அவர் தம் அக வாழ்க்கையில் வர வரத் தூய்மை பெற்றுப் புண்ணிய மாமுனிவராகிவிட்டார்.

புறத்திலே முனிவராகவும் அகத்திலே புலையராகவும் இருப்பவர் பலர். அவர்களுக்கு இறைவன் அருள் எளிதில் கிடைப்பதில்லை. அகத்திலே முனிவராகவும் புறத்திலே புலையராகவும் இருந்தார் நந்தனார். போலியாகத் தவ வேடம் தாங்குபவர்கள் தம் வேடத்தைத் தாமே கலைத்துக் கொள்ளலாம். ஆனால் புலையராக இருந்த நந்தனாருடைய புற வேட்த்தை இறைவன் கலைக்க முன் வந்தான். அகமும் புறமும் தவத் தூய்மை தாங்கிய அந்தணர்களைக் கொண்டு அந்த மாற்றத்தை அவன் செய்வித்தான். முன்னவனே முன் நின்றால் முடியாத பொருள் உளதோ?"

அக வாழ்க்கையில் முனிவராக உயர்ந்து நின்றவர்க்குத் தடையாக நின்ற புற வாழ்க்கையை இறைவன் மாற்றிவிட்டான். அவரைத் தன் திருவடி மாமலரில் வண்டாக உறையும்படி செய்தருளினார்.

## 5.12 **நாயன்மார்கள் வரலாறு –** குங்கிலியக் கலய நாயனார்

நாயன்மார் கதை – ஆசிரியர் வாகீச கலாநிதி கி.வா. ஜகந்நாதன்

சோழ மண்டலத்தில் உள்ளது திருக்கடவூர் வீரட்டம், மார்க்கண்டேயருக்காகச் சிவபெருமான் காலனை உதைத்த திருத்தலம் அது அங்கே இறைவனுடைய அருளை நினைந்து வாழும் அந்தணர் பலர் இருந்து வந்தனர். அவர்களுக்குள் கலயர் என்பவர் ஒருவர் அவர் திருக்கடவூர் வீரட்டத்தில் எம்பெருமான் சந்நிதியில் குங்கிலியத் தூபம் இடும் திருத்தொண்டைச் செய்து வந்தார்.

இறைவனுடைய திருவருள் அவரைச் சோதனை செய்து, உலகத்தாருக்கு அவருடைய பெருமையைக் காட்ட எண்ணியதனால் அவருக்கு வறுமை உண்டாயிற்று. தமக்கு வேண்டிய பொருள்களைக் குறைத்துக் கொண்டாரேயன்றி, இறைவனுக்கு

இடும் குங்கிலியத் தூபத்தைக் குறைக்கவில்லை. வறுமை வளரவே தம்முடைய கன்று காலிகளை விற்றார். நிலத்தை விற்றார்.

கடைசியில் ஒன்றும் இல்லாமல் போயிற்று இரண்டு நாட்களாகக் குழந்தைகளுக்கும் மற்றவர்களுக்கும் உணவே இல்லை. அவர் கையில் இப்போது எப்பொருளும் இல்லாமல் வறண்டு போயிற்று. அப்போது அவருடைய மனைவியார், “என் செய்வது?” என்று யோசித்தார். அவர் திருக்கழுத்தில் திருமங்கலியம் மாத்திரம் இருந்தது. அதனைக் கழற்றித் தம் கணவரிடம் அளித்து, “குழந்தைகள் உணவின்றி வாடுகின்றன. இதைக் கொண்டு போய் விற்று நெல் வாங்கி வாருங்கள் என்று சொல்லி அனுப்பினார். கலயர் அதனை வாங்கிக் கொண்டு நெல் வாங்கலாம் என்ற எண்ணத்தோடு வெளியே புறப்பட்டு வந்தார்.

அவர் தெருவின் வழியே வந்து கொண்டிருக்கையில் எதிரே ஒரு வணிகன் மாட்டின்மேல் ஏதோ பொதியைப் போட்டுக்கொண்டு வந்தான். குங்கிலியக் கலய நாயனார், “என்ன மூட்டை அப்பா, இது?” என்று கேட்டார்.

“குங்குலிய மூட்டை” என்றான் அவன்.

அந்த வார்த்தை அவர் காதில் விழுந்தது. அவர் தாம் நெல் வாங்க வந்ததையும் மறந்தார். நம் மனைவியின் வேண்டுகோளை மறந்தார். உணவு இன்றித் தாமே சோர்வடைந்ததை மறந்துவிட்டார். “ஆ! குங்கிலியமா? எம்பெருமான் கைங்கரியத்துக்கு உரிய பொருள் அல்லவா? இறைவனுடைய திருவருடைய என்னென்று சொல்வது! என் கையில் பொன்னைத் தந்து எதிரே குங்கிலியப் பொதியையும் வரச் செய்திருக்கிறான் என்று களிப்பெய்தினார்.

“பொன் கொடுத்தால் குங்கிலியம் கொடுப்பாயா?” என்று வணிகனைக் கேட்டார்.

“இதை விலைக்குக் கொடுக்கத்தான் கொண்டு வந்தேன். எத்தனை பொன்னுக்கு வேண்டும்?” என்று அவன் கேட்டான்.

உடனே அளவற்ற மகிழ்ச்சி அடைந்த குங்கில்யக் கலயர் தம் கரத்தில் இருந்த தாலியைக் காட்ட வணிகன் அதைப் பெற்றுக் கொண்டு குங்கிலியப் பொதியை அவருக்கு அளித்துச் சென்றான். அதைப் பெற்ற நாயனார் பெரும் புதையலைப் பெற்ற வறியவனைப்போல நேரே கோயிலுக்குச் சென்றார். குங்கிலியப் பொதியை அங்குள்ள உக்கிராணத்திற் சேர்பித்து இறைவனுடைய அருளை எண்ணி வியந்துகொண்டே இருந்தார்.

இரவு வந்தது வீட்டில் உள்ள கலயருடைய மனைவியாரும் பிள்ளைகளும் பசியால் வாடித் தூங்கிப் போயினர். அப்போது இறைவன் திருவருளால் வீட்டில்

நெல்லும் பொன்னும் ஆடையும் அணியும் நிரம்பின. கனவில் கலயருடைய மனைவியாருக்கு இறைவன் இச் செய்தியை அறிவித்துத் திருக்கோயிலில் இருந்த நாயனாருக்கும் அறிவித்தான். அந்த பெண்மணியார் எழுந்து பார்க்கையில் வீடு முழுவதும் பொருள்கள் நிரம்பியிருப்பதைக் கண்டார். உடனே திருவமுது சமைக்கத் தொடங்கினார். குங்கிலியக் கலயரும் ஆலயத்திலிருந்து வந்து தம் மனையில் இறைவன் திருவருளால் நிகழ்ந்தவற்றைக் கண்டு விம்மிதம் அடைந்து வாழ்த்தினர். பிறகு வழக்கம் போல் தம்முடைய திருத்தொண்டைக் குறைவின்றிச் செய்து கொண்டுவந்தார்.

திருப்பனந்தாள் என்னும் தலத்தில் செஞ்சடையப்பன் என்னும் திருநாமம் பூண்ட இறைவனுக்குப் பூசை புரிந்து வந்த ஆதி சைவர். ஒருநாள் வெளியூருக்குச் செல்ல வேண்டி இருந்தது. அவருக்கு ஆண் மகவு இன்மையால் தம் பெண்ணை நோக்கி, “நீ கோயிலுக்குச் சென்று பூசை செய்” என்று சொல்லிப் போனார். அவ்வாறே அவ்விளம் பெண் பூசைக்குரிய பண்டங்களைக் கொண்டு கோயில் சென்றாள். அபிடேகம் முதிலியவை செய்த பிறகு மாலையை அணிய எடுத்தாள். அப்போது இடையில் இருந்த ஆடை நழுவவே அதனை இரு முழங்கைகளாலும் இடுக்கிக் கொண்டாள். கையில் மாலை இருந்தது. மாலையைக் கீழே வைத்துவிட்டு உடையைக் கட்டிக் கொண்டு மீட்டும் மாலையை இறைவனுக்கு அணியவேண்டும். இவ்வளவு யோசனை அந்த குழந்தைக்குத் தோன்றவில்லை. ஆடையை இடுக்கியபடியே மாலையைப் போட முடியாமல் தவித்துப் போனாள். குழந்தையின் உணர்ச்சியைக் கண்ட இறைவன் வளைந்தான். உடனே குழந்தை மாலையைப் போட்டுவிட்டார். பூசையை முடித்துவிட்டு வீட்டுக்கு சென்றாள்.

மறுநாள் அவளுடைய தந்தையார் வந்து பார்த்தபோது சிவலிங்கம் சாய்ந்திருப்பதைக் கண்டார். குழந்தை சொன்னதைக் கேட்டு வியந்து, மீண்டும் சிவலிங்கப் பெருமானை நேரே நிமிர்த்திப் பார்த்தார்; முடியவில்லை. உறவினர்களின் உதவியைக் கொண்டு முயன்றார்; இயலவில்லை. பின்பு இந்தச் செய்தி எங்கும் பரவியது. சோழ மன்னன் வரையில் எட்டியது. அம் மன்னன் யானை, குதிரை முதலிய சேனைகளுடன் வந்து, சிவலிங்கத்தின் மேல் பட்டைச் சுற்றச் செய்து அதன்மேல் கயிற்றைக் கட்டி யானைகளைக் கொண்டு இழுக்க செய்தான்.

யார் இழுத்தாலும் அவர்கள் கையிளைத்து விழுந்தார்களேயன்றிச் சிவலிங்கம் நிமிரவில்லை. ஒவ்வொரு நாளும் இந்த முயற்சி நிகழ்ந்து கொண்டே இருந்தது. தமிழ்நாடு முழுவதும் இந்தச் செய்தி பரவியது. திருக்கடவூரில் இந்த குங்கிலியக் கலயருக்கும் இது தெரிந்தது. “பலரும் கயிற்றை இழுத்து இளைத்துப் போகிறார்கள் என்றால். நானும் அந்த இளைப்பில் பங்கு கொள்வேன்! என்று அவர் திருப்பனந்தாளுக்குச் சென்றார்.

அவர் இறைவன் திருமேனியில் ஒரு மணிக்கயிற்றைக் கட்டி அதை தம் கழுத்தில் கட்டிக் கொண்டு இழுக்க முயன்றார். மற்றவர்கள் கையால் இழுத்தார்கள். அவரோ கழுத்திலே கயிற்றைக் கட்டிக்கொண்டு இழுத்தார். மற்றவர்கள் கை வலி உண்டானால் நிறுத்தினார்கள். அவரோ கயிறு கழுத்தில் இறுகினால் உயிர்விட வேண்டிய நிலையில் தம்மை வைத்துக் கொண்டு இழுத்தார். சிவலிங்கம் நிமிராவிட்டால் தம் கழுத்து இறுகும். தம் உயிர் போகும் என்று அவர் அஞ்சவில்லை. இழுக்கத் தொடங்கினார்.

அவர் கயிற்றினால இழுத்தார்? தம்முடைய ஒருமைப்பாடுடைய அன்பினால் இழுத்தார். அத்தகைய அன்பருக்கு ஊறுபாடு வரும்படி இறைவன் விடுவானா? கலயனார் தம் கழுத்தில் கயிற்றைப் பூட்டி இழுக்கத் தொடங்கியதுதான் தாமதம். உடனே சிவலிங்கம் நிமிர்ந்துவிட்டது. குழந்தையின் அன்புக்காக வளைந்த பெருமான் குங்கிலியக் கலயநாயனார் அன்பு கண்டு நிமிர்ந்தார்.

அது கண்டு யாவரும் ஆரவாரம் செய்தனர். மன்னன் துயரம் நீங்கி நாயனாரைப் போற்றினான்.

தாடகை என்னும் ஆதி சைவப் பெண்ணுக்கு இறைவன் இரங்கிய இடமாதலின் அத்தலத்துக்குத் தாடகேச்சுரம் என்ற திருநாமம் உண்டாயிற்று.

அப்பால் இறைவனுக்குரிய குங்கிலியத் திருத்தொண்டை நெடுநாள் செய்துக் கொண்டு வாழ்ந்து. பின்பு இறைவன் திருவடி நீழலில் இணைந்து பேரின்ப வாழ்வு பெற்றார் குங்கிலியக் கலயர்.

## 5.13 **நாயன்மார்கள் வரலாறு –** பெருமிழலைக் குறும்ப நாயனார்

நாயன்மார் கதை – ஆசிரியர் வாகீச கலாநிதி கி.வா. ஜகந்நாதன்

சோழ நாட்டின் ஒரு பகுதி மிழலை நாடு. அதன் தலைநகர் மிழலை. அதைப் பெருமிழலை என்றும் வழங்குவர். தொண்டரும் சான்றோரும் நிறைந்த பகுதி அது. அந்தப் பழைய ஊரில் குறும்பனார் என்ற அடியார் வாழ்ந்து வந்தார். ஆண்டவனிடத்தில் இடையறாத அன்பும் அடியார்களுக்குடைய உறவில் ஆர்வமும் உடைய பெரியார் அவர்.

அடியவர்கள் வந்தால் அவர்களை எதிர்கொண்டு சென்று அழைத்து வந்து உபசாரம் செய்வார். அவர்களுக்கு இன்ன பொருள் வேண்டுமென்பதை அவர்கள் சொல்லு முன்பே குறிப்பினால் அறிந்து உதவுவார். வேண்டிய ஏவல்களைச் செய்வார்.

அடிக்கடி தொண்டர்கள் பலர் அவரை நாடிவருவார்கள். அவர்களுக்கு அறுசுவை உண்டி வழங்குவதோடு வேண்டிய பொருள்களையும் வழங்குவார். இறைவன் திருவருளே இறவாத பெருஞ்செல்வம் என்ற மெய்யுணர்வு வரப்பெற்றவராக விளங்கினார் அவர்.

திருத்தொண்டர்களிடத்தில் பேரன்பு உடையவராக இருந்த அவருக்கு பழந்தொண்டர்களைப் பாடி உலகுக்குத் திருத்தொண்டத் தொகை என்ற பதிகத்தை வழங்கிய சுந்தரமூர்த்தி சுவாமிகளிட்த்தில் அளவற்ற பக்தி உண்டாயிற்று எப்போதும் அப் பெருமானுடைய புகழைப் பேசியும் நினைந்தும் இன்புற்றார். அவரைச் சென்று தரிசனம் செய்து வந்து எப்போதும் அவரைத் தியானம் பண்னியபடியே இருந்தார். இறைவன் திருவருளைப் பெறச் சுந்தரமூர்த்தி சுவாமிகளிடம் பக்தி செய்தலே சிறந்த வழி என்ற உறுதியோடு வாழ்ந்தார். அந்த உபாசனையின் பலத்தால் அவருக்கு அட்டமா சித்திகளும் கைவந்தன. இறைவனுடைய திருவைந்தெழுத்தையே எல்லாமாக எண்ணித் தவம் புரிந்தார்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் அவ்வப்போது எவ்வெவ்விடத்தில் இருந்து என்ன என்ன செய்து வருகிறார் என்பதைப் பெருமிழலைக் குறும்ப நாயனார் உணர்ந்து கொண்டு வந்தார். சுந்தரர் திருவஞ்சைக் களம் சென்று அங்கிருந்தபடியே கைலாயம் செல்லப் போகிறார் என்பதையும் தம்முடைய உள்ளுணர்வால் அவர் அறிந்தார். “சுந்தரர் வாழாத மண்ணில் வாழ என் மனம் பொருந்தாது அப்பெருமான் திருக்கைலை சேர்வதற்கு முன் நான் யோக நெறியால் அங்கே செல்வேன்” என்ற எண்ணம் அவர்பால் மூண்டது.

யோகம் கைவரப் பெற்றவராதலின் பிரமரந்திரத்தின் வழியே கருத்தை செலுத்திக் கபால நடுவின்வழியே உயிர் இந்தச் சடலத்தை விட்டுப் பிரியும் வண்ணம் செய்து, திருக்கைலையை அடைந்தார். இறைவனுடைய பக்தியைக் காட்டிலும் அடியாரிடம் உள்ள பக்தி எய்தர்கரிய சித்திகளைப் பெறும்படி செய்யும் என்பதற்குப் பெருமிழலைக் குறும்ப நாயனார் வாழ்கை சிறந்த சான்றாகும்.

சித்திகள் கைவரப்பெற்றாலும் அவற்றால் தருக்குற்று உலகினரை மயக்கித் திரியாமல், இறைவனது பஞ்சாட்சரத்தையும் சுந்தரரது திருத்தாளையும் போற்றி வாழ்ந்தது அவருடைய பெருமையைக் காட்டும்.

## 5.14 நாயன்மார்கள் வரலாறு – குலச்சிறை நாயனார்

நாயன்மார் கதை – ஆசிரியர் வாகீச கலாநிதி கி.வா. ஜகந்நாதன்

அரசனுக்கு எத்தனை ஆற்றல் இருந்தாலும் அவனுக்கு துணையாக நல்ல அமைச்சர்கள் இருந்தால்தான் அரசாட்சி நன்கு நடைபெறும். சில சமயங்களில் அரசன் தக்கப்படி நடவாவிட்டால் அவனைத் திருத்தி நல்வழியில் செலுத்த வல்லவர்களாக அமைச்சர்கள் இருக்கவேண்டும். “அரசனே இப்படி இருக்கும்போது நமக்கு என்ன கவலை? என்று அஞ்சினாலும், அரசனுக்கு ஏற்றபடி இச்சகம் பேசினாலும் நாடு சீர்குலைந்துவிடும். அத்தகைய அமைச்சர்களை எண்ணியே, “ஊரைக் கொளுத்துகிற அரசனுக்கு ஊதிக் கொடுக்கிறவன் மந்திரி” என்ற பழமொழி உண்டாயிற்று.

பாண்டியன் நெடுமாறன் வழிவழி வந்த பாண்டிய மரபில் உதித்தாலும் அம் மரபுக்குரிய சைவ நெறியினின்றும் மாறி ஜைனனானான். சமய உணர்வு மிகுதியினால் இது சிறந்தது என்று சுருதி மாறவில்லை. ஜைனருடைய ஆரவாரத்திலும் பழக்கத்திலும் அவன் அறிவு திரும்பியது. அவன் ஜைன சமயத்தினனாகவே. ஜைன குருமார்கள் அவனைத் தம் வசப்படுத்தி அரசியலிலும் குறுக்கிட்த் தொடங்கினர்.

அப்போது அமைச்சர் தலைவராக இருந்தவர் குலச்சிறையார். அவர் பாண்டிய நாட்டில் உள்ள மணமேற்குடி என்ற ஊரில் பிறந்தவர். சிவபெருமான் அல்லும் பகலும் நினைந்து அன்பு செய்கிறவர். சிவனடியார்களைத் தெய்வம் என்று மதிப்பவர். எந்த சாதியினரானாலும் எந்த நிலையினரானாலும் திருநீறும் கண்டிகையும் புனைந்தவர்களானால் எதிர்கொண்டு வரவேற்று அவர் காலில் விழுவார். பணிந்து உபசரித்து விருந்து அளித்து அனுப்புவார். தம் இல்லக்கிழத்தியாரும் தம் அறத்துக்கு துணை நிற்க. இந்த தொண்டர் வழிபாட்டைச் சிறப்பாக செய்து வந்தார். அடியார் தனியே வந்தாலும் கூட்டமாக வந்தாலும் சிறிதும் தங்கு தடையின்றி உணவு அருத்தி உவகை அடைந்தார்.

அவருக்குப் பெருநம்பி என்ற ஒரு பட்டம் உண்டு. சுந்தரமூர்த்தி சுவாமிகள் பெருநம்பி குலச்சிறையார் என்று அவரைக் குறிக்கிறார். பழங்காலத்தில் சிறந்த அமைச்சர்களுக்குப் பெருநம்பி என்ற பட்டம் சோழர்களாலும் பாண்டியர்களாலும் அளிக்கப் பெறுவது வழக்கம். ஒட்டக்கூத்தர் தாம் இயற்றிய தக்கயாகப் பரணியில் குலச்சிறையார் பெருநம்பி என்னும் பட்டம் உடையவர் என்பதைக் குறித்திருக்கிறார்.

அரசன் ஜைன நெறியில் புகுந்த்தோடன்றி ஜைனர் சார்பில் ஒழுகிச் சைவர்களைப் புறக்கணிப்பதைக் குலச்சிறையார் அறிந்து மிக வருந்தினார். பாண்டியன் மனைவியாராகிய மங்கையர்க்கரசியார் சிவபக்தியிற் சிறந்தவர். அவரும் தம் கணவருடைய மாற்றம் கண்டு வருந்தி இறைவனிடம் அவர் திருந்த வேண்டுமென்று மனம் உருகி வேண்டினார்.

அக்காலத்தில் ஒரே குடும்பத்தில் வெவ்வேறு சமயத்தைச் சார்ந்தவர்கள் இருப்பதும் உண்டென்று தெரிய வருகிறது. குலச்சிறையார் மங்கையர்கரசியாருடைய பக்தி நிலையைத் தெரிந்து அவரைத் தெய்வமாகப் போற்றி வந்தார். திருஞான சம்பந்தப் பெருமான் மதுரைக்கு எழுந்தருளினால் ஜைனர்களுடைய் ஆரவாரம் அடங்குமென்று அரசியார் நினைத்தார். அவர் விருப்பம் நிறைவேறுவதற்கு உறுதுணையாக நின்றார் குலச்சிறையார். சம்பந்தப் பெருமானை வருவித்து வேண்டிய வழிபாடு ஆற்றி. ஜைனர்கள் வாதத்தில் தோல்வியுற. அவர்களுக்குரிய தண்டனையைப் பெறும்படி செய்தார் இந் நல்லமைச்சர்.

அரசன் பழையபடி சைவனாகி மரபுக்கு ஏற்ற செயல்களில் ஈடுபடும்படி செய்த பெருமையில் குலச்சிறையாருக்கு ஒரு பங்கு உண்டு.

## 5.15 நாயன்மார்கள் வரலாறு – அப்பாலும் அடிச்சார்ந்தார்

நாயன்மார் கதை – ஆசிரியர் வாகீச கலாநிதி கி.வா. ஜகந்நாதன்

சுந்தரமூர்த்தி நாயனார் திருத்தொண்டத் தொகையில் அறுபத்து மூன்று நாயன்மார்களைப் பாடினார். அவர்கள் யாவரும் தமிழ்நாட்டில் இருந்தவர்கள். இந்த அறுபத்து மூன்று பேர்களே சிவபெருமானை வழிபட்டுப் பேறு பெற்றவர்கள் என்று சொல்ல இயலாது. திருவருளால் பாடிய திருத்தொண்டத் தொகையில் அடங்காதவர்கள் பலர் உண்டு. அகத்தியர் தமிழ் நாட்டில் இருந்து வாழ்ந்தவர். அவர் பெரிய சிவபக்தர். அவரைத் தனியே சுந்தரமூர்த்தி நாயனார் பாடவில்லை. அந்த அந்தத் தலங்களில் இறைவனை வழிபட்டுப் பேறு பெற்றவர்கள் பலர் அவர்கள் யாரையும் எடுத்து போற்றவில்லை. சிவபக்தர்கள் அனைவரையும் ஒருவர் விடாமல் பாடவேண்டும் என்று ஆராய்ச்சி செய்து தேடித் தொகுத்துச் சொல்ல முடியவில்லை சுந்தரர். ஆதலின் திருத்தொண்டத் தொகையில் வாராமல் சுந்தரர் காலத்துக்கு முன்பு பல சிவபக்தர்கள் இருப்பது இயல்பே.

இந்தக் கருத்துச் சுந்தரருக்கே தோன்றியிருக்கிறது. தனியடியார்கள் அறுபத்து மூவரையும் தொகையடியார் ஒன்பதின்மரையும் பாடினார். தொகையடியார்களில் ஒரு வகையினரில் எல்லாச் சிவனடியார்களையும் அடக்கிவிட்டார். அப்பாலும் அடிச்சார்ந்தார் என்ற பெயரோடு திருத்தொண்டத் தொகையில் அடங்காத சிவனடியார் அனைவரையும் போற்றினார்.

“அப்பாலும் அடிச்சார்ந்தார் அடியார்க்கும் அடியேன்”

என்பது திருத்தொண்டத்தொகை. அதில் உள்ள “அப்பாலும்” என்ற சொல்லைச் சேக்கிழார் விரிந்துரைக்கிறார். மூவேந்தருடைய ஆட்சிக்கு உட்பட்ட தமிழ் நாட்டுக்கு அப்பால் வேறு மண்டலங்களில் சிவபிரான் அடியைச் சார்ந்தவர்கள் இந்த தொகையில் சேர்வார்கள். இது இடத்தினால் அப்பாற்பட்ட எல்லையில் இருப்பவர்களைக் குறித்தது. திருத்தொண்டத்தொகையில் குறிப்பிடப்பெறாமல் முன்பு வாழ்ந்தவர்களும் இந்த தொகையடியார் குழுவில் சேர்ந்தவர்களே. அவரோடு மட்டுமா? திருத்தொண்டத் தொகையில் சார்ந்தவர்களே. எல்லா இடத்தும் எல்லாக் காலத்தும் வாழ்ந்த சிவனடியார் யாராயினும் வேறு வகையால் கூறப்பெறாவிட்டால் அப்பாலும் அடிச்சார்ந்தார் என்னும் தொகையடியாருக்குள் அடங்கிடுவார்கள். மார்க்கண்டேயர் முதலியோர் இடத்தினால் அப்பாற்பட்டவர்கள். இவர்கள் யாருமே தொகையடியார்களைச் சேர்ந்தவர்கள். சேக்கிழார் கூறும் பாடல் வருமாறு.

மூவேந்தர் தமிழ்வழங்கும் நாட்டுக்கு அப்பால்
முதல்வனார் அடிச்சார்ந்த முறைமை யோரும்
நாவேய்ந்த திருத்தொண்டத் தொகையில் கூறும்
நற்றொண்டர் காலத்து முன்னும் பின்னும்
பூவேய்ந்த நெடுஞ்சடைமேல் அடம்பு தும்பை

புதியமதி நதியிதழி பொருந்த வைத்த
சேவேந்து வெல்கொடியான் அடிச்சார்ந் தாரும்
செப்பியஅப் பாலும்அடிச் சார்ந்தார் தாமே

மூவேந்தர்களின் ஆளுகைக்குட்பட்ட தமிழ் வழங்கும் நாடுகளுக்கு அப்பால், சிவபெருமானின் அடியைச் சார்ந்து முறைமை வழுவாது நிற்பவர்களும், நம்பியாரூரரின் தெய்வ நலம் பொருந்திய திருநாவால் அருளிச் செய்யப்பட்ட திருத்தொண்டத் தொகையின்கண் அவரால் போற்றி வழிபடப் பெற்ற தொண்டர்களான தனியடியார் களின் காலத்துக்கு முன்னும் அதன் பின்னும், மலர்கள் பொருந்திய நீண்ட சடையின் மேல் அடம்பு மலரும் தும்பை மலரும் கங்கையும் கொன்றையும் பொருந்தச் சூடியவரும், விடையைப் பொறித்த கொடியையுடையவருமான சிவபெருமானின் அடியைச் சார்ந்தவர் களும், சொல்லப்பட்ட அப்பாலும் அடிச் சார்ந்தார் எனக் கூறப் பெற்றவர் ஆவர்.

முற்றும்




மெய்கண்டார்
அருணந்தி சிவம்
மறைஞான சம்பந்தர்
உமாபதி சிவம்

குங்குலியக் கலய நாயனார்
